# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

முதலாம் பதிப்பு
விலை: 30
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 239 ஆடி 07ஆம் நாள் திங்கட்கிழமை 23 ஜூலை 2018 வள்ளுவர் ஆண்டு 2049


# பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து இந்தியாவுக்கு உடனே வானூர்திச் சேவை

## படிப்படியாக பிராந்திய வானூர்தி நிலையமாக்கப்படும்

## நேற்றைய உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 23

பலாலி வானூர்தி நிலையத்திலிருந்து இந்தியாவுக்கு உடனடியாக வானூர்திச் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது. வானூர்தி நிலையம் தற்போதுள்ள நிலையிலிருந்தே இந்தச் சேவை தொடங்கப்படவுள்ளது. வானூர்திச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், பிராந்திய வானூர்தி நிலையமாக பலாலியை தரமுயர்த்தும் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்படும். இந்தப் பணிகளுக்காக மேலதிக காணிகள் எவையும் சுவீகரிக்கப்படாது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையிலான முத்தரப்புச் சந்திப்பில் மேற்படி முடிவு நேற்று எட்டப்பட்டுள்ளது.

பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். இந்திய நிதி உதவியில் ஆரம்பிக்கப்படும் நோயாளர் காவு »» 06

## எமது உரிமைக்கான குரல்கள் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கும்

### முதலமைச்சர் விக்கி முழக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

நாங்களும் இந்த நாட்டின் இறைமையுள்ள குடிமக்களாக எமது பிரதேசங்களில் எம்மை நாமே ஆளக்கூடிய முறையில் வாழ வழியிடப்பட வேண்டும் எனக் கோரினால் நாங்கள் பிரிவினை கோருகின்றோம் என்று ஒப்பாரி வைக்கின்றார்கள். தொடர்ச்சியான இவர்களின் அழுத்தங்கள் ஒருநாள் ஓய் »» 25

## தமிழர் வாழ்வில் குருதித்துயர் படிந்த கறுப்பு ஜூலை இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கைத் தமிழர் வாழ்வைப் புரட்டிப் போட்ட, மறக்கவோ - மன்னிக்கவோ முடியாத கொடுந்துயர் நாள் இன்றாகும். வரலாற்றில் 'ஆடிக் கலவரமாக' அடையாளப் படுத்தப்பட்ட கறுப்பு நாள் இன்றாகும். 35 ஆண்டுகளுக்கு முன்னர் சிங்களப் பேரினவாதிகள் ஆடிய கோரத் தாண்டவத்தில் சிக்குண்டு தமிழினம் சின்னாபின்னமாகிய நாள் இன்று.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் திருநெல்வேலியில் சிங்கள இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகளால் அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. 13 இராணுவத்தினர் உயிரிழந்தனர். அவர்களது உடல்கள் தென்பகுதியில் அடக்கம் செய்யப்படும்போது, அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் கலவரம் தூண்டி விடப்பட்டது.

தென்பகுதியில் வாழ்ந்த தமிழ் »» 06

## யாழ்ப்பாணத்தில் தாராளமாக பணம் புழங்குகின்றதாம்

### இப்படிச் சொல்கிறார் ரணில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கையில் யாழ்ப்பாணத்து வங்கிகளில்தான் பணம் அதிகளவில் காணப்படுகின்றது. யாழ்ப்பாண மக்களின் பணம், அவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து வருகின்ற பணம் எல்லாம் வங்கிகளில் வைப்பிலிருக்கின்றது. »» 06

## முல்லைத்தீவில் இராணுவம் மீது நேற்றுத் தாக்குதல்

»» 25

## செம்மணி புதைகுழி விவகாரம் பொலிஸார் ஒத்துழைப்பில்லை

### அகழ்வுப் பணிகள் தாமதம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

செம்மணியில் எலும்புக் கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிரதேசத்தில் பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி நேற்றுப் பிரசன்னமானார். பொலிஸ் குற்றத்தடுப்புப்பிரிவின்பொறுப்பதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தரவில்லை. மேலதிக »» 24




## திடீரென மயங்கிய 3பேர் உயிரிழப்பு

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்தில் வெவ்வேறு சம்பவங் »» 06

## குழந்தை பிரசவித்த இளம்தாய் சாவு

### காரைநகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை »» 06

## ஆசிரியர் யார்? மாணவர் யார்? கண்டறிவதே பெரும் சிக்கல்

### வடக்கு முதல்வர் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 23

வீதியில் ஒரு ஆசிரியர் செல்லும் போது அவரின் உடையலங்காரத்திலிருந்து ஒரு ஆசிரியர் என்பதனை முன்பு இலகுவில் அடையாளம் காணமுடியுமாக இருந்தது. ஆனால் இன்று நிலைமை அவ்வாறில்லை. ஆசி »» 06



## நாடு அபிவிருத்தி அடையும்போது ராணுவத்தின் தேவை வீழ்ச்சியுறும்

### ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஒரு நாடு அபிவிருத்தி அடைய அடைய இராணுவத்தின் தேவையும் வீழ்ச்சியடையும். அதை நாங்கள் மூடி மறைத்துச் செய்யப் போவதில்லை. வெளிப்படையாகக் கூறியே செய்வோம். தெற்கில் சிலருக்கு பிரபாகரனுக்கு உயிரூட்டவேண்டிய தேவை இருக்கின்றது. இனவாதத்துக்கும் »» 04



## களவாகக் கடலட்டை பிடித்தவர்களை மடக்கியவரின் படகு எரியூட்டப்பட்டது

### கண்ணுக்கெட்டிய தூரத்தில் கடற்படை முகாம் இருக்கத்தக்கதாகச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவு எல்லைக்கு உட்பட்ட கட்டைக்காட்டு கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகு, படகு இயந்திரம், வலைகள் என்பன எரிந்து சாம்பராகியுள்ளது. இவற்றின் பெறுமதி சுமார் 5 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் »» 24





## வெடிபொருள் கண்டெடுப்பு

கிளிநொச்சி.ஜூலை 23
கிளிநொச்சி மருதநகரில் தனியார் காணி ஒன்றிலிருந்து வெடிக்காத நிலையில் காணப்பட்ட வெடிபொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கிளிநொச்சி மருதநகர் 5 அடிவான் பகுதியில் உள்ள தனியார் காணி துப்புரவுசெய்யும் பணி நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போதே இந்த வெடிபொருள் காணிஉரிமையாளரால்அடையாளம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவுசெய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பாக உரிய தரப்பினருக்குத்தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் வெடிபொருளை அகற்றுவதற்கான நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதுஎன்று பொலிஸார் தெரிவித்தனர். (ரி4,6)

# படை முகாம்களை ஐ.தே.க.அகற்றாது

### நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு



நுவரெலியா, ஜூலை 23
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள எந்தவொரு இராணுவ முகாம்களை அகற்றுவதற்குஐக்கியதேசியக் கட்சி நடவடிக்கை எடுக்காது.

இவ்வாறு அந்தக் கட்சியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பெருந்தோட்டத்துறைஅமைச்சருமானநவீன்திஸாநாயக்கதெரிவித்தார். ஹற்றன், கினிகத்தேனையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்புக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மீண்டும்புலிகள்தலைதூக்கச்சந்தர்ப்பம் அளிக்கப்போவதில்லை ஆனால் இன்று வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றஐ.தே.க. முனைவதாகப் பொய் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எமது கட்சி ஒருபோதும் ஆணையிரவைவிட்டுக்கொடுக்கவில்லை. சந்திரிக்காவின்ஆட்சியிலேயேஆணையிரவு விட்டுக்கொடுக்கப்பட்டது.

தற்போது மத்திய வங்கியில் ஒரு சில பிரச்சினைகள்ஏற்பட்டுள்ளன. இவ்வாறான பிரச்சினைகள் ராஜபக்ச காலத்தில் ஏற்பட்டிருந்தால் அது மூடி மறைக்கப்பட்டிருக்கும். தற்போதைய அரச தலைவர் அது தொடர்பில் சிறப்பு ஆணைக் குழுவை அமைத்து விசாரணை நடத்தி வருகின்றார்.

தற்போதுமுன்பைபோன்றுவெள்ளை வான் கடத்தல்கள் இல்லை. லசந்த விக்ரமதுங்கபோன்றோர்முன்னைய ஆட்சியில் கொலை செய்யப்பட்டனர், எக்னேலிகொடபோன்றஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

எமது ஆட்சியில் எந்தவொரு ஊடகவியலாளரும் அச்சுறுத்தப்படுவது இல்லை-என்றார். (ரி4)



இந்தியத் தூதுவர் தரண்ஜித்சிங் சந்து நேற்று நல்லூர்க் கந்தன் ஆலயம் சென்று வழிபட்டார், அவருடன் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் மற்றும் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சீலர் பாலச்சந்திரன் ஆகியோரும் வழிபாட்டில் ஈடுபட்டனர். (ரி4,105)

## விபத்தில் மூவர் காயம்



கொழும்பு. ஜூலை 23
நிலாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முச்சக்கர வண்டியொன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று ஆத்திமோட்டையில் இடம்பெற்றது.

விபத்தின்போது முச்சக்கர வண்டி சேதமடைந்ததுள்ளதுடன், மின் கம்பமும் முறிந்துள்ளது. அதிக வேகமே இந்த விபத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி4)

# தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க நேற்று யாழில் கலந்து கொண்ட நிகழ்வுகள்

### சுயதொழில் முயற்சியாளர்களுக்கான வாழ்வாதார உதவிகள்









### தொண்டர் ஆசிரியர் நியமனம்











### வட்டி சலுகைக் கடன் திட்டம் வழங்கும் நிகழ்வு




### கடனுதவித் திட்டம் ஆரம்பிக்கும் நிகழ்வு



# அதிகாரங்கள் இல்லாததால் கூட்டுறவு வளர்ச்சி பாதிப்பு

## அனந்தி சசிதரன் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம்,ஜூலை 23**

**வடக்குமாகாணத்தின்கூட்டுறவுவளர்ச்சிக்குஅரசு தரும் உதவி களும், அதிகாரங்களும் போதாது என்றுவடக்குமாகாணமகளீர்விவகாரங்கள்கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.**

வடக்கு மாகாண பனை எழுச்சி வாரத்தைமுன்னிட்டுகண்காட்சியும் விற்பனையும் நிகழ்வு நல்லூர் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நேற்று ஆரம்பமானது.

அதில் முதன்மை விருந்தி னராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதேஅவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்குமாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்திக்குஅமைச்சுசெய்யும்உதவிகள்போதாது. ஒருகையால்தந்துமறு கையால் அதனைப் பிடுங்குவது போல உள்ளது. தமது வாக்கு வங்கிகளை நிரப்புவதற்கு தேசிய கட்சிகள் இங்கேநாடகம் ஆடுகின்றது. இங்கே ஒரு நிகழ்வு கூட்டறவுக்காக நடைபெறும் போது இதே தினத்தில் அரசின் கடன்களை தீர்ப்பது தொடர்பான நிகழ்வுஅரங்கேரிக்கொண்டுஇருக்கிறது. எமக்குஉரியவற்றைக்கொழும்பு அரசுபறிக்கநாம்இடமளிக்கக்கூடாது.

நோயாளர் காவு வண்டி சேவை நேற்று முன்தினம் வடக்கில் இந்திய அரசின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது.

அதில் இணையவாயிலாக உரையாற்றியஇந்தியத்தலைமைஅமைச்சர் நரேந்திர மோடி கூறுகின்றார் இங்கு நடந்த துன்பங்களை மறந்து நாம் வாழ வேண்டும்என்று. இங்கு நடந்தவை எமக்கு தானே தெரியும் எத்தனை இழப்புகள் என்று.


போர் நிறைவடைந்து 9 வருடங்கள் நிறைவடைந்துள்ளநிலையிலும்கூட்டறவுச் சங்கங்கள் பெரிய கடனில் இருந்து மீள முடியாமல் உள் ளது. அதற்கு அரசு என்ன செய்தது? நாடாளுமன்றஉறுப்பினர்கள்என்னசெய்தார்கள்? தமது வாக்கு வங்கிகளை நிரப்புவதற்கே முயற்சி செய்கின்றார்கள். அந்தநோயாளர்வண்டிச்சேவையில் ஈடுபடுவர்களை விசாரித்தேன். அவர்களின்பேச்சில்இருந்துதெரிகின்றது அரசியல் பிரமுகர்களின் செல்வாக்கில் இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்று. இங்கு எவ்வளவு சுகாதார தொழிலாளர்கள் வேலை இன்றி நிரந்தர நியமனமின்றிஇருக்கின்றார்கள். அதைக்கூட எமது அரசால் கண்டுகொள்ள முடியவில்லை.

சமூக சேவை திணைக்களம், மறுவாழ்வு அமைச்சு என்றுபலஉள்ளன. ஆனால் இவை சார்ந்த வேலைகளைக் கூட அதற்கு பொருத்தமான நிறுவனங்கள் ஊடாகச் செல்லாமல் கொழும்பு அரசு தாமே செய்கின்றது. இந்த நிலையில் எமக்கு அதிகாரம் எங்கு உள்ளது என்பதை யோசித்து பாருங்கள். இங்கே இனத்தைஅளித்த இராணவத்தைநல்லவர்களாகக்கர்ட்டும்செயற்பாடுகளிலும், அரசியல்பிரதிநிதிகள் தமக்கு சார்பானவர்களுக்கு நியமனம்வழங்குவதையும்காணமுடிகின்றது.

எமது மக்களுக்கு வாழ்வாதாரங்கள் முழுமையாக வழங்க வேண்டும். எமதுஉரிமைகள்எமக்குவேண்டும். நாம்ஒன்றும்புதிதாகக்கேட்கவில்லை - என்றார்.

நிகழ்வில்பனைசார்தஎண்ணக்கருக்கள் அடங்கிய "தாலம் " என்ற நூல் வெளியிடப்பட்டது. மாகாணகூட்டுறவு ஆணையாளர்பொ.வாகீசன்நூலை வெளியீட்டு வைக்க மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன் முதலாவதுபிரதியைபெற்றுக்கொண்டார். கூட்டுறவு சங்க பிரதி நிதிகள், பனை அபிவிருத்திச் சபையின் அதிகாரிகள், பனை தென்னை கூட்டுறவுச் சங்க அதிகாரிகள், நலன்விரும்பிகள்எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். இதில் வடக்கு மாகாணத்தில் உள்ள பனை சார் கூட்டறவுச் சங்கங்களின் உற்பத்திப்பொருள்கள்காட்சிப்படுத்தப்பட்டன. 28ஆம் திகதி வரை இந்தக் கண்காட்சியும் விற்பனை யும் நடைபெறவுள்ளது. மாலை நேரத்தில் பல்வேறு கலை கலாசார நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ரி4,7)





# கடனுதவித் திட்டத்தை ஆரம்பித்தார் ரணில்

யாழ்ப்பாணம் ஜீலை 23

யாழ் மாவட்டத்தில் சுயதொழில் மேற்கொள்கின்ற சுயதொழில் முயற்சியாளர்களுக்கான கடனுதவித் திட்டம் ஆரம்பிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கியில் நேற்று நடைபெற்றது.

இந்தக்கடனுதவித்திட்டத்தைத்தலைமைஅமைச்சர்ரணில் விக்கிரமசிங்க தொடக்கிவைத்தார்.

நிகழ்வில்கலந்துகொண்டசுயதொழில்முயற்சியாளர்களுக்கு காசோலைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில்அமைச்சர்களானமங்களசமரவீர, அகிலாவிராஷ் காரியவசம், இராஜங்க அமைச்சர்கள், மக்கள் வங்கி உத்தியோகத்தர்கள், கடனுதவிபெறுபவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ரி4,114)

# கடனட்டையைத் திருடிய இராணுவச் சிப்பாய் கைது

வவுனியா, ஜூலை 23

இராணுவ சிப்பாய் ஒருவர் சக சிப்பாயின் கடனட்டையைத் திருடி பிரபல வங்கியின் தன்னியக்க இயந்திரத்திலிருந்து பணத்தை எடுத்தார் என்ற குற்ற சாட்டில்வவுனியாகுற்றதடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இந்தச்சம்பவம் வவுனியாவில்நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. தன்னியக்க இயந்திரத்துக்கு வெளியில் நின்ற இராணுவச் சிப்பாய் வேறு நபர்களிடம் கடன் அடையைக் கொடுத்துப்பணத்தைஎடுத்துத்தரக் கோரியுள்ளார். வங்கியின் காவலாளிகள் சிப்பாயின் நடவடிக்கையில்சந்தேகமடைந்துவிசாரித்துள்ளனர். இதன்போது சிப்பாய் தப்பி ஓடியுள்ளார். சம்பவ இடத்தில் நின்ற பிரதேசசபை உறுப்பினர் ஒருவரால்மடக்கிப்பிடிக்கப்பட்ட இராணுவ சிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 85 ஆயிரம் ரூபா பணம் மீட்கப்பட்டது.

மேலதிகவிசாரணைகளை வவுனியாப் பொலி ஸார் மேற்கொண்டனர். (ரி4,110)

# தொழில்நுட்பக் கழகங்களின் ஒன்றிய ஆரம்ப நிகழ்வு

வவுனியா, ஜூலை 23

வடக்கு கிழக்கு மாகாணங்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கழகங்களின் ஒன்றிய ஆரம்ப நிகழ்வு வவுனியா பிரின்ஸஸ் ரோஸ் விடுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

ஒன்றியத்தின் தலைவராக எக்ஸ்ரீம் எஸ்ஈஓ இன்ரநெட் சொலுஷன் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சரண்யன் சர்மா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒன்றியத்தின் வவுனியா பிராந்திய தலைவராக வவுனியா பொன்வீடியோ நிறுவன பணிப்பாளர் பொன் சுபாஸ்சிங்கம், யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பிராந்தியதலைவராககிருத்திகா கோகுலன், அம்பாறை பிராந்திய தலைவராக இம்ரான், மட்டக்களப்புபிராந்தியதலைவராக ரஜீவ், திருகோணமலை பிராந்திய தலைவராக கெலும் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தகவல்தொழில்நுட்பத்தைமூலதனமாகக் கொண்டு செயற்படுகின்ற மென்பொருள் மற்றும் வன்பொருள் வணிகத்துறை நிறுவனங்கள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள், புகைப்ப டத்துறை, சினிமாத்துறை, அச்சு மற்றும்இணையதுறைசார்ந்த நிறுவனங்களும், இந்தத்துறைகளைச் சேர்ந்த தனிநபர்களும் வடக்குகிழக்குப்பிரதேசதகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கழகங்களின் ஒன்றியத்தின் உறுப்பினர்களாக இணைந்து கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்களால்தெரிவிக்கப்பட்டது.

"எக்ஸ்ரீம் எஸ்ஈஓ இன்ரநெட் சொலுஷன்" நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வவுனியா மேலதிக மாவட்டச்செயலர் திரேஸ்குமார், வவுனியா நகரசபைத் தலைவர் இ.கௌதமன், ஸ்லாஸ்கொம் நிறைவேற்றுப் பணிப்பாளர்கிறிஷாந்த், ஐசிரிஏ திட்டப்பணிப்பாளர் அகமட் மற்றும் தகவல் மற்றும் தொழில் நுட்பநிறுவனங்களைச்சேர்ந்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ரி4,110)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
மு/ உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவி
செல்வி ஜெயராசா சிவகி உயரம் பாய்தலில் தங்கம் வென்றார்



வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 14 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில்
1.29m உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தேசிய போட்டிக்கு தகுதி பெற்ற
Best Wishes
செல்வி
ஜெயராசர் சிவகி
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் பயிற்சிகளை வழங்கி வழிப்படுத்திய
உடற்கல்வி ஆசிரியர்களான
திரு.ஆ.ரூபவர்ணன்,
திருமதி சு.திவாகரதாசன் மற்றும்
பாடசாலை அதிபர் வி.சிறிகரன்
ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(CS/18416)(11)
வாழ்த்துவோர்:- வே.கந்தையா (பேரன்), தயா குடும்பம் ( சித்தி ),
துவாரகன், சீராளன் (சகோதரர்கள்),
திரு.திருமதி ஜெயராசா - ரஞ்சி ஆசிரியர் (பெற்றோர்)
இருட்டுமடு,
உடையார்கட்டு.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதிச் சபாநாயகருமான மறைந்த மு. சிவசிதம்பரத்தின் 95 ஆவது பிறந்த நாள் நினைவு கடந்த வெள்ளிக்கிழமை தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாச்சிமார் கோவிலடி தலைமைக் காரியாலத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

## பூஞ்சணம் பிடித்த பலகாரம் விற்ற கடை உரிமையாளருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம்.ஜூலை 23

பூஞ்சணம் பிடித்த பயிற்றம் பலகாரத்தை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கடை முகாமையாளருக்கு எதிராக நீதிவான் ரூபா 4 ஆயிரம்அபராதம்விதித்துள்ளார்.

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கத்தால் நடத்தப்படும் காங்கேசன்துறை வீதியிலுள்ள தேநீர்ச் சாலையில் விற்பனைக்கு வைத்திருந்த 40 பலகாரத்தை வாங்கிச் சென்ற சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த உதவி உத்தியோகத்தர் ஒருவர் பலகாரத்தைச் சாப்பிட முற்பட்டபோது பலகாரத்துக்குள் பூஞ்சணம் பிடித்திருந்தமையை அவதானித்துள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகரசபை சுகாதாரப் பிரிவினருக்கும் அறிவித்தமையைத் தொடர்ந்து விசாரிப்பதற்காக அங்கு சென்ற பொது சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்ஜீவன் பழுதடைந்த பலகாரத்தை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஒப்படைத்ததுடன் கடை முகாமையாளருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு கடந்த வாரம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முகாமையாளர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து நீதிவான் இவருக்கு ரூபா 4ஆயிரம் அபராதம் விதித்துள்ளார். (115)

## நாடு...

அவர்கள் உயிரூட்டுகின்றனர். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நியமனம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

**தகுதியானவர்கள் உள்ளீர்ப்பு**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வர வாய்ப்புக் கிடைத்தமைக்கு பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். ஆறுமுகம் நாவலரின் செயற்பாடே இவற்றுக்கு முன்னுதாரணம். அவரின் காலத்துக்குப் பின்னரே இந்துக் கல்லூரிகள் வளர்ச்சியடைந்தன. இந்துக் கல்லூரிகளைப் பின்பற்றியே தென்பகுதிகளில் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை அத்தனையும் ஒரு தொடர்புபட்ட விடயமாகும். போரின் பின்னரான காலத்தில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்தது. நாம் அறிவித்திருந்த தகுதிகள் உடையவர்கள் இருக்கவில்லை. தற்போது தகுதியான அனைவரையும் உள்வாங்கும் முகமாக நாங்கள் இந்தச் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

680 தொண்டர் ஆசிரியர்களுக்கு நாங்கள் நிரந்தர நியமனங்களை வழங்கியுள்ளோம். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஒவ்வொரு கிழமையும் இனி இது தொடர்பில் எனக்கு நினைவூட்டமாட்டார் என்று நினைக்கின்றேன்.

**கல்வியின் சீரழிவு**

போருக்கு முன்னர் சிறந்த ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் தான் இருந்தார்கள். போரால் அனைத்தும் சீரழிந்து போய்விட்டது. அதை நாங்கள் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். அதற்குப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தேவை. ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்க கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நடவடிக்கை எடுப்பார். ஓய்வு பெற்று வெளிநாடுகளில் உள்ளவர்களைக் கொண்டுவந்து இவ்வாறான பயிற்சிகளை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகின்றோம்.

நாம் பாடசாலையில் கற்றபோது போட்டி இருந்தது. க.பொ.த உயர்தரம், க.பொ.த சாதரண தரப் பெறுபேறுக்ள் வெளியாகும்போது யாழ்ப்பாணப் பாடசாலையா? அல்லது எமது பாடசாலையா (கொழும்பு) சிறந்த பெறுபேறுகளைப் பெறும் என்ற போட்டித் தன்மை இருந்தது. ஒக்ஸ்வேர்ட் பல்கலைக் கழகத்துக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து தேர்ச்சி பெற்றிருந்தனர். அவர்களின் அதிகமானவர்கள் ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள். அதில் குறிப்பித்தக்கவர் சுந்தரலிங்கம்.

**சிறந்த கல்விச்சேவை**

அதேபோன்ற சிறந்த கல்விச் சேவையை நாம் வழங்க வேண்டும். சிறந்த ஆசிரியர்கள் இருக்கும் பட்சத்தில் நாம் அப்படியான கல்வி வளத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இது போன்ற மேலதிகமான ஆசிரியர்களையும் சேர்த்துக் கொள்ளப் போகின்றோம். விளையாட்டுத் துறை, நடனத்துறை என்பவற்றையும் மேம் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். நாங்கள் பட்டதாரி ஆசிரியர்களையும் அண்மையில் உள்வாங்கியுள்ளோம். நாம் முடிந்த அளவு ஏனைய மாகாணங்களுக்கும் தமிழ் மொழி ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள முயற்சிக்கின்றோம்.

**குழப்பக்கூடாது**

நாம் ஒன்றித்து இருக்க வேண்டும். அனை வரும் ஒன்றித்துப் பயணிக்க வேண்டும். அதைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது. யாழ்ப்பாணப் படையினர் தொடர்பில் சில சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றன. அது எந்த இராணுவத்திலும் நடைபெறக் கூடிய ஒன்று. அதன்போது சில கட்டளைத் தளபதிகளுக்கு நிர்வாகக் கடமைகள் வழங்கப்படும்.

இது இலங்கையில் ஒரு பகுதி. நாங்கள் ஒன்று சேரும்போது இவை இயல்பாகவே நடை பெறும். இங்கு பயங்கரவாதம் இருந்தது. தென்பகுதியிலும் இருந்தது. படிப்படியாகப் பயங்கரவாதம் இல்லாதுபோகும்போது படைச்சீராக்க நிலமைகள் இயல்பாகவே நடைபெறும் - என்றார்.

**நிகழ்வு**

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், அமைச்சர் மங்கள சமரவீர, பிரதி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சோனாதிராஜா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோருடன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர் களின் வாத்திய இசையுடன் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டனர். யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் நிகழ்வு ஆரம்பமானது.

தொண்டர் ஆசிரியர்கள் 457 பேருக்கு நேற்று நியமனங்கள் வழங்கப்பட்டன. 676 தொண்டர் ஆசிரியர்கள் நியமனத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 176 பேருக்கு கொழும்பில் ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. மிகுதி 494 பேரில் தகைமைகளை நிறைவு செய்தவர்களுக்கே நியமனாங் கள் வழங்கப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட 5 பேருக்கு நியமனங்களை வழங்கி தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க நியமனம் வழங்கலை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் ஆகியோர் வழங்கினர். (ற-5,114)

## கட்டடத்தை விரைவில் அமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜூலை 23

நல்லிணக்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்ப்பாணம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்துக்கு 45 மில்லியன் ரூபா செலவில் இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப் படவுள்ளது.

புதிதாக அமையவுள்ள கட்டடத்தைவிரைந்து அமைத்து தருமாறு வடமாகாண கல்வி அமைச்சின் செயலர் சி.சத்தியசீலனை வடமாகாண சபை உறுப்பினர் சபா.குகதாஸ் கோரியுள்ளார். (50)

## கடன் வலுவைக் குறைக்க கடனெல்லை இனி 30 வீதம்

### நிதி அமைச்சர் வரையறை

முல்லைத்தீவு, ஜூலை 23

எதிர்காலத்தில் கடன் பெறுகின்றவர்களின் கடன் வலுவைக் குறைப்பதோடு கடன் உச்சக்கட்ட எல்லையை முப்பது சதவீதமாக மட்டுப்படுத்த அமைச்சரவையில் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளேன் என்று நிதிஅமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

முல்லைத்தீவுக்கு நேற்று முன்தினம் சென்ற மங்கள குழுவினர் அங்கு பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றினார். அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வறுமை நிலையில் இருக்கின்ற மக்களுக்குச்சமூர்த்தி திட்டத்தைச் சிறந்தமுறையில் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

மறுவாழ்வளிக்கப்பட்ட இளையோருக்கு சிறப்பு வேலைத்திட்டத்தில் வழங்குகின்ற சம்பளத்தில் 50 வீதம் சேமலாபத் திட்டத்தை அரசு மேற்கொள்ளவுள்ளது. இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களை ஒற்றுமைப்படுத்தி கூட்டுறவு உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளோம். முல்லைத்தீவு விவசாய அமைப்பு ஒட்டுசுட்டான் கால்நடை அமைப்பு ஆகியவற்றுக்கு இதுவரை 36 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளோம்.

நந்திக்கடலைச் சூழவுள்ள இரண்டு பாலங்களைச் சீரமைக்கநிதிஒதுக்கியுள்ளோம். இந்த மக்களின் பல பிரதேசங்கள் வனஜீவராசிகள் திணைக்களத்தால் அரசிதழ் மூலமாக அறிவிக்கப்பட்டது. அவர்களுடன் பேசி விரைவில் மக்கள் காணிகளை விடுவித்துத் தருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளோம். முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களும் ஏனைய மக்களும் சுழற்சி முறையில் சிறிய கடன்களைப் பெற்று அவற்றைச் செலுத்தமுடியாமல் இருக்கின்றார்கள்என்றுஅறிவோம். நீங்கள் வட்டிக்கு செலுத்துபவர்களின் கையாள்களாக மாறியுள்ளீர்கள். கடன் தொகையைச் செலுத்தமுடியாமால் தற்கொலை செய்யும் நிலையையும் நாங்கள் காண்கின்றோம் - என்றார். (ரி3)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை 23

மானிப்பாய் மேற்கு, கட்டுடை மகா சனசமூக நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த ஆண்டுக்கான புதிய தலைவர் மே.பிரான்சிஸ், உபதலைவர் எஸ்.அருள், செயலர் கே.ரூவேந்திரன், உப செயலர் டி.ஜெயக்குமார், பொருளாளர் எஸ்.ஸ்ரீபன்ராஜ் ஆகியோருடன் செயற்குழு உறுப்பினர்களாக என்.நவநீதன், எம்.வரதன், எம். நியூட்டன், கே.பிரதீஸ், எம்.நேசரூபன், எஸ்.ஞானசீலன், டி.தேவகுமார், பி.தினேஸ், எஸ்.யசோதரன், எ.விக்னா ஆகியோருடன் போசகராக எம்.பரமானந்தகுமாரும் தெரிவுசெய்யப்பட்டனர்.(147)

## வாகனங்கள் செல்வதற்கு தடை

சாவகச்சேரி, ஜூலை 23

தென்மராட்சிப் பிரதேச வளாகப் பகுதிக்குள் வாகனங்கள் கொண்டு செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டு வளாகத்துக்கு வெளியே பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலக வளாகப் பகுதி விளைநிலமாக மாற்றப்பட்டதையடுத்து மரக்கறிப் பயிர்களும் மூலிகை செடி வகைகளும் நடப்பட்டுள்ளன. (9)

## மறைந்த மருத்துவரின் கனவை நினைவாக்க மருத்துவமனை வளாகத்தில் மரக்கன்றுகள்

சாவகச்சேரி, ஜூலை 23

நோயாளிக்கு மருந்து மட்டுமல்ல இயற்கைக் காட்சிகளும் நோயைக் குணப்படுத்தும் என்ற செயற்திட்டத்துடன் மருத்துவமனை வளாகத்தை பூந்தோட்டமாக மாற்றும் மறைந்த மருத்துவர் ச.அம்பிகைபாகனின் கனவை சாவகச்சேரி நகரில் உள்ள 3 வர்த்தகர்கள் செயற்படுத்தி அவர் விட்டுச் சென்ற பணியை ஆரம்பித்துள்ளனர்.

போர்க் காலத்தில் முழுமையாக சாவகச்சேரி மருத்துவமனை பௌதீக வளங்கள் அனைத்தும் அழிவடைந்திருந்தன.

மக்கள் மீள்குடிய மர்ந்த பின்னர் மருத்துவமனையின் தேவை கருதி சுகாதார திணைக்களத்தி னால் மருத்துவமனையில் எஞ்சியிருந்த கட்டடத்தில் வெளி நோயாளர் பிரிவை இயக்குவதற்காகப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட மருத்துவர் ச.அம்பிகைபா கன் மருத்துவப் பணியுடன் அழிவடைந்து காணப்பட்ட பகுதிகளை புதுப்பிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் வளாகம் முழுவதும் பயன்தரு மரக்கன்றுகளை நாட்டி அவற்றில் கிடைத்த பயன்களை நோயாளர்களுக்கு வழங்கி வந்தார்.

பின்னர் ச.அம்பிகைபாகனின் மறைவை முன்னிட்டு வளாகத்துக்கு முன்பகுதியில்திருவுருவச்சிலைதிறந்து வைக்கப்பட்டது.

மறைந்த இவரின் முயற்சியை மீண்டும் மேற்கொள்ள சாவகச்சேரி நகரசபையின் உறுப்பினர் க. கஜிதன் மருத்துவமனைப் பொறுப்பதிகாரியின் அனுமதியுடன் அப் பகுதியிலுள்ள 3 வர்த்தகர்களை அணுகி இந்த மர நடுகைத் திட்டத்துக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அதனையடுத்து சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள மூன்று வர்த்தக நிறுவனங்களும் ஒவ்வொரு பகுதியையும் பொறுப்பெடுத்து பூமரக்கன்று களை நட்டதுடன் நீர்பாய்ச்சி புற்களை வளரச் செய்தும் வருகின்றனர். (9)

## நுளம்பு பெருகும் சூழல் 5 பேருக்கு வழக்கு

தென்மராட்சி, ஜூலை 23

மிருசுவில், தவசிகுளம் பகுதியில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலையில் நீர்நிலைகளை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் குடியிருப்பாளர்கள் 5 பேருக்கு எதிராகச் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

மிருசுவில், தவசிகுளம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை எழுதுமட்டுவாழ் பொது சுகாதார பரிசோதகர் சூ.குணசாந்தன் தலைமையிலான டெங்கு பரிசோதனைக் குழுவினர் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

குடியிருப்புகளில் காணப்பட்ட நீர்நிலைகளில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டதால் அந்தக் குடியிருப்பாளர்கள் மீது நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. (9)

# ஆண்டுநிறைவு நிகழ்வில் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை23
அராலி தெற்கு களவத்துறை விளையாட்டுக் கழகத்தின் 71ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள் கழக மைதானத்தில் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்றது.
யாழ்ப்பாணம்கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். மெதுவான ஈருருளி ஓட்டம், பெண்களுக்கான வலைப்பந்து, கயிறிழுத்தல்போன்ற பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள்நடைபெற்றது.
நிகழ்வுகளின் முடிவில், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினர் பொ.கனகசபாபதி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (5.7)







# அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் முன்மொழிவாக இருக்க வேண்டும்

## தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவிப்பு

சாவகச்சேரி, ஜூலை 23

கிராமப் புறங்களில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டமாயினும் அந்தக் கிராம மக்களால் முன்னுரிமை அடிப்படையில் முன்மொழியப்பட்ட வேலைத்திட்டங்களையே மேற்கொள்ள வேண்டும் எனப் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தெரிவித்தார்.

2018 ஆம் ஆண்டுக்கான துரித அபிவிருத்திக் கிராமியத்திட்டத்தின் கீழ் சாலைகள் பாடசாலைகள் குளங்கள் மைதானங்கள் சீரமைப்பது தொடர்பான அரச அலுவலர்களுக்கான கலந்துரையாடல் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.
கலந்துரையாடலில் உதவிப் பிரதேச செயலர் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சாவகச்சேரி நகரசபை சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் தவிசாளர்கள் உபதவிசாளர்கள் உறுப்பினர்கள் மற்றும் தென்மராட்சி கல்வி வலயத்தின் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் உரையாற்றும் போதே பிரதேச செயலர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இவ்வருடத்திற்கான துரித அபிவிருத்தி கிராமிய வேலைத் திட்டத்தில் பாடசாலைகளின் மலசலகூடத் திருத்தம், பாடசாலைகளின் கட்டட கூரைகள் திருத்தம், மைதானங்கள் சீரமைத்தல் மற்றும் சாலைகள் சீரமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள என 200 மில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது.
ஒவ்வொரு வேலைத்திட்டத்திற்கும் செலவிடக்கூடிய தொகைகளும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேசத்தைப் பொறுத்தவரையில் பெருமளவான பகுதிகள் கிராமங்களை உள்ளடக்கியுள்ளதால் அங்கு மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் அனைத்தும் அங்குள்ள மக்களால் முன்னுரிமைப் படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும்.
சாலைகள் சீரமைப்புக்கு தலா 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதால் பாரிய சாலைகள் சீரமைக்க முடியாது. சிறிய சாலைகளே சீரமைக்க முடியும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் சாலையானது அங்குள்ள மக்களால் அதிகம் பாவிக்கப்படும் சாலையாகவும் அந்தச் சாலை மக்களால் முன்னுரிமைப்படுத்தப்பட்டதாகவும் இருக்க வேண்டும்.
கிராம மக்களால் முன்னுரிமைப்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டங்களை தெரிவு செய்ய அந்தந்த கிராமங்களில் அலுவலர்கள் கூட்டங்களை கூட்டி மக்கள் முன்னிலையில் தெரிவு இடம்பெறவேண்டும் - என்றார். (9)

## நற்கருணை ஆராதனை

சாவகச்சேரி, ஜூலை 23
யாழ்ப்பாணம் சாவகச்சேரி கச்சாய் சாலை புனித லிகோரியார் ஆலய நவநாள் திருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதையடுத்து சிறார்களுக்கு முதல் நன்மை வழங்கும் திருநற்கருணை ஆராதனை நேற்று ஆலயத்தில் இடம்பெற்றது.
ஆலய பங்குக் குரு அருட்பணி ரெஜி சௌந்தரா அடிகள் தலைமையில் நற்கருணை ஆராதனைகள் நடத்தப்பட்டது. (9)



## மெழுகுவர்த்தி தயாரித்தல் பயிற்சிநெறி

சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் நோக்கில் அலங்கார மெழுகுவர்த்தி தயாரித்தல் தொடர்பான இலவசப் பயிற்சி நெறி எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை கரவெட்டி பிரதேச விதாதா வளநிலையத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.
பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் அன்றைய தினம் காலை விதாதா வளநிலையத்திற்கு சமூகமளிக்குமாறு கரவெட்டி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

## பெண்கள் சுகவாழ்வு சிகிச்சைப் பிரிவு

பருத்தித்துறை, ஜூலை 23
பருத்தித்துறை மந்திகை ஆதார மருத்துவமனையில் ஆரோக்கிய பெண்கள் சுகவாழ்வு சிகிச்சைப் பிரிவு எதிர்வரும் ஓகஸ்ட முதலாம் திகதி புதன்கிழமை தொடக்கம் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 12 மணி வரை மருத்துவமனை சிகிச்சைகள் பிரிவில் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த சிகிச்சைப் பிரிவில் உயர் இரத்த அமுக்க பரிசோதனை போசாக்கு நிலையைப் பார்வையிடல், நீரழிவு, கொழுப்புபடிம (கொலஸ்ரோல்), முலைமார்பு கட்டிகள், கண்டக்கழலை, கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஆகிய பரிசோதனைகளுடன் குடும்பத்திட்டம் மாதவிடாய் சம்பந்தமான, மூப்படைந்த பெண்களுக்கான ஆலோசனைகள் போன்றவை மேற்கொள்ளப்படுமென மருத்துவமனை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (9)

## யோகாசன கற்கை நெறி சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜூலை 23
இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்களத்தால் நல்லூர், நாவலர் மணி மண்டபத்தில் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகாசன தியான கற்கை நெறியைப் முழுமைப்படுத்தியவர்களுக்கான சான்றிதழ்கள் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளது.
கடந்த ஆண்டுகளில் மேற்படி மண்டபத்தில் யோகா தியானக் கற்கை நெறியைப் பயின்று இதுவரை சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் நல்லூர், நாவலர் மணி மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பிரயோக மதிப்பீட்டுத் தேர்வில் தேற்றிச் சான்றிதழ்களைப் பெற்றுகொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.
இந்தப் பிரயோக மதிப்பீட்டுத் தேர்வானது அன்றையதினம் காலை6.30மணிதொடக்கம் 7.30மணிவரை ஆண்களுக்கும், 7.30மணி தொடக்கம் 8.30 மணி வரை பெண்களுக்கும் நடைபெறவுள்ளது. மேலதிக விவரங்களை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8)

*காக்கைதீவு சந்தையில்*

# வேறு இடத்து மீன்கள் விற்பனை செய்யத் தடை

யாழ்ப்பாணம்,ஜூலை 23
யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, காக்கைதீவில் இயங்கும் மீன் சந்தையில் தமது துறைக் கடல் உணவுகள் தவிர வேறு இடத்துக் கடல் உணவுகள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதாகக் சாவற்கட்டு கிராமியக் கடற்றொழில் அமைப்பால் அறிவிக்கப்பட்டுள்ளது.
காக்கைதீவுத் துறையில் அக்கரையூடாகக் கொண்டு வரப்படும் மீன், இறால், நண்டு, கணவாய் போன்ற கடல் உணவுகள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.
ஆனால் சில வியாபாரிகள் மறைமுகமாக வேறு இடத்துக் கடல் உணவுகளை விற்பனை செய்வதால் இந்த இடத்தின் சுவை, விலை, தரம் என்பனவற்றில் மாற்றம் ஏற்படுவதாகவும் இதனால் வாடிக்கையாளர்கள், வியாபாரிகள் எனப் பலரும் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.
இதனால் அண்மையில் மேற்படிச்சங்கமண்டபத்தில் வியாபாரிகளுக்கும் கடற்தொழில் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத்துறையில் வேறுதுறைக் கடல் உணவுகள் விற்பனை செய்வது முற்றாகத் தடைசெய்தல் எனும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இதனை மீறி விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என மீன் வியாபாரிகளுக்குச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (147)

## ஆடிவேல் ரதபவனி

யாழ்ப்பாணம்,ஜூலை 23
நல்லூர் சிறி பாலகதிர்காம ஆலய வருடாந்த ஆடிவேல் ரதபவனி எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகி மூன்று நாள்கள் யாழ்ப்பாணம் நகரை வலம் வருதல் இடம்பெறும்.
ஆடிவேல் இரதபவனி 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு ஆரம்பமாகி 1ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 9.30 மணி வரை கலை கலாசார நிகழ்வுகளோடு பவனி ஆலயத்தை வந்தடையும் என அறிவித்துள்ளனர்.

## பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 23
யாழ்ப்பாணம், அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 30 ஆம், திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து பதினைந்து நாள்கள் நடைபெறும் தொடர்ந்து எதிர்வரும் ஓகஸ்ட் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு இரதபவனியும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலசபை அறிவித்துள்ளது.

★ ★ ★

யாழ்ப்பாணம், கொடிகாமம் தவசிகுளம் அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 5 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 24 நாள்கள் நடைபெற்றுவருகின்றன. (155)

★ ★ ★

வரணி ஜூலை, 23
வரணி கரம்பான் வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா இடம்பெற்று வருகின்றன.
எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழன் தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறும். (122)

## யாகப்பர் ஆலயத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 23
கிளாலி, புனித யாகப்பர் ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த 16 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.
எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் 25 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும் புனிதரின் தேர்ப்பவனியும் இடம்பெறும். (17)

## 'இந்து வீச்சு' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 23
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கற்றல் கற்பித்தலுக்கான வழிகாட்டி நூலான "இந்து வீச்சு" வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில்
யாழ்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் நா.மகேந்திரராசா தலைமையில் இடம்பெறும்.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.
முதற்பிரதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் வெ.சுதர்சன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

## திடீரென...

களில் திடீரென மயங்கிய மூவர் உயிரிழந்துள்ளனர். கொக்குவில், பலாலி, சங்கானையைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

**கொக்குவில்**

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த கார்த்திகேசு கதிர்காமலிங்கம் (வயது60) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தை, வீட்டில் பாக்கு இடித்துக் கொண்டிருந்துள்ளார். திடீரென அவர் மயங்கிச் சரிந்துள்ளார். மயங்கியவரை உறவினர்கள் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பலாலி**

பலாலியை சேர்ந்த குணசீலன் குயின்சன் (வயது 30) என்ற இளைஞன் நேற்றுக் காலை தனது வீட்டில் காலை உணவாக பிட்டுச் சாப்பிட்டுள்ளார். பின்னர் அவருக்கு வாந்தி ஏற்பட்டதுடன் மயக்கமடைந்து வீழ்ந்துள்ளார். மயக்கமடைந்தவரை உடனடியாக தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அவர் உயிரிழந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டதுடன் சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**சங்கானை**

மன்னார் பெரிய தம்பம் பகுதியைச் சேர்ந்த ராமன் இராசதுரை (வயது60) என்ற முதியவர் யாழ்ப்பாணம் சங்கானை தொட்டிலடிப்பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்கு 20ஆம் திகதி வந்துள்ளார். தொட்டிலடிச் சந்தியில் உள்ள பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்துக் கொண்டிருந்துள்ளார். திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார். அவ்விடத்தில் நின்றவர்கள் உடனடியாக சங்கானை மருத்துவமனையில் சேர்பித்துள்ளனர். எனினும் அவர் இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டதுடன் உடல் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (5,8)

## பலாலி...

வண்டிச் சேவையை தொடக்கி வைப்பதற்காக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங்கும் யாழ்ப்பாணம் வந்திருந்தார். இரண்டு தரப்பினரையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்றுச் சந்தித்தனர். 'ஜெட் விங்' விடுதியில் நேற்று மதிய உணவுடன் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பலாலி வானூர்தி நிலையத்தை பிராந்திய வானூர்தி நிலையமாக தரம் உயர்த்துவதற்கு முதல்கட்டமாக, தற்போது இருக்கின்ற நிலையிலேயே இந்தியாவுக்கு வானூர்தி சேவைகள் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்தச் சேவையைத் தொடங்குவதற்கு உடனடியாக என்ன தேவைகள் உள்ளனவோ அவை பூர்த்தி செய்யப்படும்.

'பன்னாட்டு வானூர்திகள் தரையிறங்குவதற்கும், இங்கிருந்து புறப்பட்டுச் செல்வதற்கும் ஏதுவாக சமிஞ்சைக் குறியீடுகள் (நவிக்கேசன்) அமைக்கப்படவேண்டும். குடிவரவு மற்றும் குடியகல்வு, ஆயத் திணைக்களம் என்பனவற்றைச் செயற்படுத்துவதுக்கு இப்போதுள்ள கட்டிடங்கள் போதுமா என்பதை ஆராயவேண்டும். இல்லாவிடின் தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்' என்று சிவில் வானூர்திப் போக்குவரத்துச் சபையினர் சந்திப்பில் கூறியுள்ளனர். அவற்றை உடனடியாச் செயற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து தொழில்நுட்பக் குழுவினர் உடனடியாக வருகை தந்து, பலாலி வானூர்தி நிலையத்தைப் பார்வையிட்டு இந்தியாவுக்கான வானூர்திச் சேவைக்கான ஏனைய அடிப்படைத் தேவைகளை மதிப்பிடுவார்கள். வானூர்திச் சேவை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் பிராந்திய வானூர்தி நிலையமாகத் தரமுயர்த்தி ஏனைய நாடுகளுக்கான வானூர்திச் சேவைகளும் நடத்தப்படவுள்ளது.

தற்போதுள்ள வானூர்தி ஓடுதளத்துக்கு மேற்குப்புறமாக 500 ஏக்கர் காணியில் புதிய பிராந்திய வானூர்தி நிலையத்துக்கான கட்டிடங்கள் அமைக்கப்படவுள்ளது. இந்த அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வு மாதாந்தம் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன் மற்றும் வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சர் ஹர்ச டி சில்வா ஆகியோரும், இந்தியத் தரப்பில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங், இரண்டாம் நிலைத் தூதுவர், யாழ்ப்பாணத்திலுள்ள தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் பாலசந்திரன், தூதரக அதிகாரிகளும், யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி தர்சன ஹெட்டியாராச்சி, வான்படைத் தளபதி, சிவில் வானூர்திப் போக்குவரத்துச் சபை பணிப்பாளர் நிமல் சிறி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர். (5)

## தமிழர்...

மக்கள் துரத்தித் துரத்தி அடித்து விரட்டப்பட்டனர். தமிழ் மக்களின் வீடுகள் சிங்களக் காடையர்களால் எரியூட்டப்பட்டது. தென்பகுதியில் தமிழ் மக்கள் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்தனர். இந்தக் கலவரத்தின் போது தமிழ் மக்களின் வர்த்தக நிலையங்கள் இருந்த தடம் தெரியாமல் அழிக்கப்பட்டது.

கொடூரக் கலவரத்தில் சிக்கி பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் சாவைத் தழுவினர். பல நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர். பலகோடி ரூபா பெறுமதியான தமிழ் மக்களின் சொத்துக்கள் எரித்துச் சாம்பராக்கப்பட்டது. சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் கண்கள் பிடுங்கப்பட்டு, உடல் சிதைக்கப்பட்டு கோரமாகக் கொல்லப்பட்டனர்.

ஈழத் தமிழர்களின் ஆயுதப் போராட்டம், இந்தக் கலவரத்துடன் உத்வேகம் பெற்றது. தமிழர்களின் வரலாற்றைத் திருப்பிப் போட்ட, குருதிக் கொப்பளங்களால் நினைவுகளை எழுதிய கறுப்பு ஜூலை இன்று. மறக்க முடியாத மனவடுவை ஏற்படுத்திச் சென்ற கறுப்பு ஜூலையின் 35 ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. (5)

## குழந்தை...

யில் சத்திர சிகிச்சை மூலம் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்த இளம் தாய் சில மணிநேரத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். காரைநகர் களபூமியைச் சேர்ந்த இந்திரன் சிவகலா (வயது-21) என்ற இளம் குடும்பத் தலைவியே உயிரிழந்துள்ளார்.

பிரசவத்துக்காக கடந்த 16ஆம் திகதி காரைநகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சத்திர சிகிச்சை ஊடாக குழந்தையைப் பிரசவிக்க யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேற்றுக் காலை மாற்றப்பட்டுள்ளார். அவருக்கு சத்திர சிகிச்சை ஊடாக ஆண் குழந்தை பிறந்துள்ளது. குழந்தை பிறந்து சில மணி நேரத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

சத்திர சிகிச்சையின் போது ஏற்பட்ட உயர் குருதி அமுக்கமே உயிரிழப்புக்கு காரணம் என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கபடுகின்றது. உடற்கூற்றுப் பரிசோதனைக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. இறப்புத் தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (5,8)

## யாழ்ப்பாணத்தில்...

இந்தப் பணத்தை வைத்தே, நீங்கள் தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில், கொழும்பு அரசின் கைத்தொழில் மற்றும் வர்த்தக வாணிப அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து 'தொழில்முனைவோர் எழுச்சி' நிகழ்வை நேற்றுக் காலை நடத்தியது. இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாகப் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, வெளிநாடுகளிலிருந்து இங்கு வந்து முதலீடு செய்கின்றனர். அதேபோன்று இங்குள்ளவர்களும் முதலீடுகளைச் செய்யவேண்டும். நாங்கள் அதனைத்தான் எதிர்பார்க்கின்றோம். யாழ்ப்பாணத்திலுள்ள வங்கிகளில்தான் பணம் அதிகளவில் காணப்படுகின்றது. இங்குள்ளவர்களின் பணம், வெளிநாடுகளிலிருந்து வரும் பணம் எல்லாவற்றையும் வங்கிகளில் வைப்பிலிட்டுள்ளார்கள். அந்தப் பணத்தை பயன்படுத்தி நீங்களே தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கலாம். தொழில் முயற்சிக்கு நீங்கள் முதலிடுவதற்கு மேலதிகமாக 300 சதவீத வரிச்சலுகையை நாங்கள் வழங்குவோம் - என்றார்.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சோ.சேனாதிராசா, ஈ.சரவணபவன், எம்.ஏ.சுமந்திரன், திருமதி விஜயகலா மகேஸ்வரன், இ.அங்கஜன் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு தலா 2 மில்லியன் ரூபா, கைத்தொழில் வர்த்தக வாணிப அமைச்சினால் ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிதிக்குரிய பயனாளிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டனர். பயனாளிகள் தங்கள் வாழ்வாதாரத்துக்கு கோரிய உதவிப் பொருள்கள் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டது. 304 பயனாளிகளுக்கு அவை கிடைக்கப்பெற்றன.

அமைச்சர் ரிசாட் பதியுதீன், பிரதி அமைச்சர் இ.அங்கஜன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரால் தையல் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்ட 43 பேருக்கு தையல் இயந்திரம் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டது.

தேசிய தொழில்முனைவோர் அபிவிருத்தி அதிகாரசபையினால் சமையல் எரிவாயுவில் செயற்படும் அடுப்பு உள்ளிட்ட வாழ்வாதார உதவிகளும் இந்த நிகழ்வில் வைத்து வழங்கப்பட்டது. இது முன்னர் திட்டமிட்ட வாழ்வாதார உதவி வழங்கல் என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (5,114)

## ஆசிரியர்...

ரியர் யார்? மாணவர் யார்? என்று ஆராய வேண்டியுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

**கோரிக்கைக்கு செவிசாய்ப்பு**

தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கு அரசு சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. அவர்களின் பாடசாலை வருகைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று கூறியது அரசு. நீண்ட காலப் போரால் இடம்பெயர்வுகள், ஆவண அழிவுகள் என்பற்றுக்குத் தொண்டர் ஆசிரியர்கள் முகம் கொடுத்திருந்தனர். அவர்களால் தமது பாடசாலை வருகைகளை நிரூபிக்க முடியவில்லை. அவர்களிடம் உறுதிமொழிப் பத்திரத்தைப் பெற்று அவர்களின் நீண்டகாலச் சேவையை உறுதிப்படுத்தலாம் என்று நான் அபிப்பிராயம் வழங்கினேன். சற்றுத் தாமதத்தின்பின்னர் கொள்கை அளவில் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. எமது தொண்டர் ஆசிரியர்களின் தொடர்ச்சியான கோரிக்கைகள் மற்றும் எமது அழுத்தங்களால் நியமனங்களை வழங்குவதற்கு அரசு இணக்கம் தெரிவித்தது.

தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றிய அதே பாடசாலைகளிலேயே உங்களுக்குரிய நிரந்தரநியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. உங்கள் கற்பித்தல் நிகழ்வுகள் எதுவித தடங்கலுமின்றிச் சிறப்பாக முன்னெடுப்பதற்கு அதுவாய்ப்பாக அமையும் என்று நம்புகின்றேன்.

**முன்னுதாரணம்**

ஆசிரிய ஆசிரியைகளே மாணவ, மாணவியரின் முன்னுதாரணங்களாகத் திகழக்கூடியவர்கள். மாணவர்கள் ஒரு ஆசிரியரின் நடை, உடை, பாவனை, பேச்சுவழக்கு, அறிவூட்டுகின்ற விதம் ஆகியஅனைத்தையும் இலகுவில் மனதில் கிரகித்து அந்த வழியில் நடக்க முயற்சிப்பார்கள். முன்னைய காலங்களில் ஒவ்வொரு ஆசிரியனும் அல்லது ஆசிரியையும் தமது உடல் உளத் தூய்மைகள், ஆடையலங்காரம், சுகாதாரப் பழக்கவழக்கங்கள், சமயநெறிப் பின்பற்றுதல்கள் ஆகிய அனைத்திலும் முன்னுதாரணமாக விளங்கினார்கள்.

**கொழும்புத் தலைமையின் பரிசீலனைக்கு**

தலைமை அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் போன்றோர் இங்கிருப்பதால் நானும், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரும் சில விடயங்களை உங்கள் பரிசீலைக்காகத் தருகின்றோம்.

மாகாண சபைகளுக்கான சட்டத்தில் கல்வி என்பது மாகாணசபைகளுக்குப் பகிரப்பட்ட விடயம். ஆசிரியர் நியமனங்கள் மற்றும் கல்வி தொடர்பான நடைமுறைகள் யாவும் மாகாண சபையின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வரப்படவேண்டும். ஆனால் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான அதிகாரம் மட்டுமே மாகாணத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய வகைகளைச் சேர்ந்த க.பொ.த. உயர்தரத்தில் தகைமை பெற்றவர்கள், டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் போன்றவர்களை ஆசிரியர்களாக நியமிக்கக்கூடிய அதிகாரத்தை கொழும்பு தன்னிடம் வைத்துள்ளது. அந்த அதிகாரமும் மாகாண சபைகளிடம் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் செயற்படும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் மற்றும் தேசிய கல்வியியல் கல்லூரிகள் என்பனவற்றுக்குப் பயிற்சி ஆசிரியர்களை வடக்கு மாகாணத்தின் தேவைக்கேற்ப தெரிவு செய்யும் அதிகாரம் எம்மிடம் தரப்படவில்லை. அந்த அதிகாரம் மாகாண சபைகளிடமே இருக்கவேண்டும்.

**கரவான நடவடிக்கை**

இலங்கையில் மாகாணப் பாடசாலைகள், தேசியப் பாடசாலைகள் என்ற இரு வகையான பாடசாலை முறைமைகளை அரசு அறிமுகம் செய்துள்ளது. தேசியப் பாடசாலைகள் கொழும்பு அரசின் கீழும், மாகாணப் பாடசாலைகள் மாகாண சபையின் கீழும் நிர்வகிக்கப்படுகின்றன. மாகாணப் பாடசாலைகளைப் பாதிக்கும் பல செயற்பாடுகள் கொழும்பு அரசால் மேற்கொள்ளப்படுகின்றன. மாகாணப் பாடசாலைகளில் கல்வி பயின்று கொண்டிருக்கின்ற மாணவர்களை அதிக அளவில் தேசியப் பாடசாலைகளில் சேர்ப்பதற்கு தேசிய பாடசாலைகளின் வகுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், தேவைக்கு அதிகமான ஆசிரியர்களை நியமித்தல் போன்ற நடவடிக்கைகளால் மாகாணத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகள் பாதிக்கப்படுகின்றன.

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கொள்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி விட்டு அருகில் உள்ள பாடசாலைகளைப் பாதிக்கின்ற வகையில் தேசிய பாடசாலைகளை வளர்க்கும் போக்குத் தவறான அணுகுமுறையாகும்.

நாட்டில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் ஒரே கல்வித் திட்டம், ஒரே வகையிலான கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற போது சில பெரிய பாடசாலைகளைத் தேசியப் பாடசாலைகளாக நியமிப்பது மாகாணப் பாடசாலைகளுக்குப் பெரும் பாதிப்பாக அமைகின்றது.

தேசிய பாடசாலைகளுக்கென வேறுவகையான கல்வித் திட்டம், வேறு விதமானபாட நூல்கள், வேலைத்திட்டங்கள் இருக்குமாயின் விரும்பியவர்கள் அந்தத் திட்டத்தின் கீழ் அந்தத் தேசியக் கல்லூரிகளில் இணையலாம். ஆனால் ஒரே வகையான கல்வித்திட்டத்தின் கீழ் இயங்கும் பாடசாலைகளிடையே வேறுபாடுகளை வளர்ப்பது பெற்றோர் மாணவர்களிடையே குழப்பங்களையும், சந்தேகங்களையும் ஏற்படுகின்றன.

இப்படியான விடயங்களை இங்கு வந்துள்ள தலைமை அமைச்சரும், ஏனைய அமைச்சர்களும் கவனத்தில் எடுக்க வேண்டும். மாகாண சபைகளின் சட்டத்தில் குறிப்பிட்டமைக்கு அமைவாக கல்வி தொடர்பான முழுமையான செயற்பாடுகள் மத்திய அரசால் தலையிடப்பட முடியாத விதத்தில் மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் - என்றார். (ற-5)

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு 250 பட்டதாரிகள் இணைக்கப்படுவர்

கொழும்பு, ஜூலை 23

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு 250 பட்டதாரிகள்இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் 50 பேர் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் மக்களைத் தெளிவூட்டும் அதிகாரிகளாக நியமிக்கப்படவுள்ளனர் என்று ஆணைக்குழுவின் ஆணையாளர் நெவில் குருகே தெரிவித்துள்ளார்.

குறித்த 50 பட்டதாரிகளும் இலஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை, ஆணைக்குழுவில் இணைத்துக்கொள்ளப்படவுள்ள ஏனைய 200 பட்டதாரிகளும்விசாரணைநடவடிக்கையில்ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவில் 250 பட்டதாரிகளைஇணைத்துக்கொள்வதற்கானஅரசிதழ் அறிவித்தல்ஏற்கனவேவெளியிடப்பட்டுள்ளது என்று ஆணையாளர் தெரிவித்தார். எதிர்வரும்முதலாம்திகதிவரைஇதற்காகவிண்ணப்பிக்க முடியும் என்று ஆணையாளர் நெவில் குருகே மேலும் தெரிவித்துள்ளார். (4)

# வங்கித் திருட்டில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்க உரிய நடவடிக்கை

## வங்கி உயரதிகாரிகள் தகவல்

கொழும்பு, ஜூலை 23

அநுராதபுரத்தில் இலங்கை வங்கிக் கிளையில்இடம்பெற்றதிருட்டுச்சம்பவத்தில், பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுர மாவட்டத்திலுள்ள தலாவ பிரதேச இலங்கை வங்கிக்கிளையில்இருந்துஒன்பது கோடி ரூபா பெறுமதியான ரொக்கப்பணமும், தங்க ஆபரணங்களும் அண்மையில் திருடப்பட்டிருந்தன. அதில் பாதிக்கப்பட்டவாடிக்கையாளர்களுக்கு இழப்பீடு வழங்கவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சந்தையில் நிலவும் பவுண் பெறுமதிக்கு அமைய இழப்பீடு வழங்கப்படும். களவு போன ஆபரணங்களுக்குப் பதிலாக அவற்றைபோன்றஆபரணங்களைச் செய்து தருமாறு சில வாடிக்கையாளர்கள்கோரிக்கை விடுத்துள்ளார்கள். இந்தக் கோரிக்கை தொடர்பில் வங்கி முகாமைத்துவம் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று வங்கியின் உயரதிகாரிகள்தெரிவித்துள்ளனர். (4)

# மனநோயால்வீதியில்திரிந்தவரை சீராக்கி வாழ வழிகாட்டினர் மக்கள்

## கம்பகாவில் இப்படி நடந்துள்ளது

கொழும்பு, ஜூலை 23

மாத்தளையில் மனநோயால் பாதிக்கப்பட்டு வீதியில் விடப்பட்ட நபருக்கு, பெரும்பான்மையின இளைஞர்கள் செய்த மகத்தானசெயற்பாடுதொடர்பில்தகவல்வெளியாகிஉள்ளது. நடேசன் என்ற அழைக்கப்படும் இந்த நபர் மாத்தளைப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றார்.

இவர் பல வருடங்களாக அசுத்தமான வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார். அவர் அசுத்தமாக உள்ளமையால் மக்கள் அவரைநெருங்குவதில்லை. அத்துடன்அவரைப்பைத்தியம் என்று கூறி அந்தப் பகுதி மக்கள் ஒதுக்கி வைத்துள்ளனர்.

இந்தநிலையில் பொறியியலாளரான சமரநாயக்க என்பவரும் அந்தப் பகுதி இளைஞர்கள் சிலரும் இணைந்து இந்த நபரைமீளவும்பழையநிலைக்குக்கொண்டுவரும்நடவடிக்கையை மேற்கொண்டனர்.

நடேசனின் தலைமுடியை வெட்டிஅவரைக் குளிப்பாட்டியுள்ளனர். பின்னர்சுத்தமான ஆடைகளை அணிவித்துஅவரை மாற்றியுள்ளனர். தென்னிலங்கையைச் சேர்ந்த இளைஞர்களின்செயற்பாடுகாரணமாக, நடேசன்பழையவாழ்க்கைக்குத்திரும்பியுள்ளார். இதுகுறித்துஅந்தப்பகுதிமக்கள்மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

பைத்தியம் எனக் கூறி பலராலும் ஒதுக்கப்பட்ட நடேசனை, எந்தவித பாரபட்சமும் இன்றி சிங்கள இளைஞர்கள் செய்த செயற்பாடு பலரையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. இது குறித்துசமூகவலைத்தளங்களில்பகிரப்பட்டுவருகிறது. அதற்குப் பாராட்டுகளும் குவிந்து வருகின்றன. (4)


# ஹேமச்சந்திரவின் நினைவஞ்சலியில் நீதிபதியும்பங்கேற்பு

## நேற்று ஒரு வருட நிறைவு

கொழும்பு, ஜூலை 23

நீதிபதி மா. இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர்ஹேமச்சந்திர (வயது-51)கொல்லப்பட்டஒரு வருடநினைவஞ்சலி நேற்று நடைபெற்றது. அதில் ஹேமச்சந்திரவின் குடும்ப உறுப்பினர்களுடன் இணைந்து நீதிபதி இளஞ்செழியன் அஞ்சலி செலுத்தினார்.

கடந்த வருடம் ஜூலை 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூரடியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நீதிபதி இளஞ்செழியனின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவர் காயமடைந்து மருத்துவமனையில்சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஹேமச்சந்திர உயிரிழந்தார்.



அவரது நினைவஞ்சலி சிலாபம் சின்னவத்தையில் உள்ள சரத் ஹேமச்சந்திரவின் வீட்டில் நேற்று இடம்பெற்றது. அதில் நீதிபதி பங்குகொண்டுஅஞ்சலிசெலுத்தினார். ஹேமச்சந்திரவின்உடல்அடக்கம்செய்யப்பட்டுள்ளஇடத்துக்கும் சென்று அவர் அஞ்சலி செலுத்தினார்.

இதேவேளை நீதிபதி இளஞ்செழியன் மற்றும் அவரது பாடசாலையின் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்துஅவரதுகுடும்பத்துக்கு20இலட்சம்ரூபாசெலவில்வீடுஅமைத்துஅண்மையில் வழங்கியிருந்தனர்என்பதும்குறிப்பிடத்தக்கது. இளஞ்செழியன் தற்போது திருகோணமலை மேல்நீதிமன்ற நீதிபதியாகப் பணிபுரிகின்றார் அவரின் மெய்ப்பாதுகாவலராகப் 15 ஆண்டுகளாக ஹேமச்சந்திர பணியாற்றியுள்ளார். (4,37)

# கடற் பாதுகாப்பு, சமுத்திர விவகாரம்: இலங்கை - ஜப்பான் இடையே பேச்சு



கொழும்பு, ஜூலை 23

கடல்சார் பாதுகாப்பு மற்றும் சமுத்திர விவகாரங்கள் தொடர்பாக சிறிலங்கா ஜப்பான் இடையிலான மூன்றாவது கலந்துரையாடல் கொழும்பில்இலங்கைஅயலுறவு அமைச்சில் நேற்று இடம் பெற்றது.

2015ஆம்ஆண்டுஇலங்கையின் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் ஜப்பானியப் பயணத்தின் போது, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு சார் ஒத்துழைப்பை வலுப்படுத்தும்நோக்கில்இந்தக்கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்தொடர்ச்சியாகமூன்றாவது கலந்துரையாடல் கொழும்பில்நேற்றுஇடம்பெற்றது. இந்தப் பேச்சுகளில், இந்தோ பசுபிக் மற்றும் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் நிலைமைகள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், ஜப்பானின் கடல் தற்காப்புப் படை மற்றும் இலங்கையின் கடற்படை, விமானப்படை, கடலோரக் காவற்படை ஆகியவற்றுக்கிடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கும் இந்தச் சந்திப்பின் போது இணக்கப்பாடு காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# சங்கிலி அறுக்க முற்பட்டனரென பொலிஸில் பெண்முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 23

வீதியில்சென்றுகொண்டிருந்த போது தனது கழுத்தில் இருந்த சங்கிலியை அறுக்கமுற்பட்டனர்என்றுநெல்லியடிபொலிஸ் நிலையத்தில்40வயதுப்பெண் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம்வடமராட்சியின் கரவெட்டி குஞ்சர் கடையை அண்மித்த பகுதியில் நேற்று மதியம் முயற்சி இடம்பெற்றதாக அவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த பெண்ணே முறைப்பாடு செய்துள்ளார்.

உந்துருளியில் முகத்தை மறைத்து, தலைக்கவசம் அணிந்து இருவர் வந்தனர். அவர்கள் சங்கிலியை அறுக்க முற்பட்டனர். வீதியில்நின்றவர்கள் கொள்ளையரைப் பிடிக்க முற்பட்டபோதும்அவர்கள்தப்பி ஓடிவிட்டனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,26)

# ரூ.500 கொடுத்தால்போதும் எந்த வாகனமும் தரம்பெறும்

## கொழும்பில் இப்படியும் நடக்கிறது

கொழும்பு, ஜூலை 23

நாட்டிலுள்ள சகல வாகனங்களினதும் அனுமதிப் பத்திரங்கள் வருடாந்தம் புதுப்பிக்கப்படும்போது புகைப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நற்சான்றுப் பத்திரம் வழங்கப்படுகிறது. அதன் பின்னரே அடுத்த வருடத்துக்கான வாகன அனுமதிப்பத்திரம்வழங்கப்படுவதுநடைமுறை.

இவற்றுள்பொதுமக்களின்பாவனையில் ஈடுபடுத்தப்படும்பேருந்துகள், பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் சிறிய பேருந்துகள், வாகனங்கள் போன்றனவும் உள்ளடங்கும். ஆனால் வெலிக்கட பகுதியிலுள்ள ஒரு பிரபல அரசியல்வாதி இந்தத் தகுதி காண் பரிசோதனையில் ஒரு அடாவடியைப்புகுத்தியுள்ளார்என்றுதெரிவிக்கப்படுகிறது.

அவரது ஆதரவில் இயங்கும் ஒரு குழுவினரிடம் 500 ரூபா பணம் கொடுத்தால் போதும் வாகனம் எந்த பழுது நிலையிலிருந்தாலும்புகைப்பரீட்சைமட்டுமல்லதரப் பரீட்சையிலும்கூடச்சித்தியடைந்துவிடும். அவ்வாறுசித்தியடைந்ததாகத்தெரிவித்து அசல் பத்திரமும் வழங்கப்பட்டுவிடும்.

அண்மையில், வெலிக்கட பகுதியில் ஒரு தனியார் பேருந்து பயணித்துக்கொண்டிருந்தபோது மிதி பலகை உடைந்து வீழ்ந்தது. அதில் பயணித்த சிலர் காயங்களுக்குள்ளாகினர். அந்தப் பேருந்தும் குறித்த அரசியல்வாதியின் ஆதரவில் அனுமதிப் பெற்றபேருந்துஎன்றுதெரிவிக்கப்பட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அது அரசியல்வாதி நடத்தும் நிலையம் என்பதால்தான் அது பற்றிய மேலதிக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது. (4)

# தூக்குத் தண்டனை வேண்டாம்: சந்திரிக்காவும் கடும் எதிர்ப்பு

## அரசியல் மட்டத்தில் குழப்பம் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்



**கொழும்பு, ஜூலை 23**
**இலங்கையில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தூக்குத் தண்டனைக்கு முன்னாள் அரசதலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார். எந்தவொரு நபருக்கும் தூக்குத் தண்டனை வழங்க தானும், இறந்து போன தனது தந்தையாரும் முன்னரும் எதிர்ப்பு வெளியிட்டிருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

தூக்குத்தண்டனை விவகாரம் நாட்டுக்குள்மட்டுமன்றி பன்னாடுகள் ரீதியாகவும் கடும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. எந்தவொரு தடைவந்தாலும், தூக்குத்தண்டனையை நிறைவேற்றியே தீருவேன் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளதாவது:

போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட தூக்குத் தண்டனையைச் செயற்படுத்த வேண்டுமா? என்ற கேள்வி தனக்கு எழுந்துள்ளது. போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அரசதலைவர் இதனை நடைமுறைப்படுத்தவுள்ளார் என்று கூறியுள்ளார். தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதற்குப் பலரும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். அவ்வாறு எதிர்ப்போர் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புபட்டவர்கள் என்றும் ஒருசில தரப்பினர் கேள்வியெழுப்பி வருகின்றனர் என்று சந்திரிக்கா தெரிவித்தார்.

தனது பாடசாலை கல்வியின் போது தூக்குத் தண்டனைக்கு எதிராகக் கட்டுரை எழுதி முதலாவது பரிசு வென்றிருந்தேன் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் மற்றும் சமகால அரச தலைவர்களின் மாறுபட்ட கருத்து மோதல்கள் கொழும்பு அரசியல் மட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (4)

---

# மத்தள வானூர்தி நிலையம் இராணுவ தேவைக்கு அல்ல

## அரசு மீண்டும் கூறுகிறது

கொழும்பு, ஜூலை 23
மத்தள வானூர்தி நிலையத்தை இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்த இந்தியாவுக்கு அனுமதி அளிக்கப்படாது என்று இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் சிலநாள்களுக்கு முன்னர் இடம்பெற்ற அமர்வில், மத்தள வானூர்தி நிலையத்தை இந்தியாவுடன் இணைந்து கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வதற்கு இலங்கை அரசு எடுத்துள்ள முடிவு ஆபத்தானது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்துக்குப் பதிலளித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"மத்தள வானூர்தி நிலையத்தின் 70 வீத பங்குகளை இந்தியாவுக்கு வழங்கி, கூட்டு முயற்சியாக இயக்குவது பற்றிய பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் இணக்கப்பாட்டுக் குழு என்பன, தேசிய பாதுகாப்பு மற்றும் வானூர்தி நிலையப் பணியாளர்களின் எதிர்காலம் தொடர்பான பரிந்துரைகளை வழங்கும்.

இணக்கப்பாடுகள் ஏற்பட்டதும், இந்தியாவுடனான உடன்பாடு நாடாளுமன்றில் முன்வைக்கப்படும்.

வானூர்தி நிலையத்தை முற்றாக இந்தியாவிடம் கையளிப்பதானால், சிவில் வானூர்தி சேவைகள் சட்டத்தில் நாடாளுமன்றின் மூலமாகத் திருத்தங்கள் செய்ய வேண்டும். அதனை எவரும் எதிர்க்கலாம். நாடாளுமன்றில் தோற்கடிக்க முடியும்.

வானூர்தி நிலையத்தைப் பரிமாற்றம் செய்ய முன்னர் நாங்கள் முன்நிபந்தனைகளை விதித்துள்ளோம்.

இது ஒரு வணிக முயற்சி மாத்திரமே. எந்தவொரு இராணுவச் செயற்பாடுகளுக்கும் எவரும் இதனைப் பயன்படுத்த அனுமதிக்கமாட்டோம். வான் போக்குவரத்து முறையை இலங்கை அதிகாரிகளே கட்டுப்படுத்துவார்கள். இலங்கை வானூர்திப்படையும் உள்ளூர் பங்காளர்களுமே வானூர்தி நிலையத்துக்குப் பாதுகாப்பு வழங்குவர்" என்று மங்கள மேலும் தெரிவித்தார்.

மத்தள வானூர்தித் தளத்தை இந்தியாவுக்கு வழங்கவுள்ளதாக முன்னர் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதற்கு அவ்வாறு வழங்கப்படாது என்று அரச தப்பினரால் முன்னரும் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது. (4)

---

# ஊடகவியலாளர் பாதுகாப்பு தொடர்பில் சந்தேகம்

## சபாநாயகர் தலையிடவேண்டும் எனக்கோருகிறது கூட்டு எதிரணி

கொழும்பு, ஜூலை 23
நாட்டிலுள்ள ஊடகவியலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகக் கூட்டு எதிர்க் கட்சி தெரிவித்துள்ளது. அதனால், ஊடகவியலாளர்களின் பாதுகாப்புக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களைப் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அந்த விடயத்தில் நாடாளுமன்ற சபாநாயகர் தலையிட வேண்டும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாஞ்சன விஜேசேகர கூறியுள்ளார். (4)

---




---

எத்தனோல் தொழிற்சாலை விடயத்தில்

# எதிர்க்காது, வாய்மூடி இருக்குமாறு 50 மில்லியன் ரூபா பேரம் பேச்சு

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிக்கிறார்



கொழும்பு, ஜூலை 23
தமக்கு 50 மில்லியன் ரூபா தருவதாகப் பேரம்பேசப்பட்டதாக, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சில நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றிய போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

மட்டக்களப்பு, கும்புறுமூலைப் பகுதியில் அமைக்கப்படும் எத்தனோல் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல், அமைதியாக இருப்பதற்கே, 50 மில்லியன் ரூபா தரப்படும் என்று பேரம் பேசப்பட்டுள்ளது. அர்ஜுன் அலோசியஸின் ஏற்பாட்டில் கட்டப்படும் இந்த எத்தனோல் தொழிற்சாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்ததாலேயே, பேரம் பேசப்பட்டுள்ளது. தம்மிடம் அலைபேசி மூலம் பேசிய அவர், எதிர்ப்புத் தெரிவிக்காமல் அமைதியாக இருப்பதற்கு, 50 மில்லியன் ரூபா தருவதாகக் கூறினார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (4)

---

# உயர்தரப் பரீட்சை முறைகேடுகளை கண்காணிக்க பொறுப்பதிகாரிகள்

## 2,268 பேர் நியமிக்கப்படவுள்ளனர்

கொழும்பு, ஜூலை 23
பரீட்சை முறைகேடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தமுறை நடைபெறவுள்ள ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு மேலதிக நிலைய பொறுப்பதிகாரிகள் 2ஆயிரத்து 268 பேரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள் மற்றும் அரச துறைகளில் பணியாற்றிப் பல்வேறு துறைகளிலிருந்தும் ஓய்வுபெற்ற அதிகாரிகள் ஆகியோர் இந்தப் பரீட்சைக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவ்வாறு நியமிக்கப்படும் மேலதிக பரீட்சை நிலையப் பொறுப்பாளர்களது முதன்மைப் பணி பரீட்சை நடவடிக்கைகளைக் கண்காணிப்பதே என்று திணைக்களம் கூறியுள்ளது.

உயர் தரப் பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சைக்கு இந்தமுறை 3 லட்சத்து 21ஆயிரத்து 469 பேர் தோற்றவுள்ளனர் என்று திணைக்களம் மேலும் தெரிவித்தது. (4)

---

# 4 வருடங்களின் பின்னர் மகிந்த டில்லிக்குச் செல்லவுள்ளார்

## அமைதி, பாதுகாப்புப் பற்றி உரை சுப்பிரமணியன் சுவாமி அழைக்கிறார்

கொழும்பு, ஜூலை 23
ஆட்சியை இழந்த பின்னர் முதன்முறையாக முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச இந்தியத் தலைநகர் டில்லிக்குப் பயணம் செய்யவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி அவர் அங்கு பயணமாகிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாஜகவின் முக்கிய பிரமுகரான நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமியின் அழைப்பின் பேரிலேயே, மகிந்த ராஜபக்ச அங்கு செல்கிறார்.

அந்தக் காலப்பகுதியில் டில்லியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கூட்டம் ஒன்றில் மகிந்த பங்குபற்றவுள்ளார்.

அதில் இந்திய இலங்கை உறவுகள் மற்றும் தெற்காசியாவில் அமைதி மற்றும் பாதுகாப்பு பற்றி மகிந்த உரையாற்றவுள்ளார்.

மகிந்த ராஜபக்சவின் பயணத்துக்கான திட்டத்தை இறுதி செய்வதற்காக, குழுவொன்றை சுப்ரமணியன் சுவாமி விரைவில் கொழும்புக்கு அனுப்பி வைக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், டில்லியைத் தளமாகக்கொண்டு செயற்படும் அனைத்துலக ஊடகவியலாளர்களின் அமைப்பான, தெற்காசிய பன்னாட்டு செய்தியாளர் சங்கமும், மகிந்த ராஜபக்சவுடனான கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மகிந்த ராஜபக்ச அரசதலைவராக இருந்த போது, இந்தியதலைமை அமைச்சர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வுக்காக 2014 மே மாதம், கடைசியாக டில்லிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அதற்குப் பின்னர், மகிந்த ராஜபக்ச ஆட்சியை இழந்த பின்னர், மும்பை, பெங்களூர் மற்றும் திருப்பதிக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோதும் மகிந்த டில்லிக்குப் பயணம் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# ராஜபக்சாக்களுக்கு அரசு பயப்படுகிறது

## கிண்டலடிக்கிறார் மகிந்த ராஜபக்ச

**கொழும்பு, ஜூலை 23**

**அரசு இன்று ராஜபக்சாக்களின் பெயருக்குப் பயந்துள்ளது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பன்னாட்டுப் பாரம்பரியத்துக்குத் தடையாகஇருப்பதாகத்தெரிவித்து காலிபன்னாட்டுக்கிரிக்கெட்மைதானத்தை அரசு அகற்ற முயற்சிக்கிறது. அதற்கு முதன்மைக் காரணம், மைதானத்தில் இருக்கும் தன்னுடைய பெயரை மக்களின் மனங்களிலிருந்துஅப்புறப்படுத்துவதே. அரசு இன்று ராஜபக்சாக்களின் பெயருக்குப் பயந்துள்ளது. நாட்டில் மக்கள் இன்று அனுபவிக்கும்நெருக்கடிகளால்ராஜபக்சாக்களின்பெயர்களுக்குப்பொதுமக்கள் நெருக்கமாகியுள்ளனர்.

இந்த நிலைமையை மாற்றுவதற்கேஅரசுபல்வேறுநடவடிக்கைகளின் ஊடாகக் கவனம் செலுத்துகின்றது. என்ன செய்தாலும் ராஜபக்சாக்களைப் பொதுமக்களின் உள்ளங்களிலிருந்து பிரிக்க முடியாது என்று மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (4)

---

## சட்டவிரோத பொலித்தீன் உற்பத்தி நிறுவனங்கள் மீது சட்டநடவடிக்கை

### *மைய சுற்றாடல் அதிகாரசபை தெரிவிப்பு*

கொழும்பு, ஜூலை 23

உணவுகளைப்பொதிசெய்யப்பயன்படுத்தும்பொலித்தீன் வகைகளைச் சட்டவிரோதமாக உற்பத்தி செய்த நிறுவனங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 250க்கும் அதிகமான உற்பத்தி நிறுவ னங்களுக்கு எதிராக இவ்வாறு சட்டநடவடிக்கைஎடுக்கப்படவுள்ளதாக மைய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன் ஒருபகுதியாக குறித்த நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அந்தச்சபை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கடந்த நாள்களில் இது தொடர்பில் மூவாயிரத்துக்கும் அதிகமானஇடங்களில்சோதனை நடவடிக்கைகள்நடத்தப்பட்டனஎன்றுமையசுற்றாடல் அதிகாரசபையின்உதவிப் பணிப்பாளர் உபாலி இந்திரரத்ன கூறியுள்ளார். சட்டவிரோதமாக சிறியளவில் பொலித்தீன் உற்பத்தியில் ஈடுபடும் உற்பத்தியாளர்களுக்கு எதிராக எதிர்காலத்தில்கடுமையானசட்டநடவடிக்கைஎடுக்கப்படும்என்று அவர் எச்சரிக்கையுடன் தெரிவித்துள்ளார். (4)

---

## புலிகளின் முன்னாள் உறுப்பினர் மூவர் சுவிஸில் கைதாகிச் சிறை

கொழும்பு, ஜூலை 23

விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் மூவரை சுவிஸ் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். வதிவிட அனுமதியின்றிசட்டத்துக்குப்புறம்பானமுறையில் தங்கியிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில்அவர்கள்கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அப்பாத்துரை சாந்தரூபன்(வயது 38),றேமன்ஜோசப்கெவின்டெரிப்(வயது 31), நவரட்ணம் சங்கீதன்(வயது 24) ஆகியோரே கைது செய்யப்பட்டு சூரிச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இவர்கள்விரைவில்நாடுகடத்தப்படலாம் என்றுஅச்சம்தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

---

## பிரிட்டன் எம்.பிக்களுக்கு நிதி வழங்கியதை விசாரிக்கவேண்டுமென்று கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து பேருக்கு, வழங்கப்பட்ட நிதி தொடர்பாக விசாரணை நடத்தவேண்டும்என்றுஇலங்கை நாடாளுமன்றில்அமைச்சர்களும் உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில், இலங்கை அரசு ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நெருக்கடிகளை எதிர்கொண்டபோது, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் இயன் பாய்ஸ்லி தனது குடும்பத்தினருடன் இரண்டு முறை இலங்கைக்குப் பயணம் செய்திருந்தார். இலங்கைஅரசின்சலுகைகளைப் பெற்று அவர் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதன்படி இலங்கை அரசிடம் ஒரு இலட்சம் பவுண்ஸ்களைப் பெற்றார் என்று எழுந்த குற்றச்சாட்டுத் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர், அவர் நாடாளுமன்றக் கூட்டங்களில் இனி மேல் இடம்பெறும் 30 கூட்டங்களில் பங்கேற்கக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரை இலங்கை அரசு விலைகொடுத்து வாங்கியுள்ளதுஎன்றகுற்றச்சாட்டு தீவிரமடைந்துள்ளது.

இந்த நிலையில், இயன் பாய்ஸ்லி உள்ளிட்ட ஐந்து பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மகிந்த ராஜபக்ச அரசு நிதி கொடுத்துள்ளமைகுறித்துவிசாரணைநடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்றில் கடந்த அமர்வில் கோரிக்கை விடுக்கப் பட்டது. நாடாளுமன்றில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா, "மற்றொரு பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினரும் மகிந்த அரசிடம்நிதிபெற்றிருப்பதாகக்குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அவர் இரண்டு மாதங்களில் ஒன்பது தடவைகள் இலங்கைக்கு வந்துள்ளார்.

இதுபோன்றுமுன்னையஅரசும்5 பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்கியுள்ளது. பாய்ஸ்லி நிதி பெற்றதை ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் ஒரு இலட்சம் பவுண்ஸ்களைப் பெற்றார் என்று சில அறிக்கைகள் கூறுகின்றன" என்று தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேராவும் அவருடன் இணைந்து கொண்டுஇதுகுறித்துஉடனடியாக விசாரணைசெய்யப்படவேண்டும் என்றும், இந்த நிதி யாரால் எப்படி வழங்கப்பட்டது என்பதை கண்டறியவேண்டும்என்றும்கூறினார்.

இந்தவிவகாரம்குறித்துஅயலுறவு அமைச்சு விசாரணை நடத்த வேண்டும்என்று, ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் வேண்டுகோள் விடுத்தார்.

பிரிட்டனுக்கான முன்னாள் தூதர் கிறிஸ்நொனிஸ்மற்றும்அயலுறவு அமைச்சராக இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரிடம் விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் கோரினார். (4)

---

## சீனாவிடமிருந்து பெற்ற பணத்தை மகிந்த மீள ஒப்படைக்க வேண்டும்

### *நாட்டுக்குத்துரோகமிழைத்துவிட்டார் என்றும் ஐ.தே.க. வினர் சபையில் சாடல்*

கொழும்பு, ஜூலை 23

சீனாவிடம் இருந்து முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச பெற்ற நிதி பொதுமக்களின் பணம். ஆகவே மகிந்தராஜபக்ச சீனாவிடமிருந்து பெற்ற பணத்தை மீளக் கையளிக்க வேண்டும். நிதி பெறவில்லை என்றால் நாடாளுமன்றுக்கு வந்து பகிரங்கமாகப் பதில் கூற வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களும் நாடாளுமன்றஉறுப்பினர்களும் சபையில் வலியுறுத்தினர். மகிந்த சீனாவிடம்நிதிஉதவிபெற்றதாக நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர் துஷார இந்துநில் கடந்த வியாழக்கிழமை கொண்டுவந்த சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மகிந்த நாட்டில் இல்லை. சிங்கப்பூருக்குச் சென்று விவாதத்துக்கு முகங்கொடுக்கமுடியாமல்தலைமறைவாகியுள்ளார். இது மோசடி அல்ல. நாட்டுக்குச் செய்த பெருந்துரோகம். என்றும் கருத்து முன்வைக்கப்பட்டது.

**துஷார இந்துநில்**

குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் உரையாற்றுகையில்,

மகிந்த சீனாவிடம் நிதி பெற்றார் என்பது தொடர்பில் இங்கு விவாதம்நடத்துகிறோம். சம்பந்தப்பட்ட மகிந்த இங்கு இல்லை. மோசடியுடன் சம்பந்தப்படவில்லை என்றால் மகிந்த நாடாளுமன்றுக்கு வந்து கூற வேண்டும். இல்லையேல் இது தவறு என்று சுட்டிக்காட்டவேண்டும்.எதுவும்இல்லை. மத்திய வங்கி மோசடி தொடர்பாகக் குற்றச்சாட்டு வரும்போது தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கநாடாளுமன்றுக்கு வந்துபதில்அளித்தார். ஆணைக்குழு முன்பு சென்று சாட்சியமும் அளித்தார். ஆனால்மகிந்ததலைமறைவாகியுள்ளார் என்றார்.

**முஜிபுர் ரஹ்மான்**

இதனையடுத்து ஒத்திவைப்புவேளை விவாதத்தை ஆமோதித்துகொழும்புமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்உரையாற்றுகையில்,

நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையில் செய்தி வெளிவரும் வரை எமக்கு இது பற்றி ஒன்றும் தெரியாது. நிதிஉதவி வழங்கியதாகச் சீனத் தூதரகம் கூட உண்மையைஒப்புக்கொண்டது. இந்த நிலையில்சீனஅரசால்இலங்கை கடன்வழங்கியசீனஹார்பர்நிறுவனமே மகிந்தவுக்கும் தேர்தலுக்குநிதிஉதவிவழங்கியுள்ளது. ஆகவேநாம்செலுத்தவேண்டிய கடனில் மகிந்தவுக்கு வழங்கிய பணத்தொகையும் உள்ளது. ஆகவே இது பொது மக்களின் பணம். மகிந்த சீனாவிடமிருந்து பெற்ற பணத்தை மீளக் கையளிக்க வேண்டும். சீனாவிடம் பணத்தை பெற்றுக்கொண்டு எத்தனை வளங்களை விற்றாரோதெரியவில்லை. 2015 ஆம் ஆண்டுக்குமுன்னர்சீனாஉதவி வழங்கியது எனில் அவர் ஆட்சிக்கு வந்திருந்தால் எத்தனை வளங்களை விற்றிருப்பார் என நினைக்க தோன்றுகின்றது என்றார்.

**கபீர் ஹாஷிம்**

அதிவேக நெடுஞ்சாலை மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர் கபீர் ஹாஷிம் உரையாற்றுகையில், மத்திய வங்கி மோசடி தொடர்பாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்ட போது நானும் தலைமை அமைச்சரும் எந்தவொரு அச்சமும் இல்லாமல் விசாரணைக்கு முகங்கொடுத்தோம். ஆகவே சீனாவிடம் பணம் பெற்றதை மோசடிஎன்றுகூறமுடியாது. இது நாட்டுக்கு செய்த பெரும்துரோகம். இது தொடர்பில் முழுமையான விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என்றார்.

**நளின் பண்டார**

அரச முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின்பண்டாரஉரையாற்றுகையில், மகிந்தவுக்கு எதிராகவே தற்போதுநாடாளுமன்றில்விவாதம்நடத்தப்படுகின்றது. எனினும் மகிந்தவைக் காணவில்லை. அவர் சிங்கப்பூருக்கு சென்றுள்ளார். விவாதம் நடக்கும் போது அவர் சிங்கப்பூரில் உள்ளார். நாடாளுமன்றில்செவ்வாய்க்கிழமையன்று சிங்கப்பூர் தொடர்பான ஒப்பந்தத்துக்கு எதிராகவே கூட்டுஎதிர்க்கட்சியினர்விவாதம் நடத்தினர். ஆனால் அதன்போதும்அவர்சிங்கப்பூரில்இருந்தார். ஆகவே முன்னாள் அரச தலைவர் மகிந்த தொடர்பில் மக்கள் சிந்திக்க வேண்டும் என்றார்.

**ரஞ்சன் ராமநாயக்க**

சமூக நலன்புர பிரதி அமைச்சர் ரன்ஜன் ராமநாயக்க உரையாற்றுகையில், சீனாவிடம்நிதிபெற்ற விடயம் மட்டும் மகிந்த செய்த மோசடி இல்லை. நாட்டில் நடைபெற்ற பல்வேறு மோசடிகளுடன் அவருக்கு தொடர்புள்ளது. தற்போது வெளியான மோசடியைச் சாதாரணமாக எண்ண முடியாது. நியூயோர்க்ரைம்ஸ்பத்திரிகையின் செய்தியாளர் ஹபீப் பல உண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்தியவர். ஆகவே மகிந்தசீனாவிடம்இருந்துதேர்தலுக்காகப் பணம் பெற்றமை உண்மை. இது தொடர்பில் பதிலளிக்க மகிந்த நாட்டில் இல்லை என்றார்.

**அகில விராஜ் காரியவசம்**

கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம்உரையாற்றுகையில், இந்தவிவாதத்தில்கூட்டுஎதிர்க்கட்சியினர் எவரும் நியூயோர்க் ரைம்ஸ் செய்திக்குப் பதிலளிப்பதாக இல்லை. அரசுக்கு எதிராகவும் அமைச்சர்கள் தொடர்பாகவுமே பேசுகின்றனர். எனினும் நியூயோர்க்ரைம்ஸ்செய்தியைக் கூட்டு எதிர்க்கட்சியினர் எவரும் நிராகரிக்கவில்லை என்றார்.

**அஜித் பீ.பெரேரா**

பிரதிஅமைச்சர்அஜித்பீ.பெரேரா குறிப்பிடுகையில்,

ரைம்ஸ் செய்தியை மகிந்த ஊடகங்கள் வாயிலாக நிராகரித்திருந்தார். அதனை முழுமையாக நிராகரிக்கவில்லை. அவர் சீனாவிடம் பணம் பெற்றமை தொடர்பானவிசாரணைநடைபெறுகின்றது - என்றார். (4,61)

# திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின் ஆடித் தள்ளுபடி



**15000/=** பெறுமதியான பட்டுச் சாறி
ஒன்றிற்கு **5000/=** பெறுமதியான
சாறி ஒன்று **இலவசம்**

| | | | |
|---|---|---|---|
| கொட்டன் TOP | - | ~~1800/=~~ | 1000/= |
| டெனிம் TOP | - | ~~1800/=~~ | 1200/= |
| கொட்டன் சல்வார் | - | ~~4000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் பெரியது | - | ~~5000/=~~ | 2000/= |
| நெற் சல்வார் சிறியது | - | ~~3500/=~~ | 1000/= |

**10%-50%** வரை விலைக்கழிவு



மொடர்ன் Tops, கொட்டன் Tops, டெனிம் Top,
மொடர்ன் சல்வார்கள், மொடர்ன் சூட்ஸ்,
பார்ட்டி புரொக்ஸ் மற்றும்
சிறுவர்களுக்கான ஆடைத் தெரிவுகள்

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 16.07.2018 - 01.08.2018**

**இந்தியன் செலக்ஷன்**

அனைவரையும்
அன்புடன்
அழைக்கின்றோம்

---

## 8ஆம் வருட நினைவஞ்சலி

மண்ணில்
15.12.1952



விண்ணில்
21.07.2010

திதி:- ஆடிமாதம் வளர்பிறை
ஏகாதசி (23.07.2018)

### அமரர் வல்லிபுரம் கணேசலிங்கம்

( முன்னாள் உரிமையாளர் - எரிக்கணேஸ் பல் மூக்குக் கண்ணாடியகம்)

அப்பா என்றழைத்த எம் தெய்வமே!
ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தாலும்
ஆறிடுமோ எங்கள் துயரம் -
அப்பா
உங்கள் மெய்யை விட்டு உயிர் பிரிந்து
இன்று எட்டு ஆண்டுகள் ஆனதப்பா -
நாங்கள்
கண்கலங்கி வாடுகின்றோம் அப்பா!
எங்கள் நெஞ்சினால் உங்கள்
நினைவுகள்
நித்தம் நித்தம் வந்து எங்கள் வாழ்வை
வழிநடத்துகின்றது
உங்களுடன் வாழ்ந்தகால நினைவுகள்
என்றும் எங்கள் கண்களில் கண்ணீரைச்
சொரிய வைக்கிறது
உங்கள் பொன் மொழியும் புன்சிரிப்பும்
குறுங்கதையும் கண்முன் நிழலாடுதப்பா!
நாங்கள் கதிகலங்கித் தேடுகின்றோம்
அப்பா!
உங்கள் ஆசியுடன் உங்களை நினைத்து
நித்தம் எம் பணியைத் தொடருகின்றோம்

பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(CS/18284)(h.17)

மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

23.07.2018

பிறப்பு
24 . 04 . 1949



இறப்பு
23 . 06 . 2018

### அமரர் திருமதி திலகவதி அம்பலவாணர் (தவம்)

அம்மா நீங்கள் இறைவனடி சேர்ந்து
நாள்கள் முப்பத்தொன்று ஆன போதும்
"மீண்டும் மீண்டும் வருவீ" என்று நினைத்து
வழிமேல் விழி வைத்துக் கண்ணீர் வடிக்கின்றோம்
செந்தாமரை போல் மலர்ந்த உம் முகம்
எம் மனக்கண் முன் மறைய மறுக்கின்றது
அன்பான உம் பாசக்குரல் ஓயாது
ஒலிக்குமாப் போல் பிரம்மை தோன்றுகின்றது
பாரினில் எம்மை விட்டுப் பல தூரம் சென்றாலும்
எம் பாசம் மட்டும் மாறாது தாயே! - இப்
பாரினில் நாம் வாழும் வரை உம்மை - என்றும்
நாம் மறவோம்! மறவோம் தாயே!

வடலித்தோட்டம்,
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.
077 210 5339

உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றென்றும் பிரார்த்திக்கும்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.





யாழ்ப்பாணம் தென்மராட்சிக் கல்வி வலயத்துக்கான வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நடமாடும் சேவை, தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரனின்நேரடிமேற்பார்வையில்மாகாணக்கல்விஅமைச்சின்செயலாளர்மாகாணகல்விப்பணிப்பாளர்செ.உதயகுமார் தலைமையில் இடம்பெற்ற சேவையில் 64 முறைப்பாடுகளுக்குத் தீர்வுகள் காணப்பட்டன. (எ-9)

## அண்ணனை தேடிய தங்கை உயிரிழப்பு

வவுனியா.ஜீலை23
வவுனியாவில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட அண்ணனைத் தேடிப் போராடிய தங்கை உயிரிழந்துள்ளார்.
வவுனியா, கூமாங்குளத்தில் வசிக்கும் இராசநாயகம் டிலாந்தினி(வயது24)என்ற சிறப்புத் தேவைக்குட்பட்டபெண்ணேஉயிரிழந்தவராவார்.
குறித்தபெண்ணுக்கு கடந்த வெள்ளிக்கிழமைமாரடைப்புஏற்பட்டது. பெண் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
எனினும்சிகிச்சைபயனின்றி அன்றைய தினமே உயிரிழந்தார்.
குறித்த பெண்ணின் சகோதரனான இ.ஜெனிஸ்ராச்கடந்த 2007ஆம் ஆண்டு நீர் கொழும்பு பகுதியில் வைத்து காணாமல்ஆக்கப்பட்டார்.
அதன் பிரகாரம் வவுனியாவில் இடம்பெறுவரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட போனோர் போராட்டத்தில்தனது தாயுடன் இணைந்து குறித்த பெண்ணும் கடந்த ஒரு வருடத்துக்கும் மேலாக தனது சகோதரனைத்தேடிபோராடி வந்த நிலையிலேயேஅவர்உயிரிழந்துள்ளார். (எ-110)




# ஆழ்துளைக் கிணறுகள் தோண்டும் இயந்திரங்கள் தினமும் நடமாட்டம்

## சட்டவிரோத செயற்பாடுகளைத் தடுக்கக் கோரிக்கை

**தென்மராட்சி, ஜூலை 23**
**ஆழ்துளைக்கிணறுகள்(குழாய்கிணறுகள்)அமைக்கதடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில், ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் இயந்திரங்களுடனான பத்துக்கும்மேற்பட்டவாகனங்கள்தினமும்வடக்குமாகாணத்துக்குட்பட்டபல பிரதேசங்களிலும் முதன்மைச் சாலை ஊடாகச் சென்று வருகின்றன.**

எனவேஆழ்துளைக்கிணறுகள் அமைப்பதைத்தடுப்பதற்கும்இந்தக் கிணறுகளை அமைப்பதால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் உரியவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சூழலியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
குழாய்க்கிணறுஅமைப்பதாயின் நீரியல் வளத்துறை மற்றும் அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் குடியிருப்பாளர் அனுமதி பெறவேண்டும். அத்துடன் இந்த நிறுவனங்களால்வழங்கப்படும் அனுமதிப் பத்திரம் வைத்துள்ள குடியிருப்பாளர்களுக்குமட்டுமே குழாய்க்கிணறுஅமைக்கும்நிறுவனங்கள் குழாய்க் கிணறு அமைக்க வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென உள்ளூராட்சிசபைகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தநிலையில்தற்போதுஜீலை மாதம் கிணறுகள் அமைப்பதற்குரியகாலம்என்பதால்குடியிருப்பாளர்கள் தமது காணிகளில் ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதில்ஆர்வமாகச்செயற்படுகின்றனர். இதனால் பலவாக



னங்கள்குழாய்க்கிணறுஅமைக்கும் இயந்திரத்துடன் சென்று வருகின்றன. கிணறு வெட்டிக் கட்டுவதற்கு அதிக செலவாகும் என்பதால்பொதுமக்கள்குறைந்த செலவில் ஆழ்துளைக் கிணறுகளை அமைப்பதில் ஆர்வமாக உள்ளனர்.
பல இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள்அமைக்கப்படுவதால் பல கிணறுகளில் நீர் வற்றிப் போகும்நிலைகாணப்படுகிறது.

ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கத் தடை விதித்துள்ள உள்ளூராட்சிசபைகள்மேலதிக நடவடிக்கை எடுக்க முன்வராததால் அனுமதிப் பத்திரமின்றி வகைதொகையின்றி குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இயந்திரங்கள் மூலம் ஆழ்துளைக் கிணறுகள்அமைப்பதால்ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பான விழிப்புணர்வுபொதுமக்களுக்குஇல்லாததால்குடியிருப்புக்காணிகளில் ஆழ்துளைக் கிணறுகளை அமைத்து வருகின்றனர். ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதைத் தடை செய்த அரச நிறுவனங்கள், பொலிஸார் மூலம் இவற்த்றைத் தடுக்காவிடின் விரைவில் வடக்கில் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும். அத்துடன் பல இடங்களில் உள்ள கிணறுகளும் உவர்த்தன்மை அடையும்
எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு உரியவர்கள் இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென சூழலிய லாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எ-9)

இலங்கையில் தடுக்கப்பட்டுள்ள தமது படகுகளை விடுவிக்க

## டில்லி அரசு இனிமேலாவது நடவடிக்கைஎடுக்கவேண்டும்

*தமிழக மீனவர்கள் கோரிக்கை*

கொழும்பு, ஜீலை 23
இலங்கை அரசு பறிமுதல் செய்துள்ள படகுகளுக்கானஇழப்பீடுகளைவழங்க இந்திய மைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
இராமநாதபுரம், புதுவை, நாகை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் இராமேஸ்வரத்தில் கடந்த 20ஆம் திகதி நடத்திய கூட்டத்தின் பின்னர் இந்த முடிவைஎடுத்துக்கோரிக்கையாக முன்வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.
2014 ஆம் ஆண்டில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் இலங்கை அரசு 187 படகுகளைக் கைப்பற்றியுள்ளது.
இது தொடர்பில் இந்திய மைய அரசால் எந்தவிதநடவடிக்கைகளும்எடுக்கப்படவில்லைஎன்றுஇராமேஸ்வரம்மீனவர் சங்கத் தலைவர் என்.ஜே. போஸ் தெரிவித்துள்ளார்.
இதேவேளை, தமது வாழ்வாதாரமான படகுகளை இழந்து உணவுக்கும் வழியின்றி அவதிப்படுகிறோம் என்று புதுக்கோட்டை மீனவர் சங்கத் தலைவர் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (4)

## கொழும்புஅமைச்சரவையில் அடுத்தவாரமும் மாற்றமா?

*16 பேர் கொண்ட அணியின் 4 பேருக்குக் கிடைக்க வாய்ப்பு*



கொழும்பு, ஜீலை 23
கொழும்பு அமைச்சரவை மாற்றமொன்று அடுத்துவரும் சில நாள்களுக்குள் இடம்பெறவுள்ளதாக அரச தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
இதன்போது, சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பவற்றின் பலர் அமைச்சுப் பதவிகளை ஏற்கவுள்ளனர்என்றும்தெரிவிக்கப்படுகிறது.
அரசிலிருந்து வெளியேறியுள்ள 16 பேர் கொண்ட குழுவில், நான்கு பேர் மீண்டும்அமைச்சுப்பதவிகளைப்பெறவுள்ளனர்என்றும் கூறப்படுகின்றது. (4)

*வவுனியாவில் வறட்சி*

# குடிதண்ணீர் வழங்கும் நடவடிக்கைகள் தீவிரம்

வவுனியா, ஜீலை 23
மழையின்றிய கடும் வெயில் காரணமாக வவுனியாவில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது.
வறட்சி காரணமாக வவுனியாப் பிரதேச செயலாளர் பிரிவில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தமக்களுக்குகுடிதண்ணீர் வழங்கும் செயற்பாடுகளை பிரதேச செயலாளர் கா.உதயகுமார் மேற்கொண்டுள்ளார்.
வவுனியாபிரதேசத்தில்வறட்சியால் பாதிக்கப்பட்ட நெளுக்குளம் பகுதியில், அங்கு பிரதேச செயலகம் மற்றும்தமிழ்தெற்குப்பிரதேசசபையின் உதவிகளுடன் தண்ணீர்த் தொட்டிகள் வைக்கப்பட்டுப் பொதுமக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகின்றது.



"மகாறம்பைக்குளம், ஆச்சிபுரம், ஈஸ்வரிபுரம் போன்ற பகுதிகளிலும் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தப் பகுதிகளுக்கும் குடி தண்ணீரை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வவுனியாவில்மழை இன்மை காரணமாக இந்தப் பகுதிகளிலுள்ள குளங்கள், கிணறுகளில் தண்ணீரின்மட்டம்குறைந்தளவில் காணப்படுகின்றது. இதனால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேலும் பல பகுதிகளில் குடிதண்ணீருக்குத்தட்டுப்பாடுஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன" என்று வவுனியா பிரதேச செயலர் உதயராசா தெரிவித்துள்ளார். (எ-21)

வடக்கில் பிரிந்து நிற்கும்

# கட்சிகளை ஒன்றாக்கும் வலிமை மக்களிடம்தான்

மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு



வவுனியா, ஜூலை 23

**தமிழில் உள்ள பழமொழி, மாடு சொன்னால் கேட்காதுமணிகட்டியமாடுசொன்னால்தான் கேட்கும் என்று அதுபோல ஒரு கட்சிக்கு இன்னொரு கட்சி சொன்னால் கேட்காது மக்கள் நினைத்தாலே அவர்களை ஒன்றாக்க முடியும். ஒற்றுமைப்பட்டாலே எமக்கான உரிமைகளை நாம் வென்றெடுக்க முடியும்**

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்தார்

சந்திரசேகரம்பரமலிங்கம்எழுதிய 'இலங்கையில்தமிழர்இறைமை' என்றநூல்வெளியீட்டுநிகழ்வுவவுனியா நெடுங்கேணியில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து உரையாற்றிய போதே மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: முதலில் எமக்கான நிரந்தரமான அரசியல் தீர்வை நாம் பெற்றுக் கொள்ளவேண்டும். அரசியல் தீர்வை பெற்றுக்கொள்ளும் போதுதான்காணாமல்போனோர், காணி விடயம், சிறையிலே இருப்பவர்களின் பிரச்சினைகள், வடகிழக்கு இணைப்பு உட்பட மொழிப் பிரச்சினை, மதப் பிரச்சினை அனைத்தையும் தீர்க்க முடியும். அதனை எம்மவர்கள் எழுபது ஆண்டுகளாக செய்கின்றார்கள் இன்னும் முடியவில்லை.

கடந்த காலப் போரால் அங்கங்களைஇழந்தவர்கள், உறவுகளை இழந்தவர்கள், பொருள்களை இழந்தவர்கள், சொத்துக்களை இழந்தவர்கள்ஆகியஅனைவரையும் மீள இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வைக்க வேண்டிய பொறுப்பு எமக்க இருக்கிறது. இவை தான் எமது சமூகத்துக்கு முதன்மையான தேவையாகவுள்ளது. இதை நாங்கள். நேர்மையாகவும். விசுவாசமாகவும் செய்வோமாக இருந்தால் நாம் இழந்தவற்றை பெறுவதற்கு நீண்ட தூரம் செல்ல வேண்டிய தேவையில்லை.

நல்லாட்சியை தமிழ் மக்கள் கொண்டுவரும்போது அப்படி ஒரு சூழ்நிலை இருந்தது. இலங்கை வரலாற்றில் இதுவரை, ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் இருந்தால் சுதந்திர கட்சி எதிர்க்கின்றதும் அல்லது சுதந்திரகட்சி ஆட்சியில் இருந்தால் ஐக்கிய தேசியகட்சி எதிர்க்கின்றதுமே இருந்தது. ஆனால் இரண்டு பேரும் இணைந்து உருவாக்கிய இந்த தேசிய அரசிலே இந்தஅரசைக்கொண்டுவந்தோம் என்று சொல்கின்ற எங்களால் மூன்று ஆண்டுகள் சென்றும் ஒரு விடயத்தையும் செயற்படுத்த முடியவில்லை.

நடந்து முடிந்த உள்ளுராட்சி மன்றத் தேர்தல் சமூகத்தை பிரிக்கும் ஒருசெயல். இதுஎமது இனத்துக்கு ஆரோக்கியமானது இல்லை.

இங்கே யாரும் ஏகப் பிரதிநிதிகள் அல்ல. தமிழர்களுக்கு இனிமேல் தலைவர்தேவையில்லை, நிர்வாகியே வேண்டும் நேர்மையான ஒருசர்வாதிகாரியான நிர்வாகியே வேண்டும். அவருக்கு இருக்க வேண்டிய தகுதி நேர்மை மட்டுமே. ஊழலுக்குதுணைபோகின்றவர், பிற்பாட்டுப்பாடுபவர்கள்என இவர்கள் யாரும்எமக்குத்தேவையில்லை. காலத்துக்குகாலம்தலைவர்களை இனம் காட்டி நாம் பெற்றது ஒன்றும் இல்லை.

அநியாயங்கள் செய்பவர்கள், அவற்றுக்கத் துணைநிற்பவர்கள் என அனைவரையும் மிக விரைவிலே அரங்கத்துக்கு கொண்டுவருவேன். ஊழல்களுக்குபின்னால் இருக்கின்றபெருச்சாளிகள்அனைவரும் நான் உயிருடன் இருக்கும் வரை தப்பமுடியாது- என்றார்.

வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் ச.தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடக்குமாகாணசபைஉறுப்பினர்களானதியாகராஜா, ஜி.ரி.லிங்கநாதன், அரசதலைவர் சட்டத்தரணி கே.சிற்றம்பலம்எனப்பலர்கலந்து கொண்டனர். (எ-110)

## கழிவுப் பொருள்களால் துர்நாற்றம் வீசும் கால்வாய்

நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

வவுனியா, ஜூலை 23

வவுனியா புதிய பேருந்து நிலையக் கால்வாயில் கொட்டப்படும் கழிவுப் பொருள்களால் சுகாதார சீர்கேடு ஏற்படுகின்றது என்று பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். கொட்டப்படும் கழிவுகளால் கால்வாய் துர்நாற்றம் வீசுவதால் பயணிகள் சுகாதார ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிவருகின்றனர். பேருந்துநிலையத்துக்குவருகைதரும் பயணிகளே கழிவுப்பொருள்களை கால்வாயில் வீசுகின்றனர். இதனால் கழிவுப் பொருள்கள் குவிந்து கால்வாய் துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன் கழிவு பொருள்கள் குவிந்து காணப்படுவதால் கழிவுநீர் தேங்கி நின்று நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளது. இதனால் பயணிகள் நுளம்புக் கடிக்கும் இலக்காகுகின்றனர்.

எனவே உரியவர்கள் தலையிட்டு கால்வாயில் குப்பைகள் போடுவதைத் தடுத்து, இது தொடர்பில் விழிப்புணர்வுப் பதாகைகளை அந்த இடங்களில் வைத்துசுகாதாரச்சீர்கேட்டைத்தடுக்கநடவடிக்கைஎடுக்கவேண்டுமென பாதிக்கப்பட்டபயணிகள்கோரிக்கைவிடுத்துள்ளனர். கழிவுப்பொருள்கள் போடுவதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில்கழிவுப்பொருள்களைப்போட உரிய விழிப்புணர்வுச் செயற்பாடுகளை நகரசபை முன்னெடுக்க வேண்டுமெனவும்பொதுமக்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர். (எ-402)

## அனந்தியின் பிரேரணையை நிராகரித்தார் சிவஞானம்

யாழ்ப்பாணம் ஜூலை 23

துப்பாக்கி வைத்திருப்பதாக தெரிவித்தமை எனது சிறப்புரிமையை மீறும் செயல் என்று தெரிவித்து பிரேரணை ஒன்றை வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன் முன்மொழிந்தபோதும் அதனை வடக்கு மாகாண பேரவைத் தலைவர் நிராகரித்தார்.

வடக்குமாகாணஅமைச்சரானஎன்னிடம்ஒருதுப்பாக்கியுள்ளதென சக உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தமை எனது சிறப்புரிமையை மீறும் செயல். எனவே அதனை ஒரு தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும்என்றுகோரிவடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானத்துக்கு கடிதம் எழுதினார்.

குறித்த கடிதம் தொடர்பில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் பதில் அனுப்பிவைத்துள்ளார். குறித்த பதிலில் மேற்படிவிடயம்ஒரு தீர்மானமாக இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது. இருப்பினும் இந்த விடயம் தொடர்பில் உங்களின் தன்நிலை விளக்கம் அளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பதில் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் கடந்த சிறப்பு அமர்வில் உறுப்பினர் அஸ்மின்தெரிவித்தகருத்துதொடர்பில்அமைச்சர்அனந்திசசிதரன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (எ-105)

# வடக்கு மாகாணத்தின் தொழிற்கல்விச் சொத்து சீர்கேடுகளாலும், மோசடிகளாலும் பாழாகிறதா?

விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கல்விச் சமூகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடக்கு மாகாணத்தின் மிகப் பெரும்பழைமைவாய்ந்தயாழ்ப்பாணதொழில்நுட்பவியல்கல்லூரியில் பெரும் சீர்கேடுகளும், மோசடிகளும் இடம்பெறுகிறது என்றுதெரிவிக்கப்படுகிறது. உயர் பதவிகளில் உள்ளவர்கள் ஒருவரையொருவர் மாறிமாறிச் சாடுகின்றனர். இது தொடர்பில், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித்திணைக்களம், திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சு துரித விசாரணைகளைமேற்கொண்டு குற்றவாளிகளை இனங்காண வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் அண்மையில்கல்லூரிமுன்பாககவனவீர்ப்பில்ஈடுபட்டிருந்தனர். கல்லூரியின்பதிவாளரால்கல்லூரிவளாகத்துக்குக்குள் பொலிஸாரின் பிரசன்னம் அதிகரித்துள்ளது. பணியாளர்கள் விசாரணைகளுக்கு அழைக்கப்படுகின்றனர் என்று தெரிவித்தே மாணவர்கள் போராடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தை அடுத்தே தொழில் நுட்பக் கல்லூரிக்குள் நடந்த மோசடிகள், மற்றும் சீர்கேடுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன. எனினும் அவை மக்களுக்கோ, அல்லதுஅங்குகல்விகற்கும் மாணவர்களுக்கோ இதுவரை தெரிந்திருக்கவில்லை என்பதே இங்குள்ள சோகம்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னணி தொடர்பில் கருத்துத் தெரிவித்த பதிவாளர், கல்லூரியின்சிலபோதனாசிரியர்கள், தற்காலிக மேலதிகப்பணிப்பாளர், மற்றும்தற்காலிகப்பணிப்பாளர்ஆகியோர்பெரும் நிதிமோசடிகளில்ஈடுபட்டுள்ளனர், அல்லது மோசடிகளில் தொடர்புபட்டுள்ளனர் என்பது கண்டறியப்பட்டு அவர்களுக்கு எதிராக திணைக்களத்தினூடாக நடவடிக்கை எடுக்க முற்பட்ட போதே அவர்கள் ஒன்று சேர்ந்து மாணவர்களைத் திருப்பிவிட்டனர். திணைக்களம் விசாரணைகளைத்துரிதப்படுத்தத்தவறியதாலேயே நான் பொலிஸாரை நாட வேண்டி வந்தது. நான் கையெழுத்திட்டது போன்று கையெழுத்திட்டு, இறப்பு முத்திரிரையையும் எவ்வாறோ தயாரித்து மோசடிகளில் ஈடுபட்டுள்ளனர். பதிவாளர் ஒரு கணக்காளராகச் செயற்பட வேண்டும். எனவேபெரும்மோசடிகளைச்செய்வதற்குமுன்தடுக்க வேண்டும் என்ற நோக்கிலும், திணைக்களம், மற்றும்அமைச்சு நடவடிக்கைகளை துரிதப்படுத்தாமையாலுமேநான்பொலிஸாரை நாடினேன். பகுதி நேர விரிவுரையாளர்கள்வருடாந்தம்விண்ணப்பம்மூலம்கோரப்பட்டாலும்வேறு சிலரேதற்காலிகமேலதிகப்பணிப்பாளரின்செல்வாக்கில்உள்வருவதால்தகுதியானவர்கள்நியமிக்கப்படுவதில்லை.

அத்துடன் மாணவர்களை உள்ளெடுக்கும் நடவடிக்கைகளும் பதிவாளருடையதாகும். திணைக்களம் எனது அலைபேசி இலக்கத்தையேமுதலில்குறிப்பிட்டுள்ளது. இந்த வருடம் எதுவிதமான நடவடிக்கைகளும் என்னால் மேற்கொள்ளப்படாமல்தற்காலிகமேலதிகப்பணிப்பாளர்குழப்பம்விளைவித்துள்ளார். அத்துடன்மாணவர்களின் நிதிசேகரிப்புக்கள் யாவும் பகுதிபோதனாசிரியர்களாலேயே கையாளப்படுவதுசகலரும்அறிந்த விடயமாகும். இது தொடர்பாக மாணவர்கள்விளக்கம்தேவைப்படின் என்னை நேரடியாகக் கேட்கலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வி நிறுவனம் தொடர்பான சீர்கேடுகளைதிணைக்கள அனுமதியின்றிவெளியிடுவதுதவறுஎன்பதாலேயே நான் முன்பு தெரிவிக்கவில்லை பத்திரிகைகளில் என்னைப் பற்றிக் குறிப்பிட்டதன் பின்பு, நான் வாய்மூடியிருப்பது இனியும் வெளி உலகுக்கு உண்மையை மறைப்பது போலாகிவிடும்-என்றார். எனினும் பணிப்பாளர் முகுந்தன் பதிவாளர் கூறிய அனைத்தையும் மறுத்துள்ளார். கல்லூரியில்மாணவர்கள்பணம் செலுத்தும் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் காணாமல் போயுள்ளன. பெண் பணியாளரின் அனுமதியின்றி அவருடைய லாட்சி உடைக்கப்பட்டுள்ளது.

பதிவாளர் தற்போது கதையை மாற்றுகிறார். கல்விசார் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டுள்ளார். அவர்கல்விசாராநடவடிக்கைகளிலேயே ஈடுபடமுடியும் விசாரணைகள் ஆரம்பித்ததும் உண்மை தெரியும் என்று அவர் தெரிவித்தார்.

வாயைக்கட்டி, வயிற்றைக் கட்டி பணம் சேர்த்து மாணவர்களை கற்றல் நடவடிக்கைகளுக்கு அனுப்பிவைக்கின்றோம். அங்கு இவ்வாறானமோசடிகளும், சீர்கேடுகளும்இடம்பெறுவதுகவலைக்குரியது. திணைக்களம் உரிய விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். மாணவர்களுடைய நிதிஎங்குசென்றது, அதைமோசடி செய்தவர்கள்யார்என்பதுதொடர்பில் சட்ட நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வேண்டும், இது போன்று வேறு எந்தக் கல்லூரிகளிலும் இடம்பெறாது பார்த்துக் கொள்ளும் பொறுப்பு திணைக்களத்தைச்சாரும். எனவேதிணைக்களம், மற்றும் அமைச்சு மோசடிகளை தடுக்க முயலவேண்டும்.

மாணவர்கள் தங்களுடைய கல்விச் செயற்பாடுகளை தடையின்றிக் கற்க நிர்வாகத்துக்கு இடையில் நிலவும் இவ்வாறான பிரச்சினைகளை கவனமெடுத்து அவற்றைச்சீர்செய்ய வேண்டும்என்று கல்விச் சமூகத்தினர் வேண்டுகோள் விடுத்தனர். (எ-21)

இ.போ.சபை நடத்துநர்கள்

## பணத்தில் கைவைத்தால் பிணையில் வராத சிறை!

*சட்டமூலம் உருவாக்க நடவடிக்கை என்கிறார் போக்குவரத்து அமைச்சர்*

கொழும்பு, ஜூலை 23
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சில நடத்துநர்கள் பயணிகளுக்குப்பயண அனுமதிச்சீட்டுவழங்காமல்பணம் பெற்றுக்கொள்கின்றனர். அதனால் பிணை வழங்கப்படாதவாறு சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தத்திட்டமிட்டுள்ளதாகப்போக்குவரத்து அமைச்சர்நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது: அரசபேருந்துகளில்பயணிகளுக்குப்பயண அனுமதிச்சீட்டு வழங்காது நடத்துநர்கள் பணத்தை மட்டும் பெற்றுக் கொள்கின்றனர். அந்தப் பணம் சபைக்கு வந்துசேராது. நடத்துநர்களே அந்தப் பணத்தைத் திருடிவிடுவர். அதனால் சபை பெரும்நட்டத்தைஎதிர்கொண்டுள்ளது. இந்தப்பிரச்சினைக்குத்தீர்வாகவேகளவுசெய்பவர்களுக்குத்தண்டனைவழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

"பொதுச் சொத்தின் வருமானத்தைக் குறைத்தார்" என்ற கோவையின் கீழ் அனுமதிச் சிட்டை வழங்காமல் பணம் பெறும் நடத்துநர்களைப் பிணை வழங்காத சிறைத் தண்டனைக்குஉட்படுத்தக்கூடியசட்டமூலம்ஒன்றைத்தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்படியான தவறுகளைக்கண்டறிய அனுமதிச் சீட்டுப் பரிசோதகர்கள் நியமிக்கப்பட்டிருந்தாலும் அவர்கள் தங்கள் கடமையைச் சரிவர, பொறுப்புடன் பணியைச்செய்தால்இத்தகைய களவுகளைக் கட்டுப்படுத்தலாம் என்று மேலும் தெரிவித்தார். (4)

## புழு என்று தடுத்து வைக்கப்பட்டபோதும் ரின் மீன்கள் கடத்தப்பட்டு விற்பனையில்

கொழும்பு, ஜூலை 23
இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ரின்மீன்களில் புழுக்கள் காணப்பட்டதனால் 190கொள்கலன்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றில்குறித்ததொகைகொள்கலன்கள் நாட்டுக்குள் கடத்தப்பட்டுவிற்பனைக்கு விடப்பட்டுள்ளன என்று மற்றொருசெய்திவெளியாகியுள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் ரின்மீன்களில் புழுக்கள் இருந்தன என்றுகூறப்படும்சம்பவம் பதிவாகியிருந்தது.

பாவனைக்கு உதவாதவை என்று சுகாதார அமைச்சு அனுமதி மறுக்கப்பட்டுள்ள 190 கொள்கலன்கள் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. ஆயினும் சுகாதார அமைச்சின் இந்த அறிக்கைவெளியாவதற்கு முன்னரே இந்தக் கொள்கலன்களின் ஒரு தொகுதி நாட்டுக்குள்கொண்டுவரப்பட்டன என்று 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகள் நிறைவேற்று அதிகாரி கலாநிதி ஜயசிங்க,"சுகாதாரஅமைச்சின்பரிசோதகர்கள்சந்தையிலிருக்கும்ரின்மீன்தொகுதிகளைக் கவனமாகப் பரிசோதிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், சுகாதார அமைச்சு இந்த ரின்மீன் கொள்கலன்களை, அவற்றைஉற்பத்தி செய்த நாடுகளுக்கே மீளவும் அனுப்பும்படி சுங்கத்திணைக்களத்துக்கும் அவற்றின் இறக்குமதியாளர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

இந்தக் கொள்கலன்களிலுள்ள ரின்மீன்களை அழிப்பதற்காகநாட்டுக்குள் கொண்டுவந்தால் அவற்றை உள்ளூர் வியாபாரிகள்கடத்திச்செல்லக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இப்படியாகப்புழுக்கள்உருவாவதைத்தடுக்கரின்மீன் உற்பத்தியாளர்கள்தங்கள் உற்பத்திகளின் தரத்தை உறுதிபடுத்த வேண்டும். இலங்கையிலுள்ள ரின்மீன் இறக்குமதியாளர்கள் தரம் குறைந்த ரின்மீன்களைக் குறைந்த விலையில் பெற்றுக்கொண்டிருக்கக் கூடும் எனவும் ஜயசிங்க தெரிவித்தார்.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கச் செயலாளர் பாலசூரியஇதுசம்பந்தமாக கூறுகையில், "28நிறுவனங்களின் ரின்மீன்கள் பெயரிடப்பட்டிருக்கின்றன. ஒரே திகதியில் தயாரிக்கப்பட்டு, ஒரே கா்லாவதித் திகதியும் கொண்ட ரின்மீன்களைப் பரிசோதிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளனர்" என்று கூறினார்.

இலங்கையின்தரநிர்ணய நிலையத் தலைவர் ஹேரத், "சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரின்மீன்களில்தான் புழுக்கள் காணப்பட்டன. அதனைத் தாங்கள் சுகாதார அமைச்சுக்கு அறிவித்தோம்" என்று கூறினார்.

"பன்னாட்டு விதிமுறைகளின்படி இரண்டுக்கும் குறைவான புழுக்கள் இருப்பதை அனுமதிக்கலாம்என்றபோதும், இலங்கையின் தரநிர்ணய தகுதிக்கேற்ப இதனை அனுமதிக்க இயலாது என்பதால் அந்தரின்மீன்களின்இறக்குமதி மறுக்கப்பட்டுள்ளது" என்றுமேலும்கூறினார்.

அதேவேளை இறக்குமதி செய்யப்படும் ரின்மீன்களுக்குச்சந்தையில்பெரும் தட்டுப்பாடுநிலவுகிறதுஎன்றும் கூறப்படுகிறது. (4)

பல்கலைக்கழகங்களிலிருந்து சென்ற

# 500 விரிவுரையாளர்களுக்கு எதிராகக்கடும் சட்ட நடவடிக்கை

*மேற்படிப்புக்கென வெளிநாடு செல்வோருக்கான உடன்படிக்கையை இறுக்குகிறார் அமைச்சர் விஜயதாச*



**கொழும்பு, ஜூலை 23**
**இலங்கைப்பல்கலைக்கழகங்களின்சுமார்500விரிவுரையாளர்களுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என்று உயர்கல்வி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் செய்தியாளர்களிடம்நேற்றுத்தெரிவித்துள்ளதாவது: இலங்கைப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களாகஇருப்பவர்கள் வெளிநாடுகளுக்குச்சென்றுமேற்படிப்புகளைத்தொடரமுடியும். அதுஅரசால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை. அவ்வாறு சென்றாலும் அவர்களுக்கு மாதாந்தம் பல்லாயிரக்கணக்கான ரூபா சம்பளம் தொடர்ச்சியாக வழங்கப்பட்டுவருகிறது.

அவர்கள்வெளிநாடுகளுக்குச்சென்று மேற்படிப்புப் படித்து, நாட்டுக்குத் திரும்ப வந்து மாணவர்களை வளப்படுத்தவேண்டும், மாணவசமூகத்துக்குச் சிறந்த விடயங்களைப் போதிக்க வேண்டும்என்பதும்நோக்கமாகவுள்ளது. ஆனால் அந்த நல்ல வாய்ப்பை அவர்கள் பயன்படுத்தி வெளிநாடுகளில்நின்றவாறேமாதாந்தம்சம்பளம் பெற்றுக்கொண்டபின்னர்நாட்டுக்குத் திரும்ப வரவில்லை. பலர்அவ்வாறு உள்ளனர். அதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதுபற்றியஉடன்படிக்கைகளைமீறி வெளிநாடுகளிலேயே விரிவுரையாளர்கள் பலர் தங்கிவிட்டனர் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அத்தகைய விரிவுரையாளர்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

குறித்த விரிவுரையாளர்களின் மேற்படிப்புக்காக இலங்கை அரசு 800 மில்லியன் ரூபாய்களைச் செலவிட்டுள்ளது. இந்த நிலையில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, கனடா, நோர்வே, சுவீடன் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்ற விரிவுரையாளர்களே நாட்டுக்கு இதுவரை திரும்பவில்லை. அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுமாத்திரமன்றி, எதிர்வரும்காலங்களில்வெளிநாடுகளுக்குமேற்படிப்புக்காகச் செல்லும் கல்வியாளர்களுடனான உடன்படிக்கை இறுக்கமாக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## கோத்தா அரச தலைவராவதை கூட்டுஎதிரணி விரும்பவில்லை

*மகிந்தவும் எதிர்க்கிறார் போல் தெரிகிறது என்கிறார் அமைச்சர் மனோ கணேசன்*

கொழும்பு, ஜூலை 23
முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் பதவிக்கு வருவதைக் கூட்டு எதிரணி உறுப்பினர்கள் பலர் விரும்பவில்லை என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகத் தனது முகநூலில் நேற்று வெளியிட்டுள்ளபதிவொன்றில்மனோகணேசன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: "அண்மையில் வெளியாகிவரும் செய்திகளைப் பார்க்கும்போது கோத்தபாய ராஜபக்ச பதவிக்கு வருவதைப்பொதுஎதிரணிஉறுப்பினர்கள் பலர் விரும்பவில்லை என்றேதெரிகின்றது.

இது தொடர்பாக குமார் வெல்கம, வாசுதேவ நாணயக்கார போன்றோர்பகிரங்கமாகவேதமதுகருத்துக்களைத் தெரிவித்து வருகின்றார்கள்.

ஆனால் இன்னும் வேட்பாளர் யார் என்றே அறிவிக்காத நிலையில் தற்போது கோத்தபாய ராஜபக்ச தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அண்மையில் வெளியிட்டுள்ள கருத்தைப் பார்த்தால், கோத்தபாய ராஜபக்ச பதவிக்கு வருவதை அவரும்விரும்பவில்லைஎன்றே நினைக்கின்றேன்"என்றுஅமைச்சர்மனோகணேசன்மேலும்குறிப்பிட்டுள்ளார். (4)

## ஆட்டைப்பலியிடமுற்பட்டனரென இரு பிக்குகளுடன் நால்வர் கைது

கொழும்பு, ஜூலை 23
களவு கொள்ளை, பாலியல் துர்நடத்தை என்று தொடர்ந்து கடைசியில் கொலை என்று வந்துள்ள நிலையில், கடவுளுக்குச் சேவை செய்ய முற்படாமல்குறுக்குவழியில்சட்டவிரோதமாகப்பணம்தேடமுயன்றனர்என்ற குற்றச்சாட்டில் பிக்குகள் இரண்டுபேர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் ஆரியவேவ பொலிஸ் பிரிவில் மேலும் இரண்டு சகாக்களுடன் புதையல்தேடி நிலத்தை அகழ்ந்துள்ளனர்.

புதையல்தேடலுக்குப்பலிகொடுப்பதற்காகக்கொழுத்த ஆடு ஒன்றையும் குறித்த நால்வரும்கொண்டுசென்று பூசை செய்துள்ளனர். ஆட்டைப்பலி கொடுக்க ஆயத்தமானபோது சிறப்பு அதிரடிப்படையினர் அந்த 4 பேரையும்கைதுசெய்தனர். அவர்கள் ஆரியவேவபொலிஸாரிடம்சட்டநடவடிக்கைக்காகஒப்படைக்கப்பட்டனர்என்றுபொலிஸாரால்தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள மதகுருமார்கள் குறிப்பாகப் பௌத்த பிக்குமார் சமய விவகாரங்களைத் தவிர்த்து ஏனைய விவகாரங்களிலேயே தீவிரமாக ஈடுபடுகின்றனர்என்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றமைக்கு மற்றொரு உதாரணமாக ஆடு பலியிட முற்பட்ட விடயம் அங்குள்ள அததிகாரிகளால் கூறப்பட்டுள்ளது. (4)

## யாழ்ப்பாண குடாவில் 147 இடங்களில் முப்படை

கொழும்பு, ஜூலை 23
யாழ்ப்பாணக் குடாநாட்டில், இலங்கை முப்படையினரின் 147 முகாம்கள் இயங்கி வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடற்படை முகாம்கள் 93, இராணுவ முகாம்கள் 54, விமானப்படை முகாம் ஒன்று என்பன இயங்கி வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவகப் பகுதிகளிலேயே அதிகளவு கடற்படை முகாம்கள் அமைந்துள்ளன. இந்தப்பகுதிகளில் 61முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குடாநாட்டின் ஏனைய கரையோரப் பகுதிகளில், கடற்படையினர் 32 முகாம்களைக் கொண்டிருக்கின்றனர். கடற்படையினர் 269 ஏக்கர் தனியார் காணிகளையும், 260 ஏக்கர் அரச காணிகளையும் ஆக்கிரமித்து, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலை கொண்டுள்ளனர்.

அதேவேளை, யாழ். குடாநாட்டில் 18 பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட 30 இடங்களில் பொலிஸார் தங்கியிருக்கின்றனர்.

18 இடங்களில் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்களில், 14 இடங்கள், தனியார் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்டுள்ளன. பொலிஸ் நிலையங்கள், பொலிஸ்அதிகாரிகளின்பணியகங்கள், விடுதிகள்ஆகியனதனியார்காணிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

அதனால், 200 குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாதநிலையில்உள்ளனர்என்றுமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## புடின் வழங்கிய கால்பந்தில் ஒட்டுக்கேட்டும் கருவிகளா..?

வொஷிங்டன், ஜூலை 23
"அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு, ரஷ்ய அதிபர் புடின் வழங்கிய கால்பந்தில் ஒட்டுக் கேட்கும் கருவிகள் இருக்கலாம்" என்று அந்த நாட்டின் ஆளுங்கட்சியான குடியரசுக் கட்சியினர் அச்சம் வெளியிட்டனர்.
அமெரிக்க அதிபர் ட்ரம்ப்- ரஷ்ய அதிபர் புடின் இருவரும் பின்லாந்துத் தலைநகர் ஹேல்சின்கியில்




கடந்த 12ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பின் போது புடின் ட்ரம்புக்கு கால்பந்து ஒன்றைப் பரிசாக வழங்கினார். பொதுவாக அமெரிக்க அதிபருக்கு வரும் பரிசுப் பொருள்கள் நீண்ட சோதனைக்கு உட்படுவது வழக்கம். தற்போதும் அதேபோல, அந்தக் கால்பந்தை பாதுகாப்பு அதிகாரிகள் சோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.
இந்த நிலையில், ட்ரம்ப் சார்ந்த குடியரசு கட்சியைச் சேர்ந்த செனட்டர் லிண்ட்சே கிரகாம் தனது கீச்சகப் பதிவொன்றில் ட்ரம்ப்-புடின் சந்திப்பைக் கடுமையாக விமர்சித்துள்ளார்.
'ஒருவேளை நான் அந்த கால்பந்தைப் பெற்றிருந்தால், அதில் ஒட்டுக்கேட்கும் கருவிகள் உள்ளனவா? என்பதைச் சோதனைக்கு உட்படுத்தி இருப்பேன். மேலும், அதனை ஒருபோதும் வெள்ளை மாளிகைக்குள் அனுமதித்து இருக்க மாட்டேன்' என்று தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார் அவர். (ம)

## பூஜ்டியமன்ட் கைதாகார்!


மட்ரிட், ஜூலை 23
ஸ்பெயினின் கட்டலோனியா மாகாணத்தின் முன்னாள் அதிபரான சார்லஸ் பூஜ்டியமன்ட் மற்றும் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்துள்ள அவரது நான்கு ஆதரவாளர்கள் மீதான ஐரோப்பிய கைதாணையை திரும்ப பெறுவதாக அந்த நாட்டின் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
முன்னதாக, கட்டலோனியா சுதந்திரத்துக்காக கிளர்ச்சியை உண்டாக்கியதாக பூஜ்டியமன்ட் மீது பதிவுசெய்யப்பட்டுள்ள வழக்கை எதிர்கொள்வதற்காக அவரை ஸ்பெய்னிடம் ஒப்படைக்க முடியாது என்று ஜேர்மனியின் நீதிமன்றம் ஒன்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





## பார்க் கியூன் ஹையிற்கு மேலும் 8 வருடச் சிறை

சியோல், ஜூலை 23
தென்கொரியாவின் முன்னாள் அதிபர் பார்க் கியூன் ஹை, ஏன்றகனவே 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றுள்ள நிலையில் அவருக்கு மேலும் 8 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பிட்டது தென்கொரிய உச்ச நீதிமன்றம்.
தென்கொரியாவின் அதிபராகப் பதவி வகித்த போது பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டார், தனது தோழியான சோய் சூன் சில் என்பவரை அரச விவகாரங்களில் தலையிட அனுமதித்தார், அரச ஆவணங்களை பரிசீலனை செய்ய அனுமதித்தார் உள்ளிட்ட ஏகப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்காக 66 வயதான பார்க் கியூன் ஹைக்கு கடந்த வருடம் 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
அத்துடன், 2016ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதில் அவர் மோசடி செய்தார் என்று தனியானதொரு வழக்கு நடைபெற்று வந்தது. அதிலும் அவர் குற்றவாளி என்று அடையாளம் காணப்பட்டு தற்போது 8 ஆண்டுகள்சிறைத்தண்டனைவிதிக்கப்பட்டுள்ளார். ஆக, 32 ஆண்டுகள் சிறையிலேயே தனது காலத்தைக் கடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார் பார்க். (ம)



## எச்.ஐ.வி. மீண்டும் அதிகரிப்பு

கடந்த சில ஆண்டுகளாக எச்.ஐ.வி. தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நிதியுதவிகள் குறைந்து வருவதால், அதன் தாக்கம் மீண்டும் அதிகரித்துள்ளது என்று பன்னாட்டு ஆய்வறிக்கையொன்று குறிப்பிடுகிறது.
இதே நிலை தொடரும் பட்சத்தில், எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் எச்.ஐ.வி. நோய் தொற்றை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்ற ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலக்கை அடைய முடியாது என்று 'தி லான்செட்' என்ற ஆய்விதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## ஈரானைத் தடுத்தால் ஜலசந்தி முடங்கும்


தெக்ரோன், ஜூலை 23
மத்திய கிழக்கு நாடான ஈரானிடம் இருந்து கச்சா எண்ணெயை ஏனைய நாடுகள் வாங்கக்கூடாது என்று அமெரிக்கா அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், "ஈரானிடம் இருந்து கச்சா இறக்குமதியைத்



தடுத்தால் ஜலசந்தி முடங்கும்" என்று தெரிவித்தார் ஈரான் அதிபர் ரவுகானி.
"ஈரானை அவ்வளவு இலகுவில் தனிமைப்படுத்திவிட முடியாது. அவ்வாறு ஈரானைத் தனிமைப்படுத்த முயன்றால் மத்திய கிழக்கில் இருந்து எந்தவொரு நாடும் கச்சா ஏற்றுமதி செய்வதைத் தடுப்போம். ஜலசந்திக் கால்வாயை முடக்குவோம்" என்று ரவுகானி மேலும் தெரிவித்தார்.
முன்னதாக, ஈரானிடம் இருந்து கச்சா இறக்குமதியைத் தவிர்க்க வேண்டும் என்று இந்தியாவையும் துருக்கியையும் அமெரிக்க கோரியிருந்த நிலையில் இந்தக் கோரிக்கைகளை துருக்கி, இந்தியா இரண்டும் மறுத்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வெள்ளையர்களின் நிலம் வெள்ளையருக்கே


ஹராரே, ஜூலை 23
"வெள்ளையர்களின் நிலம் கையகப்படுத்தப்பட மாட்டாது" என்று சிம்பாப்வே அதிபர் எமர்சன் உறுதி அளித்துள்ளார். இன ஒற்றுமைக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.
சிம்பாப்வேயில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் நடைபெறவுள்ளதை முன்னிட்டு நேற்று முன்தினம் நடந்த பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறாகத் தெரிவித்தார்.
"சிம்பாப்வே முன்னாள் அதிபர் ரொபர்ட் முகாபே அரசு நூற்றுகணக்கான வெள்ளைக்கார விவசாயிகளிடமிருந்து நிலத்தைக் கைப்பற்றுவதை ஆதரித்தது. ஆனால், அவை கடந்த காலம். கறுப்புவிவசாயியோ, வெள்ளை விவசாயியோ, அவர் சிம்பாப்வே விவசாயி" என்று தனது உரையில் எமர்சன் மேலும் குறிப்பிட்டார். (ம)




ரவி ரத்னவேல்

# களுகங்கை நீர்த்தேக்க நீர் நிரப்பு விழா இன்று

நீரைத் தேக்கி வைத்திருப்பதென்பது மிகவும் முக்கியமானது. அது இன்றியமையாததும்கூட. இந்தப் பின்னணியிலேயே பல தசாப்தங்களாக வெறும் திட்டங்களாக மாத்திரமே இருந்துவந்த, இலங்கையின் உள்ளக சமுத்திரம் என வர்ணிக்கப்படுகின்ற பராக்கிரம சமுத்திரத்தை விட ஆறு மடங்கு விசாலமான மொரகஹகந்த-களுகங்கை அபிவிருத்தி திட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பெரும் முயற்சியின் காரணமாக இந்த மண்ணில் இன்று யதார்த்தமாகி இருக்கின்றது. அரச தலைவரால் இன்று ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்ற களுகங்கை நீர்த்தேக்கத்தின் நீர் நிரப்பு விழாவானது எமது நாட்டின் எதிர்கால சுபீட்சத்திற்கான சொத்துக்களை சேகரித்து வைப்பதற்குச் சமமானதாகும்.







**82 ஆயிரம் ஹெக்டெயர் விளைச்சலுக்கான நீர்**

23 ஆயிரம் கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டுவரும் இந்தத் திட்டம் சுமார் 82 ஆயிரம் ஹெக்டெயர் விளைச்சல் நிலத்திற்கான நீரை பெற்றுக் கொடுக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வட, வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களின் விவசாய மற்றும் குடிநீர் தேவையினைப் பூர்த்தி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த மொரகஹகந்த நீரோட்டமானது அதுவரை வட மத்திய மாகாணத்தில் நிலவிவந்த விளைச்சல் நிலங்களின் நீர்ப் பற்றாக்குறையினை முற்றாக நிவர்த்தி செய்திருக்கின்றது. அத்துடன் மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை மேலும் வலுவூட்டும் வகையிலேயே களுகங்கை நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டிருக்கின்றது. நக்கிள்ஸ் மலைத்தொடரின் களுபஹன பிரதேசத்திலிருந்து நாட்டின் வட கிழக்கு நோக்கி ஓடுகின்ற களுகங்கையே இந்த களுகங்கை நீர்த்தேக்கத்தை வந்தடைகின்றது. இந்த நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை எஞ்சிய நீர் நிலத்திற்கு கீழான 7.5 கிலோமீற்றர் நீளமான சுரங்கப் பாதை வழியாக மொரகஹகந்த நீர்த்தேக்கத்திற்கு கொண்டு வரப்படவிருக்கின்றது. வட மத்திய மாகாணம் வழியே வடக்கின் இரணைமடு குளத்தை சென்றடைவதே மொரகஹகந்த களுகங்கை நீரோட்டத்தின் இறுதி இலக்காக அமைய இருக்கின்றது. இங்கேயே ஒரு புதிய கனவுக்கான கருவும் உருவாகின்றது.

**படிநிலைகள்**

1977 ஆம் ஆண்டிற்கு முன் மகாவலி அபிவிருத்தி திட்டம் 30 வருட பயணத்தைக் கொண்டு எட்டாக்கனியாகவே இருந்து வந்தது. இருப்பினும் மகாவலி அபிவிருத்தி என்பது மிகக் குறுகிய காலத்தில் எட்ட வேண்டிய இலக்காகும் எனக் கருதிய அப்போதைய அரசு அதனை துரித மகாவலி திட்டமாக மாற்றி வரலாறு படைத்தது. அந்த மகாவலி அபிவிருத்தி செயற்பாட்டின் ஆரம்பகால திட்டங்கள் மூன்று அம்சங்களைக் கொண்டதாகவே இருந்தன. அந்த மூன்றாவது அங்கத்திலேயே தெற்கிலிருந்து வரும் நீர் வடக்கின் இரணைமடு குளம் வரை செல்ல வேண்டும் என இனங்காணப்பட்டிருந்தது. இருப்பினும் காலத்திற்கு காலம் பல்வேறு காரணங்கள் முன்வைக்கப்பட்டு இந்தத் திட்டம் பிற்போடப்பட்டது. இன்று மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்கம் யதார்த்தமாகிவரும் பின்னணியில் வடக்கிற்கான நீர்ப்பாசனம் எனும் கனவை நனவாக்கிக் கொள்ள வேண்டிய பொறுப்பு தமிழ் தலைமைகளின் தலையாய கடமையாகும் என்பதை மறுப்பதற்கில்லை. இந்த நீர்த்தேக்க ங்களை உருவாக்குவதற்கான நிதி இந்த நாட்டின் அனைத்து மக்களாலும் அரசுக்கு செலுத்தப்படும் வரியின் மூலமும் இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் திருப்பிச் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடன் மூலமுமே பெற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆகையால் தெற்குடன் இணைந்து வடக்கையும் மேம்படுத்த வேண்டிய காலமே இன்று கனிந்திருக்கின்றது.

# கால்பந்து உலகக்கிண்ணத்தை கணித்த விலங்குகள்



கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் ரஷ்யாவில் கோலாகலமாக நடைபெற்று முடிந்துள்ளது. இந்த உலகக்கிண்ணத் தொடரை எந்த அணி கைப்பற்றும் என்று உலகின் பல பாகங்களிலும் பற்பல விலங்குகளை வைத்துக் கணிக்கிறார்கள் ஆர்வலர்கள். அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் ஒளிப்படக் கோர்வையாக வெளியிட்டுள்ளது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ரணிலின் பயணம் எதற்கானது?

இலங்கையின்தலைமை அமைச்சர்ரணில்விக்கிரமசிங்கஇரு நாள்பயணமாகயாழ்ப்பாணம்வந்திருந்தார். இந்தப்பயணத்தின் தொடக்கத்தில் கிளிநொச்சியில் நெற் களஞ்சியம் ஒன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வு ஒன்றிலும் கலந்துகொண்டார். இரு நாள்களிலும் அவர் பல நிகழ்வுகளில் கலந்துகொண்டார். அவற்றில்இந்தியாவின்உதவியுடன்தொடங்கப்பட்ட அவசரநோயாளர் காவு சேவையும் ஒன்று. புதிய அரசமைப்புத் தொடர்பான முயற்சிகள் தேங்கிப் போய் கிட்டத்தட்ட முடக்கத்தை எதிர்நோக்கியிருக்கும்நிலையில்அமைந்ததலைமைஅமைச்சரின்யாழ்ப்பாணப் பயணம் தமிழர்களின் அரசியலில் மிக முக்கியமானது. அப்படியிருந்தும் தனது இந்தப் பயணத்தின்போது அரசியல் தீர்வு குறித்தோ, புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்தோ தலைமை அமைச்சர் வாயே திறக்கவில்லை என்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது.

கடந்தஇரண்டுநாள்களிலும்கிட்டத்தட்ட9பொதுநிகழ்வுகளிலும் வேறுபலதனிநிகழ்வுகளிலும்கலந்துகொண்டிருந்தார்தலைமை அமைச்சர்.இவற்றில் ஓர் இடத்தில்கூட அவர் தப்பித் தவறியும் அரசியல் தீர்வு குறித்தோ புதிய அரசமைப்பின் உருவாக்கம் குறித்தோ வாய் திறக்கவில்லை. தெற்கில் உள்ள ஊடகங்கள் குறிப்பாகச் சிங்கள ஊடகங்கள் இனவாதம் கக்குகின்றபோதும் வடக்கில்உள்ளஊடகங்கள்அவ்வாறு செயற்படவில்லைஎன்று கூறியதலைமைஅமைச்சர்நாடுஎதிர்கொண்டிருக்கக்கூடியமுதன்மையான அரசியல் விவகாரம் குறித்து எதுவும் வாய் திறக்கவில்லை.

மாகாணசபைத் தேர்தலை அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் நடத்துவது என்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்திருக்கும் நிலையில் (தேர்தல் நடக்கும் வரையில் இது உண்மையான முடிவா என்கிற கேள்வி இருந்துகொண்டே இருக்கும் என்பது வேறுவிடயம்)தலைமைஅமைச்சர்சிலபலநலத்திட்டங்களைப் பறைசாற்றியபடி யாழ்ப்பாணம் வந்துவிட்டு அரசியலே பேசாது அமைதி காத்துவிட்டுப் போவதை தற்செயலான ஒன்று என்று மட்டும்கணித்துவிட முடியாது. அதிலும் ஒரு மாத காலத்திற்குள் தலைமை அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு இரண்டாவது தடவையாக வருகை தந்து சென்றிருக்கிறார் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். முதல்வருகையின்போதும்அவர்வடக்கின் அபிவிருத்திபற்றிமட்டுமேபேசினார். இரண்டாவதுவருகையின் போதும்நலத்திட்டங்களுடன்சேர்ந்துஅபிவிருத்திபற்றிப்பேசிச் சென்றிருக்கிறார்.அரசியல் பேசுவதைத் தெரிந்தே தவிர்த்திருக்கிறார்.

தற்போது ஆட்சியில் இருக்கின்ற மைத்திரி, ரணில் அரசைப் பதவிக்குக் கொண்டுவருவதில் கணிசமான பணியை ஆற்றியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதற்கான ஆதரவைத் தமிழர்களும் வழங்கினார்கள். எனினும் இந்த ஆட்சி தமிழர்கள் நலன்சார் விடயங்களிலோ அபிவிருத்தி சார் விடயங்களிலோ அக்கறையுடன் செயற்படவில்லை என்கிற குற்றச்சாட்டு தமிழ் மக்களிடம் பரவலாக உண்டு. இராணுவம் ஆக்கிரமித்து வைத்துள்ள நிலங்களின் விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுதல், போர்க் குற்ற விசாரணைக்கான கலப்பு நீதிமன்றைத் உருவாக்குதல், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம் போன்ற இன்னோரன்ன விடயங்களில் தமிழர்கள் அரசின் உடனடி நடவடிக்கையை எதிர்பார்த்தபோதும் மிக மெத்தனமாக அல்லது செயற்படாமலேயே இருந்தது அரசு. இதனால் இந்த அரசு மீதும் அதன் வழி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதும் தமிழ் மக்களில் ஒரு தொகுதியினர் கடும் அதிருப்தியடைந்தனர். நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் அது எதிரொலித்தது.

இத்தகைய பின்னணியே தொடரும் நிலையில், மாகாண சபைத் தேர்தலும்வந்துவிட்டால்அரசுக்கும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும்அது பலத்த பின்னடைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்கிற அச்சம் தலைமை அமைச்சரை யாழ்ப்பாணம் நோக்கி உந்தித் தள்ளியிருக்கக்கூடும். அபிவிருத்தி, ஆக்கபூர்வமானநலத்திட்டங்கள் என்கிறபசப்புவார்த்தைகளுக்கூடாகத்தமிழர்மனங்களைத்திசை திருப்பும் முயற்சியாகத் தலைமை அமைச்சரின் இந்தப் பயணங்களும் திட்டங்களும் அமைகின்றன என்று அச்சப்படுவதற்கு எல்லாவிதமான நியாயங்களும் இருக்கின்றன.

போர்முடிவுக்குவந்தபின்னர்மகிந்தராஜபக்சவும்இதையேதான் சிந்தித்தார். அரசியல் தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்குத் தருவதைவிட அபிவிருத்தி, நலத் திட்டங்களைத் தந்தால் தமிழர்கள் திருப்திப்பட்டுவிடுவார்கள்என்று அவர்கருதினார். ஆனால், உரிமைக்குப்பின்னர்தான்மற்றைய எல்லாம் என்பதில்தமிழர்கள்திடமாக நின்றார்கள். மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்க உதவினார்கள் என்பதைத் தலைமை அமைச்சர் மறந்துவிடக்கூடாது. முதலில் தீர்வைத்தாருங்கள்அதன்பின்னர்அபிவிருத்தியைப்பற்றிப்பேசலாம்என்று வடக்கு மாகாண முதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில்கூட தெரிவித்திருந்தார். எனவே இதுபோன்ற சில்லறைத் திட்டங்களால் தமிழ் மக்களின் மனங்களை மாற்றிவிட முடியும் என்று எண்ணாமல், புதிய அரசமைப்பை இந்த வருடத்துக்குள் நிறைவேற்றவும் அதற்கூடாகத் தீர்வு ஒன்றை நோக்கி முன்னேறவும் திடமான நடவடிக்கையைத் தலைமை அமைச்சர் முன்னெடுக்கவேண்டும்.

# தூக்கும் எதிர்ப்பும்

சேரலாதன்

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், தடுப்பில் இருந்தவாறே போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ள கைதிகளைத் தூக்கிலிடுவதற்கான ஆவணங்களில் தாம் கைச்சாத்திடப் போவதாக அண்மையில் அரசதலைவர் தெரிவித்திருந்தார். குறித்த நடவடிக்கைக்கு பௌத்த சமூகங்களிடமிருந்து ஆட்சேபனைகள் எழுந்தபோதிலும், சமூகத்தின் நலன் கருதி இதுபோன்ற ஆட்சேபனைகளுக்கு மத்தியிலும், இது போன்ற குற்றங்களைக் கட்டுப்படுத்த தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துதல் அவசியமாகிறது என்று சிலர் தமது நியாயத்தை வெளிப்படுத்தினர்.

### அமைச்சரவை அனுமதி

அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனரட்னவின் கூற்றுப்படி தூக்குத்தண்டனையை நிறைவேற்றுவதற்கான அனுமதியை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. அதன்படி பெரிய அளவில் போதைப் பொருள் குற்றங்களில் ஈடுபட்டு நீதிமன்றத்தால் தூக்குத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட 19பேர் முதலில் தூக்குத் தண்டனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். தூக்குத் தண்டனை என்பது நவீன உலகின் பார்வை யில் அநாகரிகமான, காட்டுமிராண்டித்தனமான செயலாகப் பார்க்கப்படுகிறது. ஆயினும் தூக்குத்தண்டனைக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டிய பௌத்த மதகுருமாரும், கத்தோலிக்க மதகுருவான பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையும் இதனை வரவேற்றுள்ளதோடு (இவர்கள் நாட்டில் கருக்கலைப்புக்கு எதிராக குரல் கொடுத்தவர்கள்) இன்று அரச தலைவரின் தைரியமான முன்னெடுப்பு இது என அரசின் இந்த முடிவைப் பாராட்டியுமுள்ளனர்.





அடுத்த கட்டமாக, அலுகோசு என அழைக்கப்படும், தூக்குத் தண்டனைக் கைதிக்கான தண்டனையை நிறைவேற்றும் இரண்டு பேரைத் தேடுவதும் பெரும் சவாலாக அமையப்போகிறது. அப்படி அலுகோசுகளாகத் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும். தூக்கிலிடுவதற்கான கயிறு பாகிஸ்தானில் இருந்தே கொண்டுவரப்பட வேண்டும். இவைகளை செய்துமுடிக்க கால அவகாசம் தேவை. அத்துடன் இதுவொரு துரிகதிச் செயற்பாடும் அல்ல.

### வரலாற்றுப் பதிவுகள்

தூக்குத்தண்டனை நடைமுறையை மூன்று ஆண்டுகள் காலத்துக்கு இடைநிறுத்திவைத்த முன்னால் தலைமை அமைச்சர் பண்டாரநாயக்க மறைந்த தலைமை அமைச்சர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக 1956ஆம் ஆண்டில் பதவிக்கு வந்தவுடன் அதுவரை நடைமுறையில் இருந்து வந்த தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதை மூன்று ஆண்டுகள் காலத்திற்கு ஒத்திவைத்தார். ஆயினும் அவரைக் கொலை செய்தவருக்குத் தூக்குத்தண்டனை வழங்குவதற்காக 1959ஆம் ஆண்டில் தூக்குத் தண்டனை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

1978ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி ஒருசில மாற்றங்களுடன் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்தும் விதத்தில் புதிய அரசமைப்பில் உள்ளடக்கியிருந்தது. அதாவது தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் அதிகாரம் அந்த வழக்கை விசாரித்த நீதியரசர், சட்டமா அதிபர், நீதி அமைச்சர் ஆகியோருக்கே உள்ளது என்பதுதான் அந்த மாற்றம். அப்படி இந்த மூன்று பேரும் ஒரு முடிவை எட்டாவிட்டால், குறித்த தூக்குத் தண்டனைத் தீர்ப்பு ஆயுள் தண்டனையாக மாற்றப்படும் தூக்குத் தண்டனை அரச தலைவரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். என்றபோதிலும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதன் முடிவு ஆயுட்காலத் தண்டனையாகவே இருந்துள்ளது.

1976ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதி தான் இலங்கையில் கடைசியாக கைதியொருவருக்கு தூக்குத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டில் அப்போது அரச தலைவராக இருந்த சந்திரிகா பண்டாரநாயக மீண்டும் தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்த பல தடவைகள் முயன்றபோதிலும் அது தோல்வியில் முடிந்துள்ளது. கடைசியில் தூக்குத் தண்டனைத் தீர்ப்புக்கள் 2001ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டன.

2004ஆம் ஆண்டு நவம்பர் 19ஆம் திகதி உயர் நீதிமன்ற நீதியரசர் படுகொலை செய்யப்பட்டார். அதைக் காரணம் காட்டி மீண்டும் தூக்குத்தண்டனையை நடைமுறைப்படுத்த அரசு முயன்றபோதிலும் அது பல்வேறு புற அழுத்தங்களின் விளைவாக தோல்வியில் முடிந்தது.

இந்த மாதம் 13ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி கலாநிதி தீபிக உடகம, அரச தலைவர் மைத்திரிக்கு எழுதியுள்ள கடிதத்தில், "போதைவஸ்து கடத்துபவர்களைத் தூக்குத்தண்டனைக்கு உட்படுத்துவதென்ற முடிவு மிக மோசமான மனித உரிமை மீறல்" எனக் குறிப்பிட்டுள்ளார். குறித்த கடிதத்தின்படி உலகிலுள்ள 100நாடுகள் தூக்குத்தண்டனையை தடை செய்துவிட்டன. மேலும் 60நாடுகள் தூக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்துவது இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுக்காட்டியுள்ளார். 1976ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையில் தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்பதற்காக இலங்கையை அவர் பாராட்டியுள்ளார்.

### குற்றங்கள் குறையுமா?

தூக்குத் தண்டனை நிறை வேற்றப்படுவதனூடாக குற்றங்கள் குறைந்துள்ளன என கூறுவதற்கான எதுவித ஆதாரங்களோ தரவுகளோ இல்லை என கலாநிதி தீபிகா உடுகம கூறுகிறார்.

சட்டமா அதிபர், வழக்கை விசாரித்த நீதியரசர், மற்றும்நீதிஅமைச்சர்ஆகியோர்தூக்குத்தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்துவதென முடிவு செய்வது சில சந்தர்ப்பங்களில் நிரபராதி ஒருவர் தண்டனைக்கு உள்ளாகும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவும் கூடும் என கலாநிதி உடகம குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட பலர், பல வருடங்களுக்குப் பின்னர் நிரபராதிகள் என அடையாளம் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சமீபத்தில் அமெரிக்காவில் ஒரு கைதி, 23வருட சிறைவாசத்தின் பின்னரே அவர் நீதியான முறையில் விசாரிக்கப்படவில்லை என்பதால், விடுதலை செய்யப்பட்டுள்ளார். சில சந்தரப்பங்களில் குற்றம் சாட்டப்படுபவர்களின் சார்பில், அவர்களின் நியாயத்தை சரியாக எடுத்துகூறி வாதாடக்கூடிய சட்ட ஆலோசகர் கிடைக்காமற் போவது அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பொருளாதார பிரச்சினைகள் காரணமாக சட்டத்தரணி ஒருவரை நாடுவதில் இயலாமை இருந்தாலும், நிரபராதி ஒருவர் குற்றவாளியாக்கப்படக் கூடும்.

குற்றங்கள் இழைக்கப்படும் தன்மைக்கு ஏற்ப அல்லது அந்தக் குற்றங்கள் சமூகத்திற்கு ஏற்படுத்தக் கூடிய பாதிப்புக்களை மனதில் கொண்டு தண்டனைகளின் தன்மைகள் இருக்க வேண்டுமென கலாநிதி உடகம வலியுறுத்தியுள்ளார்.



# வறுமையால் அவல நிலை

இந்துமதி

மண்ணெண்ணெய் விநியோகத்தில் அரசுக்குப் பெரும் நட்டம் ஏற்படுவதாக பெற்றோலிய வள அமைச்சர் கூறியிருந்தார். பின் தங்கிய, மின்சார வசதி கிடைக்காத பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மண்ணெண்ணெய்யில் எரியும் விளக்குகளை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். இதனால் மண்ணெண்ணெய்யின் பாவனை இவர்கள் மத்தியில் அத்தியாவசியமான ஒன்றாக ஆகியுள்ளது. இவர்களை மனதில் கொண்டே அரசு மண்ணெண்ணெய்க்கு அதிக மானியத்தை வழங்கி வருகின்றது. ஓர் அரசைப் பொறுத்தவரையில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களைப் பாதுகாக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பை அந்த அரசு கொண்டுள்ளது. இலங்கை அரசு வறிய மக்களுக்கு சமுர்த்தி உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும் அந்த உதவிகள் அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. இதைவிட ஏராளமான வறிய குடும்பங்கள் சமுர்த்தி திட்டத்தில் உள்வாங்கப்படாது இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. இவர்களையும் அந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்வது அவசியமானதாகும்.

**அபிவிருத்தியே வறுமையை ஒழிக்கும்**

ஒரு நாடு அபிவிருத்தியடைந்து முன்னேற்றம் காணும்போது அந்த நாட்டிலிருந்து வறுமை நிலை தானாகவே ஒழிந்துவிடும். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி என்பது எட்டப்படமுடியாத ஒன்றாகவே மாறிவிட்டது. இதனால் இலங்கையில் வறுமை ஒழிவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்படுகின்றன.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில், பணக்காரர்கள் ஒரு புறத்தில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்க, மறுபுறத்தில் ஒருவேளை உணவுக்குக் கூட வழியில்லாத வகையில் இன்னொரு சாரார் அல்லாடிக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. இதற்கு நாட்டின் வளங்கள் சமமாகப் பிரிக்கப்படாமையே காரணமென சோசலிசவாதிகள் கூறுகின்றனர். தாம் இட்ட முதலும், தமது உழைப்பும் சேர்ந்தே தம்மைப் பணக்காரர்களாக்கிவிட்டதாக முதலாளித்துவவாதிகள் கூறுகின்றனர். வாழ்க்கையில் முன்னேறுவதற்கு கடுமையான உழைப்பு அவசியம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆரம்பத்தில் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்த பலர், தமது கடுமையான உழைப்பினால் கோடீஸ்வரர்களாக மாறிய விந்தையை நாம் அறிந்து தான் இருக்கின்றோம். ஆனால் கடுமையாக உழைக்கின்ற கூலித் தொழிலாளி ஒருவனின் வாழ்க்கை இறுதி வரை வறுமையுடன் தொடர்வதையும் நாம் கண்டு கொண்டுதான் இருக்கின்றோம். ஆகவே உழைப்பு என்பது அதன் பின்னணியைப் பொறுத்தே பயனைத் தரும் என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

**சிரமத்தில் அரச ஊழியர்கள்**

அரசில் பணிபுரிந்து சம்பளம் பெறுகின்ற பணியாளர்கள் அனைவருமே வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறமுடியாது. சம்பளம் வழங்குவதில் காணப்படுகின்ற ஏற்றத் தாழ்வுகளும், வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பளம் வழங்கப்படாமையும் இதற்கான காரணங்களாகும். அரசினால் ஒரு பொதுவான சம்பளக் கொள்கையை இதுவரையில் கடைப்பிடிக்க முடியவில்லை என்பது மனவருத்தத்துக்குரியது.



**விவசாயிக்கு வேண்டும் முதன்மை நிலை**

நாட்டு மக்களின் பசியைப் போக்குபவர்கள் விவசாயிகள் என்றே கூறவேண்டும். அவர்கள் சேற்றில் கால்களை வைத்தால்தான் மற்றவர்கள் சோற்றில் கையை வைக்க முடியுமெனக் கூறுவார்கள். நாள் முழுவதும் கடுமையாகப் பாடுபடுகின்ற விவசாயிகளின் வாழ்க்கை சிறக்க உதவ வேண்டியது அரசின் முக்கிய கடமையாகும். விவசாயத்தில் ஏற்பட்ட நட்டம் காரணமாக இந்தியாவில் விவசாயிகள் தவறான முடிவுகளை எடுப்பதாக ஊடகங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். இந்த நிலை, இதுவரை இங்கு இடம்பெறவில்லை. ஆயினும் அதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன என்பதை மறுக்க முடியாது. ஏனென்றால், விவசாயத்துறை இங்கு பெரும் சவால்களை எதிர்கொண்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. வடபகுதி விவசாயிகளுக்கு முயச்சிக்கேற்ற இலாபம் கிட்டுவதில்லை.

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களுக்கு நியாயமான விலை இங்கு கிடைப்பதில்லை. அதிலும் விவசாயப் பொருள்களின் அறுவடைக் காலங்களில் அவற்றின் விற்பனை விலையில் பெரும் சரிவு ஏற்படுகின்றது. இதனால் போட்ட முதலைக்கூட திரும்பப் பெற முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். பெரும் பொருளாதார இழப்பீட்டுக்கும் இவர்கள் ஆளாகின்றனர். இதில் வடபகுதி விவசாயிகள்தான் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தாம் உற்பத்தி செய்கின்ற பொருள்களை விற்பனை செய்வதற்கான வசதிகள் இங்கு இல்லாததால், வியாபாரிகள் கோரும் விலைக்குத் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அல்லது வெகுதொலைவில் உள்ள தம்புள்ள பொருளாதார மையத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். அங்கும் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது. இதனால் விவசாயத்தில் நட்டமடைந்து வறுமை நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர்.

எந்தவொரு நாட்டிலும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நிலவுமானால் அது மக்களிடையே விரிசலை ஏற்படுத்திவிடும். கொள்ளைகள், திருட்டுக்கள், கொலைகள் ஆகியவை இடம்பெறுவதற்கு இதுவே காரணமாகி விடுகின்றது.

அது மட்டுமல்லாது, பொருள் தேடுவதற்காக போதைவஸ்துக் கடத்தல் போன்ற சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவதற்கும் இது வழிவகுக்கிறது. பசியால் பல நாள்கள் வாடுகின்ற ஒருவன் ஒருவேளை உணவைப் பெறுவதற்காக கொலை செய்வதற்குக்கூட அஞ்சமாட்டான்.

ஆகவே வறுமைக் கோட்டுக்கு மேலே மக்களைக் கொண்டு வரவேண்டியது அரசுகளின் முதன்மைக் கடமையாகும்.

வறுமை நிலை குடிகொண்டிருக்கின்ற ஒரு நாட்டில் மகிழ்ச்சியையும், அமைதியையும் எதிர்பார்க்க முடியாது. மக்கள் புரட்சி வெடிப்பதற்கும் இதுவே காரணமாக அமைந்துவிடும்.

இலங்கையிலும் வறுமை நிலைக்குத் தள்ளப்படுபவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துச் செல்கின்றது. இதையொரு அபாய அறிவிப்பாகக் கருதி அரசு வறுமையைப் போக்குவதற்கான முயற்சிகளில் முழுவீச்சுடன் இறங்க வேண்டும். இல்லையேல் பாதகமான விளைவுகள் ஏற்பட்டுவிடும்.

## ஆசிரியருக்கான கடிதம்

# வீதி அபிவிருத்தி அதிகார சபை கவனிக்குமா?

பரந்தன் முல்லைத்தீவு தலைமை வீதி ஏ35 என்ற குறியீட்டுடன் நீண்டு கிடக்கின்றது. இந்த வீதியில் பரந்தனில் இருந்து பயணிக்கும் போது இருபத்தோராம் கிலோமீற்றரைக் குறிக்கும் எல்லைக்கல் கடந்தால் தேராவில் குளத்தின் ஒரு கரையில் போர்க் காலத்தில் நடப்பட்ட தேக்கு மரங்கள் அழகாகக் காட்சியளிக்கும். அதன் உள்ளே அமைக்கப்பட்ட அதிக வளைவுகளுடனான வீதி தொடர்ச்சியாக ஏற்படும் விபத்துக்க ளால் பல உயிர்களைக் காவு கொள்வதோடு, அங்கவீனர்களையும் உருவாக்கி வருகின்றது.

மிக நேராக அமைந்ததுபோல் தெரிந்த வீதியில் திடீரென மலைநாட்டின் வீதிகளை ஒத்த பல வளைவுகள் வருகின்றன. இதனால் குழப்பமடையும் சாரதிகள் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் விபத்தைச் சந்திக்கின்றனர். அத்துடன் இந்த வளைவுகள் இளைஞர்களின் சாகசக் களமாகவும் மாறி வருகின்றது.

வளைவுகளில் நடப்பட்டிருந்த அனைத்துக் குறியீடுகளும் விபத்தினால் சேதமடைந்தே உள்ளன.

தேராவில் குளம் இரண்டாக பிரிபடும் வகையில் ஏற்கெனவே இருந்த வீதிக்கு பாலம் ஒன்றை புதிதாக அமைத்து வீதியினை நேர் செய்வதே இதற்குத் தீர்வாகும் என்பது பிரதேச மக்களின் கருத்தாகும்.

எனவே இதனை சம்பந்தபட்டவர்கள் கவனத்தில் கொள்வதோடு, மாகாண சபை நிர்வாகமும் அக்கறை கொண்டு போரால் பாதிக்கப்பட்டு நொந்து போயுள்ள மக்கள் மேலும் உயிர் இழப்புக்களையும், உடல் அவயங்களையும் இழக்காமல் இருக்க ஆவண செய்ய வேண்டும். அது பொறுப்பானவர்களின் கடமையும் கூட. வீதியைச் சீரமைப்பது நீண்டகாலப் பணியாக இருக்கலாம். அது உண்மையும்கூட. எனவே அதற்கு முன்னதாக ஏற்கனவே சேதமடைந்திருக்கும் வீதி அறிவித்தல் பலகைகளை அகற்றி விட்டு அந்த இடங்களுக்கு புதிய பலகைகளை பிரதியீடு செய்தால் அது விபத்துக்களைத் தற்காலிகமாகக் குறைப்பதற்கான உபகாரமாக அமையும். உரியவர்கள் கவனமெடுப்பார்கள் என்று நம்புவோம்.

*நலன்விரும்பியும் பாதிக்கப்பட்டவனும்*

# தனுஷுடன் இணையும் விஷ்ணு விஷால்



விஷ்ணு விஷால் நடிப்பில் "சிலுக்குவார் பட்டி சிங்கம்', 'ராட்சசன்', 'ஜெகஜாலக் கில்லாடி' உள்ளிட்ட படங்கள் உரு வாகி இருக்கின்றன. இதில் ராட்சசன் படம் விரைவில் திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த நிலையில், விஷ்ணு விஷால் தற்போது வெங்கடேஷ் ராதாகிருஷ்ணன் என்ற புதுமுக இயக்குநர் இயக்கத்தில் நடித்து வருகிறார்.

கிராமத்து பின்னணியில் உருவாகும் இந்தப் படத்தில் விஷ்ணு விஷால் ஜோடியாகஷிவானியும், முக்கியகதாபாத்திரங்களில் பிரபு, சரண்யா பொன்வண்ணன், முனிஸ்காந்த், சிங்கம்புலி, பிரவீன், நான் கடவுள் ராஜேந்திரன் உள்ளிட்ட பலரும் நடிக்கின்றனர்.

இந்தப் படத்தை முடித்த பிறகு விஷ்ணு விஷால், தனுஷின் ஒரு படத்தில் நடிக்க இருக்கிறார்.

இதுகுறித்து விஷ்ணு விஷாலிடம் கேட்ட போது, தனுஷ்தயாரிப்பில்நடிக்கஇருப்பது உண்மை தான். எனினும் அந்த படம் குறித்த தகவல்களை தற்போது தெரிவிக்க முடியாது. இந்த படம் குறித்த மற்ற தகவல்களை தனுஷ் விரைவில் வெளியிடுவார் என்று தெரிவித்தார்.

## புத்தகப் பொன்மொழிகள்



★ நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்ப வனே என் தலைசிறந்த நண்பன்.
ஆபிரகாம் லிங்கன்

★ ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக் காட்டுங்கள்; அவனே எனது வழிகாட்டி!
ஜூலியஸ் சீசர்

★ உலக வரைபடத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்கெல்லாம் போக விரும்புகிறாயா, ஒரு நூலகத்துக்குச் செல்..
டெஸ்கார்டஸ்

★ போதும் என்று நொந்துபோய், புதுவாழ்வைத் தேடுகிறீர்களா... ஒரு புதிய புத்தகத்தை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள்.
இங்கர்சால்


★ சில புத்தகங்களைச் சுவைப்போம்... சிலவற்றை அப்படியே விழுங்குவோம்... சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்!
பிரான்சிஸ் பேக்கன்

★ புரட்சிப் பாதையில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே!
லெனின்

★ உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை!
ஆஸ்கார் வைல்ட்

★ உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு!
சிக்மண்ட் ஃப்ராய்ட்

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பிறருக்கு உதவுகின்ற எண்ணம் அதிகரிக்கும். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். ஆதாயம் பன்மடங்கு அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பார்ப்பு ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில் வியாபார வளர்ச்சியால் லாபம் உயரும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:**பேச்சில் அன்பும், பண்பும் நிறைந்திருக்கும். விலகிய உறவினர் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் நிலுவைப்பணி நிறைவேறும்.

**கடகம்:** உங்களது நற்செயலை பிறர் ஏளனம் செய்யலாம். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கால அவகாசம் தேவைப்படும். இலாபம் சுமார்.

**சிங்கம்:**கடந்தகால பணிகளுக்கான நற்பலன் தேடிவரும். தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும்.

**கன்னி:** உறவினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியை நிறைவேற்றுவீர்கள். இலாபம் உயரும்.

**துலாம்:** பணியில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில் வியாபாரத்தில் இலாபம் சுமாரான அளவில் இருக்கும். விரிவாக்கப்பணிக்காக கடன் வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:** நண்பர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**தனுசு:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.லாபம் திருப்தியளிக்கும்.

**மகரம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவுக்கான பணத்தேவை அதிகரிக்கும்.

**கும்பம்:** நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டுக்கு தேவையான ஆடம்பர பொருள்கள் வாங்குவர்.

**மீனம்:** மனதில் குளறுபடி ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.




எனக்கு என்னைப் பிடித்திருந்தாலும், பிடிக்காமல் விட்டாலும், என்னோடு நான் வாழ்ந்துதான் ஆக வேண்டும் என்பதே எனக்கான வாழ்க்கையாக இருக்கிறது

twitter.com/Yavanika_krish
நோக்கம் உயர்ந்ததாக இருந்தால் மட்டும் பத்தாது. அதை அடைவதற்கான வழிமுறையும் சரியாக இருக்கணும்....

twitter.com/selva_twitz.
சரியோ! தவறோ !மனதில் பட்டதை பட்டாசு போல படபடவென்று பேசிவிடுங்கள், எரிமலையை போல குமுறிக்கொண்டிருந்தால் வெடிக்கையில் பாதிப்புப் பெரிதாக இருக்கும்

twitter.com/Scientist_Man
ஆயிரம் எதிரி இருந்தாலும் போராடி வெல்லலாம்/தோற்கலாம். ஆனால் ஒரு துரோகி இருந்தால்கூட போராட வாய்ப்பே கிடைக்காது தோல்வி மட்டும்தான் நிரந்தரம்.

கோழியின் கிறுக்கல்!! Retweeted
Sairam @SairSairam · 15h
"ஆசையே துன்பத்துக்குக் காரணம்" என்று கூறிய புத்தருக்கும் ஆசை இருந்திருக்கிறது.... ஆசைப்படக் கூடாது என்று.

twitter

ஆஹான்!! @
தைலம் தேய்ச்சி வர்ற எரிச்சல விட

இந்த போன்ல நெட்டு வேலை செய்யாத போது வர்ற எரிச்சல் தான் மிகக் கொடுமையானது.....

1. யாராலும் திருடிப் படிக்க முடியாத ரகசியப் புத்தகம் கனவு

2. அமைதியை விட சக்தியான சத்தம் உலகில் இல்லை. உன் அமைதியை ஒருவன் புரிந்து கொண்டால் உன் வார்த்தைகளை அவன் தவறாக ஒரு போதும் புரிந்து கொள்ள மாட்டான்.

3. கனிணிக்குள் வாழ்க்கையைத் தேடுகிறோம், கடைசியில் உழவனின் உழைப்பைத் தின்று வாழ்கிறோம்.

வாழ்க்கை ஒரு வட்டம்னு சொன்னதுக்குப் பதிலா..



வாட்ஸ் அப் ஒரு வட்டம்னு சொல்லி இருக்கலாம் வந்ததேதான் வருது....

எல்லா டெஸ்ட்டுக்கும் படிச்சிட்டுப் போகணும்....



ஐ டெஸ்ட்டக்கு மட்டும் போய்ப் படிச்சா போதும்....

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 | | 7 | | |
| 8 | | | | 1 | 4 | | | |
| 9 | | | | | | | 6 | 3 |
| | 1 | | | | | | 5 | |
| | | | | | 2 | | 7 | 4 |
| | 8 | | | | | | 9 | |
| 7 | | | | | | | 1 | 2 |
| 5 | | | | 3 | 7 | | | |
| | | | | 8 | | 6 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 1 | 8 | 4 | 2 | 6 | 3 | 5 |
| 6 | 3 | 8 | 5 | 9 | 1 | 2 | 7 | 4 |
| 2 | 4 | 5 | 6 | 3 | 7 | 8 | 9 | 1 |
| 8 | 2 | 4 | 9 | 7 | 6 | 5 | 1 | 3 |
| 5 | 1 | 6 | 4 | 8 | 3 | 7 | 2 | 9 |
| 7 | 9 | 3 | 1 | 2 | 5 | 4 | 8 | 6 |
| 3 | 5 | 2 | 7 | 1 | 4 | 9 | 6 | 8 |
| 4 | 8 | 7 | 3 | 6 | 9 | 1 | 5 | 2 |
| 1 | 6 | 9 | 2 | 5 | 8 | 3 | 4 | 7 |

நேற்றைய விடை

ஓம் விஸ்வ பிரம்மனே நமஹ

## சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் கதிரிப்பிள்ளை தங்கராசா (தங்கன்)


தோற்றம் 10.01.1947 மறைவு 23.06.2018

கடந்த 23.06.2018 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் செய்திகேட்டு எமது இல்லத்துக்கு உடன் வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு. இன்று (23.07.2018) திங்கட்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியள வில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், தொடர்ந்து இடம்பெறும் நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மில் றோட்,
காளிகோயிலடி, மல்லாகம். (CS.13170) (13 .17) **குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 10 . 07 . 1939



மறைவு 23 . 06 . 2018

வாதரவத்தையினைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வாழ்விடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் அருளானந்தம் நவரட்ணராஜா

வானத்து நிலவாய் வையத்தில் மிளிர்ந்து
வாண்மையுடன் வாழ்வியலை நகர்த்தி
வாழ்வின் தர்மத்தை மனதினில் நிறுத்தி
வையகம் போற்றிட வாழ்ந்திட்ட தலைவரே!



இன்று (23.07.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

"மலர்வாசம்"
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (CS/18456)(11) **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி தம்பிராசா

**(இளைப்பாறிய ஆசிரியை - கோண்டாவில் இந்துக்கல்லூரி)**



தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி தம்பிராசா 20.07.2018 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும், கார்த்திகேசு தம்பிராசாவின் (இளைப்பாறிய ஆசிரியர் - கோண்டாவில் இந்துக் கல்லூரி) அன்பு மனைவியும், கார்த்திகேசு - அன்னம்மா தம்பதிகளின் அன்புமருமகளும், காலஞ்சென்ற பாலஸ்காந்தன் மற்றும் சிவபாலன் (கனடா), கலையரசி செல்வகுமார் (ஆசிரியை - யாழ்.இணுவில் மத்திய கல்லூரி), கருணாபாலன் (கனடா) கலாறஜனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அன்ரன் செல்வகுமார், வாசுகி, சுகி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சரஸ்வதி இராஜரட்ணம் (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை) காலஞ்சென்றவர்களான கமலேஸ்வரி ஜெயராஜசிங்கம், பரமேஸ்வரி சண்முகரட்ணம் (கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற ஆசிரியை), இராஜேஸ்வரி இந்திரன், செல்வரட்ணம் சிவக்கொழுந்து (ஜேர்மனி), ஆனந்தகிருஷ்ணன் மற்றும் தர்மராஜா (பிரான்ஸ்), Dr.தவமலர் சீவரட்ணம் (ஓய்வுபெற்ற சித்த வைத்திய அதிகாரி), காலஞ்சென்ற சி.செல்வராஜா (வாழைச் சேனை கடதாசிச் தொழிற்சாலை பொறியியலாளர்), சி.சச்சிதானந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புசகோதரியும், S. ராசரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - லண்டன்), காலஞ்சென்றவர்களான ஜெயராஜசிங்கம் (கணக்காளர்), P.சண்முகரட்ணம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - கோண்டாவில் இந்துக்கல்லூரி),S.இந்திரன் மற்றும் S.சீவரட்ணம், சொர்ணகாந்தி பங்கஜ செல்வி, சரோஜா, ராசி ஆகியோரின் அன்பு மைத்துனியும், வித்தியகலா (பொறியியலாளர் - லண்டன்), சுரேஸ்குமார் (Dental Surgen London), கேமேந்திரகுமார் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பெரியம்மாவும், சுனீத்தா செல்வரட்ணம் (ஆசிரியை - கிளிநொச்சி), மயூரன் (ஜேர்மனி), சசி, சுவி (லண்டன்), ரோகினி (Draft man), குமுதா (சங்கீத பூசணம்), லதா (Computer Diploma), சிவப்பிரியன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), தர்சனா (பட்டதாரி ஆசிரியை - கொ/ விவேகானந்தா தேசியக்கல்லூரி), பபியா (போதனா ஆசிரியர் - வயம்பா பல்கலைக்கழகம்), கௌசல்யா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், கார்த்திகா, ஹரிசன், யுவானி ஆகியோரின் அப்பம்மாவும், காருண்யன், கிருபிகா, ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (23.07.2018) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தாவடி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு, கொக்குவில்.** (CS/18446)(11,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 607 7142**

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 06 . 1934



மறைவு 20 . 07 . 2018

### பொன்னையா பாலசிங்கம்

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாயை பிறப்பிடமாகவும், குளப்பிட்டிச்சந்தி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசிங்கம் (20.07.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் புத்திரரும், காலஞ்சென்ற திரு. திருமதி சின்னத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற தர்மபூபதியின் அன்புக்கணவரும், சத்தியாதேவி, சசிகலாதேவி, காலஞ்சென்ற புவனேந்திரராஜா மற்றும் மோகனராஜா, காலஞ்சென்ற கிருபாலராஜா மற்றும் நித்தியாதேவி, தர்மபாலினி, சுயேந்தன் ஆகியோரின் தந்தையும், செல்வராஜா, காலஞ்சென்ற மங்களேஸ்வரன் (பேபி) மற்றும் சிறிலக்சுமி, விவேகினி, ஜெயானந்தன், பவ்யாதேவி ஆகியோரின் மாமனாரும், தயாரூபன், கபித், டனிதா, திவ்யன், சுஜீபன், கயன், பவித்ரா, பவ்சிகன், சயிர்தன், கர்சன், குஷானி, தனுஜா, விதுஜா, அனுஜா, யனுசன், நிவிசன், கர்னித், பிறேசா ஆகியோரின் பேரனும் தங்கரத்தித்தின் மைத்துனரும், காலஞ்சென்ற பரமசிவத்தின் சகலனும், வாகீசன், சிவசுதன், விஜித்தா, சாதுரியா, சிந்துஜா ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2018) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் (குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்) நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனக்கிரியை செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆனைக்கோட்டை வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**குளப்பிட்டிச் சந்தி.** (CS/18453)(11)

தகவல்:
**குடும்பத்தினர்.**
**ம.சசிகலாதேவி**

**078 552 3231**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதி

### நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா 2017/18 (அணி III )

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**அனுமதிக்குரிய தகைமைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏதாவது ஒருகற்கை நெறியில் பட்டம்
2. ஆங்கிலத்தில் திருப்திகரமாக தொழில் செய்வதற்கான அறிவு
3. கணினிப் பிரயோகத்தில் திருப்திகரமான அறிவு (முன்னுரிமை)

தற்போது நூலகவேலையுடன் தொடர்புடைய விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

**கற்கைநெறிக் காலம் :-** ஒருவருடம்

**மொழி மூலம் :-** தமிழ்

**தெரிவுமுறைமை:-** நேர்முகத்தேர்வு

**கற்கைநெறிக்கட்டணம் :-** 85,000/-

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**

1. மக்கள் வங்கியின் ஏதாவதொரு கிளையில் 162-1001-8-0000902 எனும் கணக்கு இலக்கத்திற்கு விண்ணப்பத்துக்கான ரூபா 1000/- கட்டணத்தைச் செலுத்திய பற்றுச் சீட்டை உயர் பட்டப்படிப்புகள் பீடஅலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
2. தபால் மூலம் பெறவிரும்புவோர் **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** எனும் பெயருக்கு விண்ணப்படிவத்திற்குரிய பெறுமதியான காசுக் கட்டளையுடன் 15/- பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையையும் இணைத்து **உதவிப்பதிவாளர், உயர்பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விவரங்கள் www.grad.jfn.ac.lk எனும் பல்கலைக் கழக வலைதள வசதியூடாகவும் (website) பெற்றுக் கொள்ளலாம். வலைத்தள மூலமாக தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்ப் படிவங்களை அனுப்புபவர்கள் **நிதியாளர், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு ரூபா 1000/-** பெறுமதியான காசுக் கட்டளையை / மக்கள் வங்கியில் மேற்குறிப்பிடப்பட்ட கணக்கிலக்கத்திற்குச் செலுத்திய பற்றுச் சீட்டை இணைத்தல் வேண்டும்.

**விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்தல்**

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் கற்கைநெறியின் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரில் 20.08.2018 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு **உதவிப்பதிவாளர், உயர்பட்டப்படிப்புகள் பீடம், யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம்** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்கள். சரியாக பூரணப்படுத்-தாத விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு :** ஏற்கனவே இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை


**பதிவாளர்**
**19.07.18.**

(IN/7323)(11)

## மரண அறிவித்தல்

## திருமதி செல்லம்மா வைரசுந்தரம்

*(றேடியோ அன்ரி)*



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12.10.1931 | 19.07.2018 |

யாழ். காரைநகர் பாலவோடையைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா வைரசுந்தரம் அவர்கள் (றேடியோ அன்ரி) 19.07.2018 வியாழக் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் - கைராசி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி வேலுப்பிள்ளை - திருஞானசம்பந்தன் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைரவசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், சுதாகரி, சுதாகரன், சுதர்சினி, காலஞ்சென்ற சுதானந்தன், சுதர்சன், சுரேந்திரன், றோகினி (நோனி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான தையல் முத்து, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, மனோன்மணி மற்றும் ராஜேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும், செல்வஜெயம், மகேந்திரன், அர்ஜீனா, கௌரிதேவி, ஜெயமலர், ஆஷா ஆகியோரின் அன்பு மாமியும், டினேஸ், சதீஸ், மயூரி, வைதீகன், அஸ்வினி, ஆதவன், வானதி, அகரன், விவேகன், தமயந்தி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 23.07.2018 திங்கட்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கனடா** - 190 5294 5162 ,
**கனடா** - 141 6435 2009,
**கனடா** - 190 5554 3996,
**இலங்கை** - 077 603 7292.

**சூறாவத்தை அம்மன் கோயிலடி,**
**சூறாவத்தை, சுன்னாகம்.**

**தகவல்: வை.சுதாகரன்**
**(மகன் - ராசன்)**

## மானிப்பாய் இந்துக்கல்லூரி
## (தேசியப் பாடசாலை)
## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் கல்லூரி **PAGE மண்ட பத்தில் 26.08.2018** ஆம் திகதி மாலை 5 மணியளவில் சங்கத் தலைவர் தி.பிரதீபன் தலைமையில் நடைபெறும். எதிர்வரும் ஆண்டுக்கான தலைவர், செயலாளர், பொருளாளர் பதவிகளுக்குப் போட்டியிட விரும்பும் அங்கத்தவர்கள் அதற்கான விண்ணப்பங்களை முறைப்படி முன்மொழிந்து வழிமொழிந்து வேட்பாளரின் சம்மதத்துடன் **14.08.2018** ஆம் திகதிக்கு முன்னதாக கௌரவ செயலாளருக்கு கிடைக்கும்படி அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிரேரணைகளும் **14.08.2018** ஆம் திகதிக்கு முன்பதாக கௌரவ செயலாளருக்கு கிடைக்கும்படி அனுப்பி வைத்தல் வேண்டும்.

**குறிப்பு:- புதிதாக சேரும் அங்கத்தவர்களும், சாதாரண அங்கத்தவர்களும் செயலாளருடன் தொடர்பு கொண்டு தங்கள் அங்கத்துவத்தை உறுதி செய்தல் வேண்டும்.**

**அ.ஜெயராஜன்**
**கௌரவ செயலாளர்,**
**மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய்.**

(CS/18457)(11)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு advt@uthayan.com, 021 493 1111

# வேலைவாய்ப்பு

## கிளிநொச்சியில் உள்ள ES நிறுவனத்தில்

பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.



1. உதவி முகாமையாளர்
2. சந்தைப்படுத்தல் உத்தியோகஸ்தர்கள்
3. எழுதுவினைஞர்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிவரக் கோவையுடன் **23.07.2018 திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை** நேரில் சமுகம் தரவும்.

**ES பிறிண்ரர்ஸ்**
**ஏ-9 வீதி, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.**

(IN/31985)(10)

# CCTV CAMERA

## சிறப்பு அதிரடி விலை குறைப்பு




**OUR PRODUCTS**

- CCTV Wire & Wireless
- Biometric Attendance Systems
- Cash Counting Machine
- Smart Door Lock
- Intercomm
- Alarm System

**PACKAGE INCULDES**

| | |
|---|---|
| Cameras | - 4No |
| Digital Video Recorder (DVR) | -1No |
| Hard Disk Drive (500GB) | - 1No |
| Cables | - 1No |
| Power supply Units | - 2No |
| Connectors | -8 No |

Offer price 34,800\=

- உங்களிடம் Android அல்லது Iphone Mobile; Application மூலமாக உங்கள் கமரா பொருத்திய இடத்தை கண்காணிக்கும் வசதி செய்து தரப்படும். (Free online view in your mobile phone)
- முன்பே பொருத்தப்பட்ட cctv system [illegible] தேனும் குறைகள் இருந்தால் நிவர்த்தி செய்து தரப்படும். (cctv sc[illegible]aintenance).

MICRO PC SYSTEMS
Micro Power Co Systems

No.218, Hospital Road Jaffna / Email: jaffna@micropcsystems.com
Contact No. 021 222 5893, 0773963280, 0773039536, 0777425974



# சீனாவின் அதிசயக் குடும்பம்

பீஜிங், ஜூலை 23

சீனாவின் ஷான்க்ஸி மாகாணத்தில் வசிக்கும் ஒரு குடும்பத்தில் 12 குழந்தைகள் பிறந்து, வளர்ந்திருக்கிறார்கள்!

சீனாவில் ஒரு குழந்தைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுத் தீவிரமாகக் கடைபிடிக்கப்பட்டு வந்த காலத்தில் ஒரு குடும்பம் 12 குழந்தைகளைப் பெற்றிருப்பது எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறது. 11 பெண் குழந்தைகளுக்குப் பிறகு, ஓர் ஆண் குழந்த பிறந்த பின்னரே பெற்றோர் குழந்தை பெற்றுக்கொள்வதை நிறுத்தியிருக்கின்றனர். ஆசியாவில் ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதை இந்தக் குடும்பமும் எடுத்துக் காட்டியிருக்கிறது. இந்தப் பதினோரு பெண்களும் தங்களின் அன்புத் தம்பிக்காக ஏராளமான தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். சமீபத்தில் தம்பியின் திருமணம் நடைபெற்றது. சகோதரிகள் அனைவரும் சேர்ந்து, திருமணப் பரிசாக ஒரு வீட்டை வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

“எங்கள் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஏராளமான பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இல்லை. அவர்கள் காலத்தில் ஆண் குழந்தைகள் மிகவும் உயர்வாகக் கருதப்பட்டனர். அந்த ஆசையில் 11 பெண் குழந்தைகளைப் பெற்றிருக்கிறார்கள். காவோ ஹாவோஸென் பிறந்த பிறகு குழந்தை பெற்றுக் கொள்வதை நிறுத்தி விட்டனர்.

என் அம்மாவுக்கு 20 வயதில் நான் பிறந்தேன். 47 வயதில் என் தம்பி பிறந்தான். வீட்டில் எப்போதும் வறுமை. என் தம்பியும் இரண்டு தங்கைகளும் மட்டுமே பள்ளி சென்றிருக்கிறார்கள். நாங்கள் அனைவரும் சற்று வளர்ந்தவுடன் வேலைக்குச் செல்ல ஆரம்பித்து விட்டோம். வீட்டுச்செலவு போக, மீதி இருந்த பணத்தில்கூட எங்களுக்கென்று எதுவும் வாங்கிக்கொண்டதில்லை. தம்பிக்குத் துணி, படிப்பு என்று ஒவ்வொன்றையும் கவனித்துக் கொண்டோம். அரசிடம் பலமுறை எங்கள் பெற்றோர் மாட்டிக்கொண்டு, அதிகக் குழந்தைகள் பெற்றதற்குத் தண்டனையாக தண்டங்களையும் கட்டியிருக்கிறார்கள். அதற்கும் நாங்கள் தான் சம்பாதித்துக் கொடுத்திருக்கிறோம். பதினோரு பேருடன் பிறந்ததால், தான் எந்தவிதத்திலும் கஷ்டப்பட்டதாக எங்கள் தம்பி நினைக்கக் கூடாது என்பதில் நாங்கள் அனைவரும் ஒருமித்த கருத்தோடு இருந்தோம்” என்கிறார் மூத்த பெண். (ம)

> 11 பெண் குழந்தைகளுக்குப் பிறகு, ஓர் ஆண் குழந்தை பிறந்த பின்னரே பெற்றோர் குழந்தை பெற்றுக்கொள்வதை நிறுத்தி யிருக்கின்றனர். ஆசியாவில் ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதை இந்தக் குடும்பமும் எடுத்துக் காட்டியிருக்கிறது.






# காகமே நீ ஏன் கறுப்பானாய்?



சிறுவன் ஒருவன் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு வடை இருந்தது. சிறுவன் பாடசாலையில் காகம் வடை திருடிய கதையை படித்திருக்கிறான். ஆதலால் காகம் தனது வடையைத் திருடி விடுமோ என்று நினைத்து அதன் கவனத்தைத் திருப்ப அதனுடன் பேச்சுக் கொடுத்தான். காகத்துக்கும் பையனுடன் உரையாடுவதில் மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது.

**சிறுவன்-** "காகமே, காகமே நீ ஏன் கறுப்பாக இருக்கிறாய்?"

**காகம்-** "சிறுவனே! ஒரு காலத்தில் நான்தான் உலகிலேயே அழகான பறவையாக இருந்தேன். என்று சொன்னால் நீ நம்புவாயா?"

**சிறுவன்-** எப்படி நம்புவது? (ஆச்சரியப்பட்டான் சிறுவன்)

**காகம்-** நீ நம்பாவிட்டாலும் அதுதான் உண்மை. வண்ண வண்ணச் சிறகுகள். அழகான தோகை. இனிய குரல் இவற்றுடன் அவ்வளவு வசீகரமாக நான் இருந்தேன்.

**சிறுவன்-** பின் எப்படி நீ இப்படிக் கறுப்பானாய்?

**காகம்-** என் முட்டாள் தனமான இரக்க குணத்தால்தான்.

**சிறுவன்-** உன்னைப் பார்க்க பாவமாக உள்ளது. உன் கதையைக் கொஞ்சம் கூறுவாயா?

**காகம்-** என் அழகான தோற்றத்தைக் கண்டு பொறாமை கொண்ட மற்றப் பறவைகள் என் இரக்க குணத்தைப் பயன்படுத்தி பயன் அடைந்துவிட்டன.

**சிறுவன்-** எப்படி?

**காகம்-** உன் பச்சை நிறத்தை எனக்குத் தருவாயா? என்று கேட்டது பச்சைக்கிளி. நானும் இல்லாதபடியால்தானே கிளி கேட்கிறது என்னிடம் இருக்கிறதே கொடுத்து விடுவோமே என எண்ணிக் கொடுத்துவிட்டேன். உடனே கிளி அழகான பச்சைக் கிளியாக மாறியது. கிளியைப் பார்க்க எனக்கும் பெருமையாக இருந்தது.

**சிறுவன்-** பின்பு

**காகம்-** எனக்கு நீலம் தருவாயா என வாங்கிக் கொண்டது மீன்கொத்தி. அது கடலில் மீன்களைப் பிடிப்பதால் நீல நிறம் அதற்கு மிகவும் பொருத்தமென எண்ணி நீலநிறத்தை அதற்குக் கொடுத்தேன்.

**சிறுவன்-** வெள்ளை நிறத்தை யாருக்குக் கொடுத்தாய்?

**காகம்-** வெண்மையை புறா என்னிடமிருந்து பெற்றுக் கொண்டது. இப்படி ஒவ்வொரு நிறமாக ஒவ்வொரு பறவையும் என்னிடமிருந்து பெற்றுக் கொண்டபின் எஞ்சி இருந்தது கம்பீரமான கொண்டையும் அழகான தோகையும் தான்.

**சிறுவன்-** அவற்றை எங்கே காணோம். அவற்றை யாருக்குக் கொடுத்தாய்?

**காகம்-** வேறு யாருக்கு? தோகையை மயிலுக்கும் கொண்டையை சேவலுக்கும் கொடுத்தேன்.

**சிறுவன்-** அதற்குப் பிறகு

**காகம்-** மயிலும் சேவலும் போனபின் என்னிடம் மெல்ல வந்தது குயில். அது "காகமே நானும் கறுப்பு, நீயும் கறுப்பானதால் எனக்கு வேறு என்ன தரப் போகின்றாய்? உன் குரலை மட்டும் கொடுத்துவிடு" என்றது குயில்.

**சிறுவன்-** என்ன செய்தாய்?

**காகம்-** அதையும் மகிழ்ச்சியோடு குயிலுக்களித்து விட்டேன். உடனே குயில் இனிமையாகக் கூவிற்று. குயிலின் மகிழ்ச்சியில் நானும் பங்கு கொண்டேன்.


**சிறுவன்-** என்ன காகமே! இவ்வளவு ஏமாளியா நீ. தந்திரமுள்ள பறவை என்று தானே நான் படித்துள்ளேன். பின்னர் எப்படி இப்படி ஏமாந்தாய்? (காகத்தை செல்லமாக கடிந்து கொண்டான் சிறுவன்)

**காகம்-** சிறுவனே அந்த நிறங்களை இழந்தவை பற்றி நான் கவலைப்படவில்லை. நானே வலிந்து கொடுத்தாலும் யாரும் வாங்கிக் கொள்ளாத ஓர் உயர்ந்த குணம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது எனக்கு அதுவே போதும்.

**சிறுவன்-** அது என்ன குணம்?

**காகம்-** ஒற்றுமை, இதனை எவரும் என்னிடம் கேட்பது கிடையாது. எங்கள் இனத்தைப் பார்த்து கற்றுக் கொள்வதும் கிடையாது.


**சிறுவன்-** ஆமாம் சரிதான். உங்கள் இனத்தின் ஒற்றுமைக் குணம்பற்றி எமக்கும் நன்கு தெரியும். அதனால்தான் மனிதர்கள் மற்றப் பறவைகளை கூண்டில் பிடித்து வைத்து வளர்த்துக் கொண்டு காகங்களாகிய உங்களை மட்டும் சுதந்திரமாக விட்டு வைத்திருக்கிறார்கள். (அதுமட்டுமா கா..கா.. என நாம் உரிமையோடு சாப்பிட அழைக்கும் ஒரே பறவையும் காகம் தான் என்று நினைத்தான் சிறுவன் மேலும் சிறுவனுக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. மனதுக்கு நிறமில்லை என்பது.)




## தமிழில் முதன் முதலில் அச்சிடப்பட்ட நூல்

சீனாவில் ஐரோப்பியரால் அச்சிடுகை 1584இல் நடைபெற்றது. ஜப்பானில் 1590 முதல் அச்சிடுகை தொடங்கியது. பிலிப்பைன்சில் 1593இல் தொடங்கியது. "புதிய உலகம்" எனப்படும் அமெரிக்காவில் முதன்முதல் 1584இல் நூலொன்று அச்சிடப்பட்டது என்று கூறப்படுகிறது. ஆனால் அவ்வாறு அச்சிடப்பட்ட நூலின் பிரதி எதுவும் கிடைக்கவில்லை. ஆபிரிக்க மொழியொன்றில் முதன்முதலாக 1624லேயே நூல் அச்சிடப்பட்டது. ரஸ்யாவில் முதல் நூல் 1563இல் அச்சேறியது. கொன்ஸ்தாந்திநோபிள் 1727இல் தான் தன்னுடைய முதல் அச்சகத்தை நிறுவியது. கிரீஸ் நாட்டில் 1821இல் முதல் அச்சகம் நிறுவப்பட்டது. ஆனால் தமிழிலே முதல் நூல் 1554இல் அச்சேறியது. எனவே உலகிலேயே முதன்முதல் அச்சேறிய நூல்களுள் தமிழ் நூலும் ஒன்று. கார்த்திலா எனப் பெயர்பட்ட இந்நூல் போர்த்துக்கலின் தலை நகராகிய லிஸ்பன் நகரிலே 1554இல் அச்சிடப்பட்டது. இத்தகைய நூலின் ஒரே ஒரு பிரதி மட்டும் இருப்பதை அறிந்து உலகுக்கு வெளியிட்டவர் எங்கள் தமிழறிஞர் அருட் தந்தை தனிநாயகம் அடிகள் ஆவார். அவர் ஐரோப்பாவிலே பல நகரங்களுக்குச் சென்று முதன்முதல் அச்சிடப்பட்ட நூல்கள் பற்றி தேடல் ஆய்வு செய்தார். இந்தநூல்கள் பற்றிய விபரங்களைக் 1950இல் ஆய்வுக் கட்டுரையாக ஆங்கிலத்திலே எழுதி வெளியிட்டார். 1958இல் கல்கி தீபாவளி மலரில் முதல் அச்சேறிய தமிழ் நூல்கள் என்ற தமிழ் கட்டுரை மூலம் தமிழர் பலரும் இச்செய்திகளை அறியும்படி எழுதினார்.

## நான் விரும்பும் தொழில்



- நாம் ஒவ்வொருவரும் எமது சிறுவர் பருவம் கடந்து கல்வி கற்று முடித்தபின் எமக்கும் சமூகத்துக்கும் பயன்படக்கூடிய ஏதாவதொரு தொழிலைச் செய்ய வேண்டும்.
- தொழில் செய்வதன் மூலம் எமக்கு வருமானம் கிடைக்கும்.
- வருமானம் எமது வயிற்றின் பசியைப் போக்க உணவைக் கொடுக்கிறது.
- எமது பசி போக்கப்பட்டால் எமது வாழ்க்கை இனிக்கும்.
- வாழ்க்கை இனித்தால் பிறருக்கு உதவ மனம் வருகிறது.
- பிறருக்கு உதவக் கூடிய தொழிலைச் செய்வது சிறந்தது.
- தொழில்கள் யாவுமே ஏதோ ஒரு வகையில் மனித வாழ்க்கைக்கு உதவி புரிவனதான்.
- ஆசிரியர் மாணவர்களுக்கு வாழ்க்கைக்கான ஒழுக்கக் கல்வியை வழங்கி மனிதர் வாழ வழிகாட்டுபவர்.
- மருத்துவர் நோய்களில் இருந்து உயிர்களைக் காப்பவர்.
- இவ்வாறான தொழில்களைச் "சேவை" என அழைப்பார்கள்.
- நான் விரும்பும் தொழில் ஆசிரிய சேவைதான்.
- ஆசிரியர் மாணவர்களின் அகவிழியைத் திறப்பவர்.
- நல்ல குடிமக்கள் கொண்ட ஒரு சமுதாயத்தை ஆசிரியர் உருவாக்குகிறார்.
- சிந்தனையைத் தூண்டுபவர் ஆசிரியர்.
- நற்பழக்கவழக்கங்களைச் சொல்லித்தருபவர் இவர்.
- வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி காட்டுபவர் இவர்.
- மாதா, பிதா, குரு தெய்வம் என இவர் போற்றப்படுபவர்.
- குரு இல்லா வித்தை பாழ் என்பார்கள்.
- எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.
- அறிவைப் புகட்டி அன்பைப் பெருக்கும் ஆசிரிய சேவையே நான் விரும்பும் தொழில்

## பாலின் நிறம்



சூரிய ஒளியில் பார்த்தால் பால் வெண்ணிறமாகவே தெரிகிறது. ஆனால் பாலைச் சிவப்பு வெளிச்சத்தில் பார்த்தால் அது சிவப்பாகத் தெரியும். பச்சை வெளிச்சத்தில் பார்த்தால் அது பச்சையாகத் தெரியும். ஏன் தெரியுமா? வெண்ணிறமாகக் காணப்படும் சூரியஒளி உண்மையில் ஏழுநிறங்களின் கலவையா கும். ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என்பன அவையாம். ஒரு பொருள் எந்த நிறத்தைப் பிரதிபலிக்கச் செய்கிறதோ அந்த நிறத்தைக் கொண்டதாக எமது கண்ணுக்குப் புலனாகிறது. பாலின் மூலக்கூற்று அமைப்பு சூரியஒளியின் எந்த நிறத்தையும் தனியாகக் காண்பிக்காமல் அனைத்து நிறங்களையும் ஒருங்கே பிரதிபலிக்கச் செய்கிறது. அதனால்தான் பால் வெண்ணிறமாகக் காணப்படுகின்றது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய

**திரு. பொன்னம்பலம் ஆதவன்**


அவர்கள் 11.07.2018 அன்று மல்லாகம் மாவட்ட நீதிவான் A.G அலெக்ஸ்ராஜா அவர்கள் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவரது பணி சிறக்க உளமார வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் கழகம்**

**யா/ பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பாடசாலை**

(CS/18428)(11)

## CONGRATULATIONS!



**DR.SAMUEL JEBANESAN JEBARATNAM**

on securing
A Doctorate in Business Administration (DBA)
*Specialising in Banking & Finance*
Conferred by
Commonwealth University, London

We are proud of your achievements.
Thanks be to God.

David & Gem Jebaratnam (USA)
Jebashanthini & Thevakumar (Kuwait)
Saneetha & Shalomi Jebaratnam (Uduvil)

## மு/வித்தியானந்தக் கல்லூரியின்

## பழைய மாணவர் தினம் – 2018

**பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல்**

- ✓ பாடசாலையின் வளர்ச்சி பற்றிய கலந்துரையாடல்கள்
- ✓ பழைய மாணவர்களின் கலை, விளையாட்டு நிகழ்வுகள்

**ஜூலை-28 (28.07.2018) காலை 9.00 மணிமுதல்**

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**- பழைய மாணவர் சங்கம் -**

(Sup/1528)(10)

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
0214931111
உதயன்

## மரண அறிவித்தல்

### தியோகுப்பிள்ளை ஜேசுதாசன்

(முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத் தாபன உத்தியோகத்தர்)



உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியோகுப்பிள்ளை ஜேசுதாசன் (முன்னாள் பரந்தன் இரசாயன கூட்டுத் தாபன உத்தியோகத்தர்) நேற்று (22.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியோகுப்பிள்ளை மாக்கிறேற் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை ஆரோக்கியம் தம்பதியரின் அன்புமருமகனும் மேரிசெல்வாராணியின் அன்புக்கணவரும் யெசி கொண்சீலியா (ராஜி கனடா), யூலியற் லோஞ்யனஸ் (கரித்தாஸ், வன்னி) ஆகியோரின்அன்புத்தந்தையும்தேவதாஸின் (ரங்கன், சவுதி) சிறிய தந்தையும் காலஞ்சென்றவர்களான திரேசம்மா, மரியதாஸ், சூசைப்பிள்ளை மற்றும் மரியகிறிஸ்ரா (நேசம், கனடா), அந்தோனிப்பிள்ளை (ஞானசிங்கம், கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான நீற்றம்மா, திரேசம்மா மற்றும் லிகோரிஸ், மேரிராணி ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆனந்தராஜா (கனடா), செனிசியா (ஆசிரியர், பளை) ஆகியோரின் அன்பு மாமனும் நிறோஷன், டினுஸன், றுக்ஸன், நிலான்சியா, யஸ்னுகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (23.07.2018) திங்கட்கிழமை பி.ப. 3 மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து அடைக்கல நாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 | 22 |
| 06 | 07 |
| 1948 | 2018 |



### கந்தையா (கந்தவனம்) சண்முகலிங்கம்

*(ஓய்வுநிலை பொது முகாமையாளர் - பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம், முன்னாள் தலைவர் - அரியாலை ஸ்ரீகலைமகள் ச.ச. நிலையம்)*

இல. 34, கனகரத்தினம் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் 57/25, திருமகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகலிங்கம் (செட்டி) நேற்று (22.07.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா ஆசைப்பிள்ளை மற்றும் பரமேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மனோரஞ்சிதம் (கிளி) யின் பாசமிகு கணவரும் சர்மிளா (ஆசிரியர் - யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), சபேசன் (லண்டன்), பிரியந்தி (ஆசிரியை - கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌரிகாசன் (அதிபர் - யா/நீர்வேலி தெற்கு இந்து தமிழ் கலவன் பாடசாலை), அனோஜா (லண்டன்), ஜெயசுதன் (ஆசிரியர் - யா/புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அக்ஷயன், ஆர்த்திகன், அக்ஷயா, சர்ஜிகன், ஆதிரா, அக்ஷரா ஆகியோரின் பாசமிகு பேரனும் புவனேஸ்வரி, அருஞ்செல்வம், செல்வானந்தம் (சுவிஸ்), கமலாதேவி (இத்தாலி), புஸ்பராணி (கனடா), செல்வமலர், சச்சிதானந்தம் (சுவிஸ்), விஜயராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவஞானசுந்தரம், ரவிதமலர், பிறேமாவதி (சுவிஸ்), தர்மராஜா (இத்தாலி), வாகீஸ்வரன் (சுவிஸ்), கமலநாதன், தனுஷா (சுவிஸ்), ஜீவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 57/25, திருமகள் வீதி, அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (23.07.2018) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு அரியாலை, சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 18341/15)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில்
ஆசிரியராகப் பணியாற்றும்
**பரராஜசிங்கம்**
**பிரதீசன்**
அவர்கள் மாவட்ட நீதிபதி
(மல்லாகம்)
உயர்திரு A.G. அலெக்ஸ்ராஜா
அவர்கள் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணஞ்செய்து பதவி உயர்வு பெற்றமையையிட்டு வாழ்த்துகின்றோம். இவர் மென்மேலும் பலபட்டங்கள், பதவிகள் பெற இறைவனை வேண்டுகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/மயிலிட்டி வடக்கு, கலைமகள் ம.வி.

## 16ஆம் ஆண்டு நினைவுத்துளிகள்

பிறப்பு 03 . 09 . 1936
இறப்பு 19 . 07 . 2002



நயினை அமரர்
**இராமநாதன் கோபாலபிள்ளை**
திதி : பூர்வபக்க ஏகாதசி 23.07.2018

குன்றென நிமிர்ந்த சிறித்த கோபுரம்
குலையாத வாழ்வினை நிமிர்த்திய ஆலமரம்
இன்றுடன் ஆண்டு பதினாறில் நிறைகின்றது
இதயமான "ஐயா"வை தெய்வமாய் நினைக்கின்றோம்
மனைவி, பிள்ளைகள், சுற்றத்துடன் மகிழ்ந்திருந்த
நிலவே! "நயினை நிறைவே" பாசம் தொடர்கின்றோம்.

எமது குலதீபத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அரசடிப் பிள்ளையாரையும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளையும் கடுக்காயடி ஞானவைரவரையும் பிரார்த்திக்கின்றோம்.

2/1, மூர்க்கவிநாயகர் வீதி,
கடுக்காயடி லேன், நல்லூர்,
யாழ்ப்பாணம். 077 194 7183

தங்கள் பிரிவால் வாடும்,
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

## மரண அறிவித்தல்



**முருகேசு கிருஷ்ணபிள்ளை**

காந்தியூர், புலோலி தெற்கு, புலோலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கிருஷ்ணபிள்ளை நேற்று (22.07.2018) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பூரணம் தம்பதிகளின் மூத்த மகனும் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும் பிறேமலதா, முருகானந்தன், கிருபானந்தன் (கனிய அளவையியலாளர் - Q.S.), சதீஸ்வரன், வித்தியா, சுகிர்தா (ஆசிரியை - யா / அம்பாள் வித்தியாலயம், அல்வாய்), குகனேசன், அம்பிகா ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, சிவக் கொழுந்து, சிவபாக்கியம், அன்னலட்சுமி, இராஜேஸ்வரி மற்றும் வேலும்மயிலும் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவனேஸ்வரன், நிஸாந்தினி, கிருபாலினி (அபிவிருத்தி அலுவலர் - கமநல அபிவிருத்தி திணைக்களம், முல்லைத்தீவு), தயாபரன் (சாரதி - யாழ். மாநகரசபை), காந்தரூபன் (அபிவிருத்தி அலுவலர் - முதலமைச்சரின் அமைச்சு, வடமாகாணம்). சிந்துஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் லதுஷா, வக்ஷிகா, வர்ஷன், திவ்வியன், டனுஷி, கஷ்னி, தக்சியா, லக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.07.2018) திங்கட்கிழமை மு.ப. 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காந்தியூர்,
புலோலி தெற்கு, புலோலி.
தகவல்: குடும்பத்தினர்
077 043 6278, 076 372 9734

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா
சின்னராசா
(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)
தோற்றம்
14.01.1933
மறைவு
23.07.2017

எம் ஈரவிழிகள் காயுமுன்பே ஓராண்டு
ஆனதுவோ? உயிர்தான் மறைந்தது உங்களின்
நினைவுகள் என்றும் மறைந்திடுமோ? போகும் எத்திசையிலும்
உங்களின் உருவங்கள் தோன்றி மறைகின்றன
என்றென்றும் உங்களின் நினைவுகள்
எம் சிந்தனையில் வாழ்ந்திடும்

சண்லிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.
என்றும் உங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

## 7ஆம் ஆண்டு நினைவு நாள்

மண்ணில் எமக்காய் 18 . 02 . 1943
விண்ணில் எமைப்பிரிந்து 23 . 07 . 2011



கர்த்தருக்குள் நித்திரையடைந்த
**யோசப் அருளப்பு அமலதாஸ்**

அமைதியான புன்சிரிப்பும் ஆழ்ந்த சிந்தனையும் கொண்டு
கனிவுமொழி பேசி அன்பான அரவணைப்போடு
எங்களை வளர்த்தீர்கள்
புன்னகை பூத்த பொன் முகம் மறைந்ததேனோ?
பாசமாய் எம்மை அணைத்த உங்கள் பாசக் கரங்களை
தேடித் தேடி அலைகின்றோம் எம் கண்கள் கலங்கி நிற்கிறோம்
அமைதியாய் கர்த்தருக்குள் மறைந்ததேனோ?

இத் துயரத்தால் துயருறும்
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்மகிழ 20 . 01 . 1938
கண்நெகிழ 27 . 06 . 2016



எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்ற
திருமதி **இராசையா சிவம்**
(கார்க்காரம்மான் மனைவி)
23.07.2018

உயிர்கூட நான் தருவேன் ஒளியெல்லாம் உன் வடிவாக
ஒலியெல்லாம் உன் குரலாக மனமெல்லாம் உன் நினைவாக
கனவெல்லாம் உன் வரவாக உன் நினைவினிலே நீந்துகின்றேன்
என் நிலையினை மறக்கின்றேன் ஒரு தடவை உன்னைக் காண
உயிர்கூட நான் தருவேன்....... அம்மா! மீண்டும் வந்துவிடு.....
இரண்டு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் ஓயவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு நீங்காது.

சந்தை வீதி,
கொடிகாமம்.
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
077 844 8024


## களவாகக்...

திணைக்களத்தினருக்கும், பளைப் பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த செபமாலை சுஜீபன் என்பவருக்குச் சொந்தமான படகே எரிந்து சாம்பராகியுள்ளது. வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் சட்டவிரோத கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டவர்களை, இந்த மாத ஆரம்பத்தில் ஊர் மக்கள் இணைந்து மடக்கிப் பிடித்திருந்தனர். சுஜீபன் அவரது படகுடன் இந்த நடவடிக்கையில் பங்கேற்றிருந்தார்.

நேற்றுக் காலை 6 மணியளவில் கடற்கரைப் பகுதிக்குச் சென்றவர்கள், சுஜீபனின் படகு எரிந்து சாம்பராகியதைக் கண்டுள்ளனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் படகு எரிந்த இடத்தில் ஒன்றுகூடியுள்ளனர். படகு எரிந்த இடத்திலிருந்து 50 மீற்றர் தூரத்தில் கடற்படையினரின் காவலரண் உள்ளது.

'இன்று (நேற்று) காலை 3 மணியளவில் படகு எரியும் போது கண்டதாகவும், உடனடியாக வெற்றிலைக்கேணியில் உள்ள கடற்படைத் தளத்துக்கு அறிவித்ததாகவும், அவர்கள் வந்து தீயை அணைத்ததாகவும்' கடற்படைக் காவலரணில் உள்ள கடற்படையினர் மக்களிடம் தெரிவித்துள்ளனர்.

படகு தீப்பிடித்து எரியும்போது, அந்த இடத்திலிருந்து சில நூறு மீற்றர்கள் தொலைவில் உள்ள படகின் உரிமையாளருக்கோ, மீனவ சங்கத்துக்கோ, சம்பவ இடத்துக்கு நேற்றுக் காலை 6 மணிக்கு வந்து பார்வையிடும் வரையில் கடற்படையினர் அறிவிக்கவில்லை.

தீயினால் படகு முற்றாக எரிந்துள்ளது. அதனோடு இணைந்த 40 குதிரைவலு இயந்திரம், வலைகள் என்பனவும் எரிந்துள்ளன. சுஜீபனுக்கு மூன்று சகோதரிகள் உள்ளனர். குடும்பத்தின் வாழ்வாதாரம் சுஜீபனின் உழைப்பிலேயே தங்கியிருந்தாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

வடமராட்சி கிழக்கில் சட்டவிரோதமாக தங்கியிருந்து வெளிமாவட்ட மீனவர்கள் கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டனர். இவர்களைக் கடற்படையினர் கைது செய்யவில்லை என்று உள்ளூர் மீனவர்கள் குற்றச்சாட்டு முன்வைத்திருந்தனர். இந்த மாதம் 3ஆம் திகதி திடீரென, உள்ளூர் மீனவர்கள் சட்டவிரோத கடலட்டை பிடிப்பில் ஈடுபட்ட வெளிமாவட்ட மீனவர்களை கையும் மெய்யுமாகப் பிடித்தனர். இந்த நடவடிக்கையில் சுஜீபன் அவரது படகுடன் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(5,9,26,105,160)

## செம்மணி...

அகழ்வுப் பணிகளும் பரிசோதனைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

நீர்த்தாங்கி அமைப்பதற்காக செம்மணியில் கடந்த வெள்ளிக் கிழமை நிலம் அகழப்பட்டது. மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் வெளித்தெரிந்தன. அகழ்வுப் பணிகள் உடனடியாக நிறுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்தை யாழ்ப்பாண மாவட்ட நீதிவான் சதீஸ்கரன் நேற்று முன்தினம் மாலை நேரில் சென்று பார்வையிட்டார். எலும்புக்கூட்டின் எஞ்சிய எச்சங்கள், அகழப்பட்ட மண்ணுடன் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்ற அடிப்படையில், அகழப்பட்ட மண்ணைப் பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. சட்ட வைத்திய அதிகாரி சம்பவ இடத்தைப் பார்வையிட்ட பின்னரே எஞ்சிய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்றும் கூறப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரி க.மயூரதன், நேற்றுக் காலை 11 மணிக்கு மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்குச் சென்றார். தடயவியல் (சோக்கோ) பொலிஸாரும், பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் இரண்டு பொலிஸ் அலுவலர்களுமே அங்கு முன்னிலையாகியிருந்தனர்.

பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சம்பவட இடத்துக்கு வரவில்லை. அங்கு அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்குரிய உபகரணங்களும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. சட்ட வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினர் அகழ்வுப் பணியை ஒத்திவைத்து விட்டுத் திரும்பிச் சென்றனர்.

நீதிமன்றத்தின் ஊடாக, அகழ்வுப் பணியை நேர்த்தியாக முன்னெடுப்பதற்குரிய ஒழுங்குகளுக்கு கோரிக்கை விடுக்கப்படவுள்ளது.

(5,8)

## எமது...

வுக்கு வரும். அதுவரை எமது உரிமைக்கான குரல்கள் ஓங்கி ஒலித்துக் கொண்டேயிருக்கும். இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

போரின் பின்னரான சூழலில் பெண்களின் தலைமைத்துவம் மற்றும் வலுவூட்டல் என்ற தலைப்பிலான பன்னாட்டுப் பெண்கள் மாநாடு யாழ்ப் பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமா னது. நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

**உதவிகள் சொற்பம்**

போருக்குப் பின்னரான காலத்தில் இங்கு நடைபெறுகின்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்;க வேண்டிய நிலையில் இந்தப் பகுதி யில் உள்ள பெண்கள் இருக்கின்றார்கள். இவ்வாறான மக்களுக்கு வடமாகாண சபையினால் வழங்கப்படுகின்ற உதவிகள் மிகச் சொற்பமே. மலையளவு தேவைக்கு தினையளவு உதவி என்ற கணக்கிலேயே அமைந்திருக்கின்றது எமது உதவிகள். இவர்களின் தேவைகள் பற்றியும் இவர்களை சமுதாய நீரோட்டதுடன் மீள இணைத்து முன்னெடுத்துச் செல்லக் கூடிய வகையிலும் உதவித் திட்டங்களை எம்முடன் சேர்ந்து அறிமுகம் செய்யும்படி கொழும்பு அரசை நாம் மீண்டும் மீண்டும் வலி யுறுத்தி வருகின்ற போதும் அவர்கள் அதைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. அரசியல் ரீதியாகத் தமக்கு உதவக்கூடியவர் களைத் தேடிக்கண்டு பிடித்து உதவிகள் செய்யப்பார்க்கின்றார்கள்.

இது போன்ற அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிப்புற்ற மக்கள் பற்றி ஆய்வுகளை பல கோணங்களில் இருந்தும் மேற்கொண்டு தமது அறிக் கைகளை பக்கச்சார்பின்றி சமர்ப்பிப் பதன் மூலம் பாதிப்புற்ற மக்கள் சம்பந்தமான விடயங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதுடன் அரச்சுக்கும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு உதவியாக இருக் கும்.

பெண்களை வலுவூட்டும் போது வெறுந் தொழில்களில் அவர்களை ஈடுபடுத்துவதை மட்டும் அது குறிக்காது. அவர்களுக்காக அறிமுகப் படுத்தப்படும் செயற்றிட்டங்கள் எந்த அளவுக்கு அவர்களது வாழ்க் கையை. வாழ்க்கைத்தரத்தை மாற்றுகின்றன என்பதையும் நாங்கள் அவதானிக்க வேண்டும். வலுவூட்டல் எம்மை பிழையான வழிக ளுக்கு இழுத்துச் செல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும். வலுவூட் டல் சமூக மேம்பாட்டுக்கு இடமளிக்க வேண்டுமே ஒளிய சமூக சீரழி வுகளுக்கு இடம் அளிக்கக்கூடாது.

**அடிமைத்தனம்**

அடுத்து எமது பொதுவான அரசியல் விடயங்களைப் பற்றி ஓரிரு வார்த்தைகள். இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் தமிழ் மக்கள். அவர் கள் இன்று ஒடுக்கப்பட்ட ஒரு சிறுபான்மை இனமாக வாழவேண்டி வந்துள்ளது. பெரும்பான்மை இனத்தவர்கள் கூறுகின்ற அனைத்து விடயங்களுக்கும் தலையாட்டிப் பொம்மை களாக தலையாட்டிக் கொண்டு தமிழ் மக்கள் வாழ வேண்டுமென அரசு எதிர்பார்க் கின்றது. நாம் எமது ஒவ்வொரு தேவைகளையும் போராடிப் பெற வேண்டிய சூழ்நி லையிலேயே இன்று இருக்கின் றோம். தமிழர்கள் கைகட்டி வாய் பொத்தி இருக்க வேண்டும். இல் லையேல் அவர் கள் அனைவரை யும் அண்டை நாடு களுக்கு துரத்திவிடவேண் டும் என்று நாடா ளுமன்றத்திலும் வெளியிலும் கூச் சல் போடுகின்றார் கள் சிலர். அவர் கள் மீது அரசு நட வடிக்கைகள் எடுப் பதில்லை. தற்செய லாக நாடாளு மன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ் வரன் அவர்கள் ஏதோ கூறிவிட்டார் என்பதற்காக அமைச்சுப் பதவி கள் பறிப்பு, குற்றத் தடுப்புப் பிரிவின் விசாரணைகள் என அனைவரும் இணைந்து கொண்டு நடவடிக் கைகளில் ஈடுபடு கின்றார்கள். இந்த நிலைகள் தொடரக் கூடாது – என்றார்.

**ஆய்வுக் கட்டுரைகள்**

மாநாட்டின் இறுதிநாளான நேற்று. 5 பகுதி களாக இரண்டு தளங்களில் நிகழ்வு இடம்பெற்றது. 312 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்த அனைவருக்கும் வட மாகாண முதலமைச்சரால் சான்றிதல் வழங்கி மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

## முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு. ஜூலை 23

பொலனறுவை படைமுகாமில் பணியாற்றி வீடு திரும்பிய இளைஞன். கேப்பாபிலவு பகு தியில் நேற்று மாலை இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுள்ளான்.

செந்தூரன் (வயது-28) என்ற இளைஞனே தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவித்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

கேப்பாபிலவைச் சேர்ந்த இளைஞன் பொல னறுவை இராணுவ முகாமில் பணியாற்றி வருகின்றான். விடுமுறை யில் நேற்று மாலை வீடு திரும்பியுள் ளான். வற்றாப் பளை கேப்பாபிலவு வீதியில் வைத்து. இனந் தெரியாதோர் இளைஞன் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. முள் ளியவளைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (5.ரி3)

**வேலையாள் தேவை**
சண்டிலிப்பாய் பிரதேசத்தில் தனியார் விவசாயப் பண்ணையில் முழு நேரமாக தோட்டக் கூலி வேலை செய்வதற்குத் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர்.
தகுதியானவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்
077 271 9661 (CS/15946) (11;17)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 832
சீட்டிழுப்பு திகதி 2018.07.21 சனிக்கிழமை
Q 05 16 46 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,048,968/-
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ராசி அதிர்ஷ்டம்
திகதி 22.07.2018 | வெற்றி வாரம் 2334 | வர்ணம் ஊதா
மேடம்
வெற்றி இலக்கங்கள் 28 30 34 44
செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,691,732/=
2018.07.24ம் திகதி செவ்வாய்க் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 318
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2018.07.22
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 87,929,673/-
H 17 32 37 70
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 319
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2018.07.22
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 52,756,355/-
வெற்றி இலக்கங்கள் 21 39 46 73 I
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**
லப்றடோர் ( Labrador) இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
071 157 1835

**இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு**
புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்த மாகவும். சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 500/= மட்டும். கூடுதல் கொள்வனவுகளுக்கு விசேட விலைக் கழிவுகள் உண்டு.
தொடர்பு - 077 8689 500
U.S.A பாம் குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

### ஆறாவது குருபூசை



**வல்லிபுரம் பங்கயவல்லி**
(செல்லப்பாச்சி குருபூசை)
காலம் : 24.07.2018 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 11.00 - 2.30 மணிரை
இடம் : சடையம்மா மடம்
(அருள் மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய சுற்றாடல் - திருநெல்வேலி கிழக்கு

1961 ஆம் ஆண்டு யூலை மாதம் 24 ஆம் திகதி காலை. கதிர்காமசடையம்மா மடத்திலிருந்து கதிர்காமக்கந்தனுடன் இணைந்து கொண்ட எனது தாயார் செல்லப்பாச்சியின் குருபூசையும் மற்றும் முதியோர் கௌரவிப்பு வழங்கும் நிகழ்வுகளும். மகேஸ்வர பூசையும். சாட்டர் லயன்ஸ்கழக உறுப்பினர் லயன் பரமசிவத்துடன் இணைந்து நடைபெறவுள்ளது. இது ஒரு நல்லூர் லயன்ஸ் கழக 2018 - 2019 ஆம் ஆண்டிற்கான முதலாவது செயற்றிட்டமாகும். ஆகவே இவ் விழாவில் நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மற்றும் உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

நல்லூர் லயன்ஸ் கழகமும் – லயன்ஸ் கழக உறுப்பினர் **பரமசிவம் குடும்பத்தினரும்**

### 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் பொன்னையா தங்கராசா**


அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இலக்கணமாய்
வாழ்ந்து வழிகாட்டிய
எமது அன்பின் குல விளக்கே
அவனிதனில்
எமை விட்டுப் பிரிந்து
பதினாறாண்டுகள் ஆகிவிட்டன
ஆனால் நீர் எம் மனதைவிட்டு
என்றுமே நீங்கவில்லை.

தோற்றம் 29.02.1929 — மறைவு 2002.07.23

அண்ணாமலை வீதி, சுதுமலை. **குடும்பத்தினர்.**

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திக்கிரியை அழைப்பும்

அன்னை மடியில் 16 . 07 . 2001



ஆண்டவன் அடியில் 04 . 08 . 2017

**செல்வன் தயாபரன் அனித்திரன்**

திதி : பூர்வபக்க துவாதசி (24.07.2018 செவ்வாய்)

நித்தியமே என நினைத்த வாழ்வுதனில்
அநித்தியமாய் ஆகிவிட்ட அனித்திரனே!
பனித்துளியாய் ஆனதேனோ பதினாறாண்டு
இனித் துயரால் இருந்தேங்கும் எம்மவரை எண்ணிப்பார்
கனிமொழியும் கவினழகும் காண்பதற்குக் காத்திருப்போம்
மனித உடல் தாங்கி நீயும் மண் மீது வந்திடுவாய்
நந்தா விளக்கே நலமுற நற்கனியே!
குந்தாவின் குலவிளக்கே கூடிநின்று கூப்பிடுவோம்
செந்தாமரைப்பூவே சிரித்த செவ்விதழழகே
பிந்தாமல் வந்திங்கு பிதற்றுதலைத் தீர்த்திடுவாய்

எமது அன்புப் புதல்வனின் முதலாம் ஆண்டு நினைவுதினம் நாளை (24.07.2018) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னா ரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின் றோம்.

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. **குடும்பத்தினர்.**
(ACO/325/15/17)

தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்

# வடக்குப் பெண்கள் இரண்டாவது இடம்




யாழ்ப்பாணம், ஜூலை 23

44ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் வடமாகாணப் பெண்கள் அணி இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

யாழ்ப்பாணம் பழைய பூங்கா கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று மாலை நடைபெற்ற இறுதியாட்டத்தில் வடமாகாணப் பெண்கள் அணியை எதிர்த்து மேல்மாகாணப் பெண்கள் அணி மோதியது. நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது கால்பாதியை 11:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது மேல்மாகாண அணி. இரண்டாவது கால்பாதி 18:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வடக்கு மாகாண அணியிடம் சென்றது. முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா 27 புள்ளிகளைப் பெற்றிருந்தன.

மூன்றாவது கால்பாதியை 19:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது மேல்மாகாண அணி. நான்காவது கால்பாதி 16:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வடமாகாண அணியிடம் சென்றது. ஒட்டு மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் 61:58 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது மேல்மாகாண அணி. வடக்கு மாகாண அணிக்கு இரண்டாவது இடம் கிடைத்தது. (ம)



## யாழ்ப்பாணம் இந்து கராத்தேயில் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண கராத்தே தொடரில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியைப் பிரதிநிதித்துவம் எஸ்.பிரணவன் தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்தார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தப் போட்டியில் 1415 வயதினருக்கான 60 கிலோ எடைப்பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியை பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பிரணவன் குமித்தேயில் தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)

தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்

## வடக்கு ஆண்கள் அணிக்கு கிடைத்தது மூன்றாம் இடம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

44ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் வடக்குமாகாண அணிக்கு மூன்றாம் இடம் கிடைத்தது. பழையபூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான முன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வடக்கு மாகாண அணியை எதிர்த்து மத்திய மாகாண அணி மோதியது.

நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் கால் பாதியில் 18:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது வடக்குமாகாண அணி. இரண்டாவது கால்பாதியில் இரண்டு அணிகளும் தலா 8 புள்ளிகளைப் பெற்றன. முதல் பாதியின் முடிவில் 26:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது வடமாகாண அணி.

மூன்றாவது கால் பாதியில் 11:07 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை பெற்றது வடமாகாண அணி. நான்காவது கால்பாதியும் 19:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வடமாகாண அணியிடம் சென்றது. முடிவில் அந்த அணி 56:41 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (ம-23)

## ரிங்கோ ரைட்ரென்ஸ் வென்றது

யாழ்ப்பாணம் ஜூலை23

வடக்கு-கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரிங்கோ ரைட்ரென்ஸ் அணி வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு இரவு 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டக்களப்பு சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்த்து ரிங்கோ ரைட்ரென்ஸ் அணி மோதியது. 3:2 என்ற கோல் கணக்கில் ரைட்ரென்ஸ் அணி வென்றது. (ம-23)




## வென்றது சித்திவிநாயகர்

யாழ்ப்பாணம், ஜூலை 23

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக்கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

சண்டிலிப்பாய் வசந்தசிறி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7.15 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்திவிநாயகர்; விளையாட்டுக் கழக அணி மோதியது. 4:2 என்ற கோல் கணக்கில் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகம் வென்றது. (ம-23)

## சிவகுமரன் இறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஜூலை 23

புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் சிவகுமரன் ஏ அணி இறுதிக்குத் தகுதிபெற்றது. புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து வரணி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்[illegible] சிவகுமரன் அணி. (ம-23)

## வென்றது பீனிக்ஸ்

யாழ்ப்பாணம், ஜூலை 23

வடக்கு - கிழக்கு பிறிமியர் லீக் கால்பந்தாட்ட தொடரில் நேற்றுமுன்தினம் [illegible]பெற்ற ஆட்டத்தில் முல்லை [illegible]ஸ் அணி வெற்றிபெற்றது.

[illegible]ப்பாணம் துரையப்பா விளை[illegible]டு மைதானத்தில் நேற்றுமுன்தி[illegible] சனிக்கிழமை மாலை 6 [illegible]க்கு இடம்பெற்ற ஆட்டத்தில் முல்லை பீனிக்ஸ் அணியை எதிர்த்து அம்பாறை அவஞ்சர்ஸ் அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் முல்லை பீனிக்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## குணசேகரா விளையாட்டுக் கழகம் இறுதிக்குத் தகுதி


யாழ்ப்பாணம், ஜூலை 23

புத்தூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவர் அரியகுட்டியின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் மின்னொளியிலான ஓவர்கேம் முறையிலான கரப்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி குணசேகரா விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி குணசேகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:1 என்ற செற் கணக்கில் குணசேகரா விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)


# குல்தீப் யாதவில் சச்சின் நம்பிக்கை

"இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் குல்தீப் யாதவ் இந்திய அணியின் வெற்றிக்குப் பெரும் பங்காற்றுவார்" என்று நம்பிக்கை தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின்.
இந்திய அணி இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ரி-20 தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இந்தியா. தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரை 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இங்கிலாந்து.
இதையடுத்து ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி டெஸ்ட் தொடர் ஆரம்பமாகிறது. இந்த நிலையில் இந்தத் தொடரில் குல்தீப் யாதவ் இந்தியாவின் வெற்றிக்குப் பெரியளவில் பங்களிப்புச் செய்வார் என்று நம்பிக்கை தெரிவித்தார் சச்சின்.
"ஒரு நாள் தொடரில் குல்தீப் யாதவின் சுழற்பந்து வீச்சை இங்கிலாந்தின் ஜோ ரூட் திறம்படக் கையாண்டார். அவரது மணிக்கட்டு சுழற்சியைத் துல்லியமாகக் கணித்து அதற்கு ஏற்ப விளையாடினார். அவரைப் போல் ஏனைய இங்கிலாந்து வீரர்களால் குல்தீப்பின் சுழலைச் சமாளிக்க முடியும் என்று நினைக்கவில்லை.
பெரும்பாலான வீரர்கள் நிச்சயம் தடுமாறுவார்கள். ஆடுகளம் வெயிலால் நன்கு காயும் போது குல்தீப் யாதவால் தாக்கத்தை ஏற்படுத்த முடியும். ஆடுகளம் துடுப்பாட்டத்துக்கு ஏதுவாக உலர்ந்து காணப்பட்டால் இந்தியா வெற்றிபெற நல்ல வாய்ப்பு உள்ளது. ஆனால், ஆடுகளத்தில் நிறைய புற்கள் இருந்தால் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர்கள் அச்சுறுத்தலாக இருப்பார்கள். இந்திய வேகப்பந்து வீச்சாளர் புவனேஷ்வர்குமார், பந்தை நன்கு திரும்பச் செய்யக்கூடியவர். அவர் காயத்தால் அவதிப்படுவது இந்தியாவுக்கு உண்மையிலேயே மிகப்பெரிய பின்னடைவாகும்" என்று சச்சின் மேலும் தெரிவித்தார்.

(ம)



# வெற்றிக்கு அருகில் உள்ளது இலங்கை



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிக்கு அருகில் உள்ளது இலங்கை அணி. இந்த ஆட்டத்தில் இலங்கை அணி வெற்றி பெறுவதற்கு இன்னும் 5 இலக்குகளும், தென்னாபிரிக்க அணி வெற்றிபெறுவதற்கு இன்னும் 351 ஓட்டங்களும் தேவை என்கிற நிலை உள்ளது.
கொழும்பில் இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 338 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தனஞ்சய 60 ஓட்டங்களையும், குணதிலக 57 ஓட்டங்களையும், கருணா ரத்ன 53 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மகாராஜ் 9 இலக்குகளையும், ரபாடா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குத் தனது இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி காலியில் எதிர்கொண்ட தடுமாற்றத்தைப் போன்று கொழும்பிலும் தடுமாறியது. 124 ஓட்டங்களில் தென்னாபிரிக்கா சகல இலக்குகளையும் இழந்தது. அணித் தலைவர் பிளாசிஸ் 48 ஓட்டங்களையும், குயின்டன் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தனஞ்சய 5 இலக்குகளையும், டில்ருவான் 4 இலக்குகளையும், கேரத் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி 5 இலக்குகளை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது. கருணாரத்ன 85 ஓட்டங்களையும், மத்தியூஸ் 71 ஓட்டங்களையும், குணதிலக 61 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் மகாராஜ் 3 இலக்குகளையும், நெக்டி ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
தென்னாபிரிக்காவுக்கு இலக்காக 490 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. சுழலுக்கு சாதகமான ஆடுகளத்தில் இது இமாலய இலக்கே. தென்னாபிரிக்க அணி நேற்றைய நாள் முடிவில் 5 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

(ம)

# ரகுமானுக்குத் தடை

ஐ.பி.எல். உள்ளிட்ட வெளிநாட்டு ரி-20 லீக்குகளில் விளையாடுவதற்கு ரகுமானுக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிப்பதற்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது.
சமீபத்தில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடரில் மும்பைக்காக விளையாடியபோது ரகுமான் காயமடைந்தார். இதனால் அவர் சமீபத்தில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான அணியில் இடம்பெறவில்லை. இதனால் பங்களாதேஷ் அணி தொடரை 0:2 என்ற அடிப்படையில் இழந்தது. உலகக்கிண்ணத் தொடர் உள்ளிட்ட முக்கிய தொடர்கள் இனி வரவிருப்பதால் அணியின் நன்மையைக் கருத்தில்கொண்டு ரகுமானுக்கு 2 ஆண்டுகள் வெளிநாட்டு லீக்குகளில் விளையாடத் தடை விதிக்க பரிசீலித்து வருகிறது பங்களாதேஷ் கிரிக்கெட் சபை.

(ம)



# மகாராஜ் சாதனை

ஓர் இன்னிங்ஸில் அதிக இலக்குகளைக் கைப்பற்றிய தென்னாபிரிக்க வீரர் என்ற சாதனையைப் படைத்தார் மகாராஜ்.
இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் மகாராஜ் 9 இலக்குகளைக் கைப்பற்றினார். இதையடுத்தே இந்த அரிய சாதனைக்குச் சொந்தக்காரர் ஆனார் மகாராஜ். 1957ஆம் ஆண்டு ஹக் டெய்பீல்ட் என்ற தென்னாபிரிக்க வீரர் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தில் இவ்வாறு 9 இலக்குகளைச் சாய்த்திருந்தார். இந்த அடைவை தற்போது சமன்செய்தார் மகாராஜ்.

(ம)

# தண்டம் செலுத்தித் தப்பித்தார் ரொனால்டோ

போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட் கழகத்தின் நட்சத்திர வீரருமான ரொனால்டோ, வரி ஏய்ப்பு வழக்கில் தண்டம் செலுத்தி சிறைத் தண்டனையில் இருந்து தப்பித்தார்.
மன்செஸ்டர் யுனைற்ரெட் கழகத்துக்காக விளையாடிவந்த ரொனால்டோ, கடந்த 2009ஆம் ஆண்டு இங்கிலாந்தின் மன்செஸ்டர் கழகத்தில் இருந்து ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். ரியல் மட்ரிட் கழகத்துக்காக விளையாடி காலத்தில் தனது ஒளிப்பட உரிமையின் மூலம் பல மில்லியன் கணக்கில் சம்பாதித்தார். ஆனால் அவர் முறையான வருமானத்தைக் காட்டாமல் வரி ஏய்ப்பில் ஈடுபட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டது. 12.1 மில்லியன் பவுண்டுகள் ரொனால்டோ வரி ஏய்ப்புச் செய்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் அம்பலப்படுத்தின. இது நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரொனால்டோவுக்கு 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.
ஆனால் வரி ஏய்ப்புச் செய்த தொகையையும் வழக்கு நடத்துவதற்குச் செலவான தொகையையும் கட்டினால் சிறைத் தண்டனையைத் தவிர்க்கக்கூடிய முறையும் இருந்தது. இதையடுத்து ஒட்டுமொத்தமாக 16.8 மில்லியன் பவுண்டுகளை தண்டமாகச் செலுத்தி சிறைத் தண்டனையைத் தவிர்த்தார் ரொனால்டோ.

(ம)






**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.

**021 222 6113**

**ANNUAL GENERAL MEETING 2018**
**OLD BOY'S ASSOCIATION OF ST.PATRICK'S COLLEGE**

It is hereby informed that, our AGM will be held on 29th **July** Sunday at 10.00 a.m at Maduram Square hall St.Patrick's College. We welcome all Patrician's to this meeting. Please confirm your participation on or before **27th of July** to Social Secretary or Assistant Secretary on following numbers

**Assistant Secretary, OBA / St.Patrick's College.** 077 618 3102, 077 360 8642

(CS/18451(11))

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### செல்லத்துரை பாக்கியம் (கிளி)



தோற்றம்
20.09.1948

மறைவு
15.08.2016

பாசத்தின் உறைவிடமாய்
- பண்பின் சிகரமாய்
பாசத்தால் அரவணைத்து
- வழிகாட்டிய எங்கள் அம்மாவே!
உங்கள் நினைவுகளில்
- வாழ்கின்றோம் அம்மா....!

**குடும்பத்தினர்**
**இல.30, மன்னார் வீதி,**
**6 ஆம், ஒழுங்கை,**
**வேப்பம்குளம், வவுனியா.**

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240
**V2 TRAVELS**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## BA (பழைய பாடத்திட்டம்)
### பேராதனை பல்கலைக்கழகம்
(வெளிவாரி)

- கடந்த எந்த வருடத்திலாவது முதற்கலை தேர்வு (G.A.Q.) சித்தி அடைந்தவர்களும், கலைமாணி (B.A) பரீட்சை எழுதி சித்தி அடையாதவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
- பதிவினை புதுப்பித்தலுக்கான இறுதித்திகதி 25/07/2018
- எமது நிறுவனத்தினூடாக பதிவினை புதுப்பித்தலுக்கான விண்ணப்பங்களை விண்ணப்பிக்க முடியும்.
- கலைமாணி (B.A.)க்கான பரீட்சைகள் மார்க்கமாகவும் நடைபெறும்.
- விரிவுரைகள் ஆரம்பம்: 28.07.2018 காலை (9.00)

**குறிப்பு** : B.A. பழையபாடத்திற்கான பதிவினை புதிப்பித்தல் மேற்கொள்வது இதுவே இறுதி எனவும் இதற்குப்பின் எக் காரணம் கொண்டும் புதுப்பித்தல் நடைபெறாது என்பதனை பல்கலைக் கழகம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

விவரங்களுக்கு : **S. அருள்நங்கை. நிர்வாகி**
**புதிய உயர் கல்லூரி,**
**ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.**
**021 222 8148, 077 846 9721**

(CS 7344/15)

## விற்பனைக்கு

யாழ். கஸ்தூரியார் வீதியில் யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் 2 1/2 பரப்பு காணித் துண்டும் 3 பரப்பு காணித் துண்டும் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பூபால சிங்கம் புத்தகசாலைக்கு முன்பாக இரு கடைகளும் பஸ்தரிப்பிடத் திற்கு முன்பாக இரு கடைகளும் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 723 2535**

(CS 18459/15)

யாழ். அத்தியடி ஸ்ரீ சதுரமர நடராஜ வரசித்திப் பிள்ளையார் கோயில்

## குருக்கள் தேவை

மேற்படி ஆலயத்தின் தற்போதைய குருக்கள் வெளிநாடு செல்ல இருப்பதால் எதிர்வரும் முதலாம் திகதி (ஆவணி முதலாம் திகதி) தொடக்கம் எமது ஆலயத்திற்கு நித்தியபூசை ஆற்றுவதற்கு பூசகர் தேவை. விண்ணப்பங்களை சுயவிவரக்கோவையுடன் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ இம்மாதம் 28 ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் படி அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆலய பணியில் பரிபாலன சபையினர்.**
**தொடர்பு - 021 222 9464**

**ES Printers** **357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.